பக்கங்கள்: முப்பத்தியிரண்டு+VIII=40

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 21 ஞாயிற்றுக்கிழமை (04.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 129

# எமது விடிவை நிர்ணயிக்கும் தேர்தல் இது; சிந்தித்துக் கவனத்துடன் வாக்களியுங்கள்!

## ஏனோ தானோ என்றிருக்காதீர் என்கிறார் யாழ்.ஆயர்



யாழ்ப்பாணம்,ஏப்ரல்4

இன்னும் நான்கு நாள்களில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தமிழர்களின் விடிவை நிர்ணயிக்க உள்ளது. ஆகையால் ஏனோ தானோ என்று இருக்காமல் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து சிந்தித் துக் கவனத்துடன் வாக்களியுங்கள். அதன் மூலம் எமது எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்வோம்.

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

(27ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகள் தேர்தலின் பின்னர்

கொழும்பு,ஏப்.4

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்புக்குப் பின்னர் வெளியிடப் படும். இதற்கான நடவடிக்கைகளை பரீட் சைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

பெறுபேறுகள் எதிர்வரும் 9ஆம் திகதி அல்லது 10ஆம் திகதி வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பெறு பேறுகள் தபாலிடப்பட்டதன் பின்னரே இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்யப் படும் என்றும் பெறுபேறுகளை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவ டையும் தறுவாயில் இருக்கின்றன என்றும் திணைக்களம் தெரிவித்தது. (அ-1)

## தமிழ்க் கூட்டமைப்பின் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை எவரும் கட்டுப்படுத்த முடியாது

### கோத்தபாயவுக்கு அரியநேத்திரன் பதிலடி

மட்டக்களப்பு,ஏப்.4

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஜன நாய ரீதியிலான போராட்டத்தை எவரும் கட்டுப்படுத்த முடியாது. அந்தப் போராட் டத்தை நாம் கைவிடப்போவதுமில்லை.

இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு பதிலடி கொடுத்திருக்கிறார் தமிழ்த்தேசியக் கூட் டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட் பாளர் பா.அரியநேந்திரன்.

இது குறித்து அவர்மேலும் தெரிவித்த தாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆயுதம்

(27ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரிஷார்ட் பதியுதீனின் மன்னார் அலுவலகம் நேற்று மாலை தாக்கப்பட்டது!

மன்னார் ஏப்.4

மன்னார், உப்புக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அமைச்சர் ரிஷார்ட் பதியுதீனின் அலுவலகம் நேற்று மாலை 6.45 மணியளவில் தாக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற் றிரவு மன்னாரில் பதற்ற நிலை தோன்றி யிருந்தது. உப்புக்குளம் பகுதியில் நூற்றுக் கணக்கான பொலிஸார் குவிக்கப்பட் டனர். அப்பகுதியில் ரிஷார்ட் பதியுதீனின்

(28ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' அதிபரை அவதூறு செய்யும் பிரசுரங்களை விநியோகிக்கத் திட்டம்!

### இயக்கப்பாணி அரசியல் கட்சி கைவரிசை

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணப வனைத் திட்டமிட்டு அகௌரவப்படுத்தி அவதூறு செய்யும் துண்டுப் பிரசுரங்களை யாழ்ப்பாணத்தில் இயக்கம் போல செயற் படும் கட்சி ஒன்று அச்சிட்டு விநியோகிப் பதற்குத் தயாராக வைத்திருப்பதாகத் தக வல்கள் வெளியாகியிருக்கின்றன.

கொழும்பில் அரசியல் அடாவடித் தனங் களில் அதிகம் (28ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மகேசன் விபத்தில் பலியானார்

மட்டக்களப்பு, ஏப்.4

மட்டக்களப்பில் முன்னாள் அமைச்சர் அமீர் அலியின் பாதுகாப்பு வாகனம் மோதி யதால் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரை யாளர் ஏகாம்பரம் மகேஸ்வரன் நேற்று மாலை பலியானார்.

மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான அமீர் அலி தனது தேர்தல் பரப்புரைக்காக மட்டக்களப்பு - திருகோணமலை வீதியால் பயணித்தபோது,

(28ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி: நாளை நள்ளிரவுடன் பிரசாரங்கள் முடிவு

### யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் கணேஷ் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக் கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நாளை திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவுக்கு வரும் என்றும், தேர் தல் பெறுபேறுகள் வெளியான பின்னர் ஒரு வாரத்திற்குப் பொதுக் கூட்டங்கள், ஊர்வ லங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது என்றும் யாழ். மாவட்டத் தேர் தல் தெரிவத்தாட்சி அலுவலர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன என் றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெற வுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர் பாக யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்

(27ஆம் பக்கம் பார்க்க)

பொதுத் தேர்தல் - 2010 தேர்தல் மாவட்டம் - யாழ்ப்பாணம்.

வளமான வாழ்வுக்கு சமாதான சக வாழ்வு

இலங்கையை ஆசியாவின் அதிசயம் ஆக்குவோம்

கிருஷ்ணபிள்ளை ஸ்ரீ சரவணபவான்

சட்டத்தரணி

X 7





நீண்ட காலம் நீடித்துழைக்கும் சீமெந்து

- போசலானா சீமெந்து உறுதி மக்கது, நீண்டகாலம் நீடித்துழைக்கும்.
- இலங்கையில் SLS 1247 தரத்துடன் உற்பத்தி செய்யப்படும் ஒரே சீமெந்து டோக்யோ சுப்பர் போசலானா மட்டுமே.
- சதுப்பு நிலங்கள், கடற்கரை ஓரங்கள், கடல் சார்ந்த கட்டுமானப் பணிகள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள் மற்றும் பாரிய கொங்கிறீட் வேலைகளுக்கு மிகவும் ஏற்றது.

டோக்யோ சுப்பர் போசலானா - நீண்டகாலம் நிலைத்திருக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் 27.03.2010இல் பட்டமளிப்பு விழாவில் முகாமைத்துவம் (F.M.S.) தொழில் நிர்வாக மாணிப் பட்டம் பெற்ற

**திரு. வேலாயுதம் ரசிகரன்**

அவர்களை பல்கலையும் பெற்று சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பற்றிமா றோட், பண்டத்தரிப்பு. (96397) வாழ்த்துவோர்: **அசோக்**

# சைக்கிளோட்ட பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.04

குடாநாட்டில் 52 ஆவது படையணியினரால் நடத்தப்பட்டு வந்த ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பும் இன்று இடம்பெறவுள்ளன.

இன்று காலை 6 மணிமுதல் போட்டி இடம்பெற்று மாலை 6 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு துரையப்பா விளையாட்டரங்கு 'கன்ரீனு'க்கு முன் பாக நடைபெறும்.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி துரையப்பா விளையாட்டரங்கைச் சுற்றி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 6 மணிமுதல் இடம்பெற்று மாலை 5 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு அதேயிடத்தில் நடைபெறும். (ஓ-1)

## விரிவுரைகள் இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.04

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு பீடத்தில் இடம்பெற்றுவரும் முதுகலைமாணி, பொதுநிர்வாகம், முதுகலைமாணி கலாசாரம் ஆகிய கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று இடம்பெற மாட்டாது என்று பீடாதிபதி அறிவித்துள்ளார். (ஓ-1)

## Personal Class

புலமைப்பரிசில் தரம் - 5, தரம் - 04 (2010)

- பரீட்சை வழிகாட்டி விடயங்கள்
- மாதிரி வினாப்பத்திரங்கள்

உங்கள் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- T.P. 0774006948
(மாலை 7.00 பின் தொடர்பு கொள்க)

## உடன் விற்பனைக்கு

ஆலை (மில்) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778034218

## வீடு வாடகைக்கு

கந்தர்மடம் அம்மன் வீதியில் நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு வீடு நாளாந்த அடிப்படையில் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0779045043

## AVT மெடிக் கிளினிக்

45, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
**யாழ். - கொழும்பு**
சொகுசு பஸ் பதிவு செய்யப்படும்.
T.P.: 021 222 8965

## வாடகைக்குண்டு

இல. 187, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில், 25 அடி அகலம் கொண்ட 2 மாடி புத்தம் புதிய கட்டடம் வாடகைக்குண்டு. NGO, Hotel, உல்லாச விடுதி, மெடிக்கிளினிக், வியாபார நிலையம் போன்றவற்றுக்கு உகந்தது.
தொடர்பு: T.P. 0727768835

## பெண் சமையல் ஆள் தேவை

நன்கு சமையல் செய்யத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை. சுண்டிக்குளிப்பகுதியைச் சேர்ந்தவர் விரும்பத்தக்கது.
75, கண்டி வீதி, சுண்டுக்குளி.
0772250366, 0777706461


## வேலையாள் தேவை

குளிர்பான நிறுவனத்துக்கு விற்பனை பிரதிநிதிகள் (DSR) தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

**205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(நடனமுருகன் முன்பாக)**

(96376)

## சுரேஷ் க. பிறேமச்சந்திரன்



**எம் மண்ணில் நாம் வாழ, எம் மண்ணை நாம் ஆள தளராது குரல் கொடுப்போம்.**

X 3

இலங்கை தமிழரசுக் கட்சி
தமிழ் தேசியக் கூட்டமைப்பு

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் அருளரசன் அவர்களின் அன்புத் தந்தை


**கந்தையா தர்மராசா**

(இளைப்பாறிய ஆசிரியர், சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை)

அவர்களின் மரணச்செய்திகேட்டு துயர்கொள்கின்றோம். அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய். (சி/566426) கல்லூரிச் சமூகம்.

## இலங்கையில் முதற்தரமான தொழில்நுட்பத்துடன் தானியங்கள் அரைக்கும், உடைக்கும் இயந்திரங்களையும் தொழில்சார் உபகரணங்களையும் உற்பத்தி செய்யும் உதயா இன்டஸ்றீஸ் உற்பத்திப்பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக முகவர்:
**ஆர்க் என்ரபிறைசஸ்**
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2052, Fax 021 222 4021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## 'போஸ்டர்' கலாசாரத்தின் ஊடாக கட்டவிழும் பொறுக்கித்தன அரசியல்

பொதுத்தேர்தல் என்றால் 'சுவரொட்டித் திருவிழா' என்று கூறும் அளவுக்கு 'போஸ்டர் கலாசாரம்' நமது சமூகத்தில் ஊடுருவி விட்டது. போஸ்டர் இன்றிப் பொதுத் தேர்தல் இல்லை என்றாகி விட்டது.

தேர்தல் கூட்டங்களைப் பொறுத்தவரை பத்திரிகைகளில் விளம்பரங்களைப் பிரசுரிக்கலாம். பிரசாரத் துண்டுப் பிரசுரங்களை மக்களிடம் விநியோகிக்கலாம். ஆனால் சுவரொட்டிகளை ஒட்டக் கூடாது. 'கட் - அவுட்' டுகளை வைக்கக் கூடாது. பதாகைகளை கட்டக் கூடாது.

இது போன்ற நடவடிக்கைகள் சட்டத்தினாலேயே தடைசெய்யப்பட்ட விடயங்கள்.

ஆனால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்புள்ள பொலிஸாரின் ஸ்தானங்களான பொலிஸ் நிலையங்களின் முன்றிலிலேயே சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. பாரிய கட் - அவுட்டுகள் வைக்கப்படுகின்றன. பெரிய, பெரிய பதாகைகள் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. அவ்வளவுக்குப் 'போஸ்டர் கலாசாரம்' நம் மத்தியில் ஊடுருவி விட்டது. தேர்தலின் இன்றியமையாத - பிரிக்க முடியாத - அங்கமாக அது மாறியே விட்டது.

ஆனால் அந்தப் 'போஸ்டர் கலாசாரத்தின் மத்தியில் ஒரு பொறுக்கிக் கலாசாரமும் ஊடுருவி நிற்பதுதான் வேதனை மிகுந்த விவகாரமாகும்.

இந்தத் தேர்தல் சமயத்தில் வேறு யாருடைய 'போஸ்டர்' ஒட்டப்பட்டாலும் அது ஒட்டிய பசை காயமுன்னரே அதனை மூடி தங்கள் இயக்கப் பிரகிருதியின் போஸ்டரை ஒட்டும் அடாவடித்தன - சண்டித்தன - பாங்கு சுவரொட்டிக் கல்சாரம் ஒன்றும் குடாநாட்டில் கட்டவிழ்வதைக் காணமுடிகின்றது.

அது மாத்திரமல்ல, பிறகட்சிகளினதும் அணிகளினதும் போஸ்டர்களை ஒட்டுபவர்களை இலக்கு வைத்துத் தாக்குவது, அவர்களை அச்சுறுத்துவது, மிரட்டி அந்தப் பணிக்கு வராமல் பண்ணுவது என்று அராஜக அதிகாரத்தனமும் குடாநாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றமை பெரும் வேதனையான விடயமாகும்.

ஆயுதம் தாங்கிய குழுவின் 'இயக்கப் பாணி' அரசியலுக்குத் தொடர்ந்தும் அதிகாரத் தரப்பும், மக்களும், சமூகமும் அனுமதித்திருப்பதே இந்த அச்சுறுத்தல் அடாவடித்தனம் தொடர்கின்றமைக்குப் பிரதான காரணம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அரசுத் தரப்பின் - ஜனாதிபதியின் - நேரடி வேட்பாளரே வீதிக்கு இறங்க முடியாத நிலைமைக்கு இந்த இயக்கப்பாணி அரசியல் அதிகாரம் அல்லது அடாவடித்தனம் வரம்பு மீறித் தொடர்வது குடாநாட்டு மக்களின் துரதிஷ்டமின்றி வேறில்லை.

'போஸ்டர்' விவகாரத்தில் பொறுக்கித் தனத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்காகவே சில நூறு பேரையும் லொறிகள் உட்பட வாகனங்களையும் இந்தக் குழுவினர் தமது முகாம்களில் இரவு - பகல் பாராமல் நிரந்தரமாகத் தயார் நிலையில் வைத்திருக்கின்றமை அவர்களது அராஜக அரசியலின் மற்றொரு பரிமாணமாகும்.

இந்த ஆளணிக்கு தண்ணீரும், அவர்களின் வாகனங்களுக்கு பெற்றோல், டீசலும் தாராளமாகத் தங்கு தடையின்றி வார்க்கப்படுகின்றமை மற்றொரு விவகாரமாகும்.

இத்தகைய ஆயுதக் குழுவினரின் அத்துமீறிய போக்குக்குத் தொடர்ந்தும் அனுமதியளிப்பது குடாநாட்டில் நீதியான பொதுத் தேர்தலுக்கு உதவமாட்டாது என்பது நிச்சயம்.

சாவகச்சேரியில் கப்பம் கேட்டுக் கடத்தப்பட்ட மாணவன் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டமை, ஜனாதிபதியின் நேரடியான வேட்பாளராகக் களமிறக்கப்பட்ட இளைஞரே பிரசாரத்துக்கு வீதிக்கு இறங்குவது ஆபத்தானது என்ற நிலைமை நீடிப்பது, பிற கட்சியினரின் பிரசார வாகனங்கள் இலக்கு வைக்கப்படுகின்றமை, தீவகத்துக்கு பிறகட்சியினர் சென்று தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவது யமனின் வயிற்றுக்குள் போய் மீளும் பணி போன்று பேராபத்தாக அமைந்திருப்பது போன்றவை எல்லாம் இந்தப் பரிமாணத்தின் வெளிப்பாடான பிற தெளிப்புகளே.

இயக்கப்பாணி நடவடிக்கைகளில் ஈடுபட்ட தரப்பினரை உளவள ஆற்றுப் படுத்துகைக்கு உட்படுத்தாமல், புனர் வாழ்வுக்கான நற்கரும பயிற்சிகளில் ஈடுபடுத்தாமல், அப்படியே ஜனநாயக அரசியலில் நேரடியாகப் பங்கேற்க இடமளித்திருப்பதே இந்த வினைக்குக் காரணம்.

தமது இயக்கப்பாணி நடவடிக்கைகளையும், போக்கையும் அவர்கள் ஜனநாயக அரசியலிலும் - தேர்தல் நடவடிக்கைகளிலும் - நேரடியாகவே காட்ட முற்படுகின்றார்கள்.

இத்தகைய பொறுக்கித்தனத்தின் உச்சமாக மற்றொரு போக்கிரித்தனமான வேலைக்கும் இக்குழுவினர் தயாராகியிருக்கின்றனர் என்ற தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

தங்களின் வண்டவாளங்களை அம்பலப்படுத்தும் எதிர்த்தரப்பு வேட்பாளர்களை - பிரமுகர்களை - அகௌரவப்படுத்தி, கேவலப்படுத்தி, தூற்றி, அவமரியாதைக்குள்ளாக்கும் விதத்தில், கொட்டிக் கொட்டிப் பொய்களைக் குவித்துத் துண்டுப் பிரசுரங்களை அநாமதேய வரிசையில் தேர்தலுக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெளியிடும் கைங்கரியத்துக்கு இந்தச் சமூகவிரோதக் குழு தயாராகி இருப்பதாகக் கூறப்படுகின்றது. இதற்காக - ஒரே சமயத்தில் விநியோகிப்பதற்காக - பல லட்சம் துண்டுப் பிரசுரங்களையும் இக்குழுவினர் அச்சிட்டு வைத்திருக்கின்றார்கள் எனவும் தெரிகின்றது.

இத்தகைய வன்முறைக் கும்பலின் அட்டகாசத்துக்கு அனுமதித்துக் கொண்டு நீதியான - நியாயமான - தேர்தல் குறித்துப் பேசுவது அர்த்தமற்றதே.

# குடாநாட்டில் மாறியுள்ள தேர்தல் கலாசாரம்; ஒரே கூடாரத்திலேயே குத்துவெட்டுகள்!

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் நான்கு நாள்களே உள்ளன. வேட்பாளர் பெருமக்களின் கனவுகள் நனவாகும் நாள்கள் வெகு தூரத்தில் இல்லை.

இலங்கையில் மட்டுமல்ல சர்வதேசத்தின் கவனத்தையும் அதிகம் ஈர்த்துள்ள தேர்தலாக இந்தத் தேர்தல் அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை எட்டுவதற்கான முதற்படியாகவும் - அந்தத் தீர்வை வலியுறுத்தப்போகும் தமிழ் மக்களின் தலைமைகளைத் தீர்மானிக்கும் தேர்தலாகவும் இந்தத் தேர்தல் நோக்கப்படுகின்றது.

மிக முக்கியமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக - அவர்களின் உண்மை விம்பங்களாக நாடாளுமன்

## சுயேச்சைக் குழுக்களும் விட்டுக்கொடுப்பதாக இல்லை

றத்துக்குள் அடியெடுத்து வைக்கப் போகின்றவர்கள் யார்? என்பதை நிர்ணயிக்கும் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த தேர்தலாகவும் இது அனைவராலும் நோக்கப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாக வடக்கு - கிழக்கு உட்பட இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய துன்ப துயரங்கள் - அழிவுகள் என்பவற்றுக்கு சரியான படிப்பினையை வழங்கும் தேர்தலாகவும், தமிழர்களுக்கு எதிராக சிங்களப் பேரினவதத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்ட கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், காணாமல்போதல் போன்ற ஈனச் செயல்களுக்கு துணைபோன ஒட்டுக் குழுக்கக்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கப் போகும் தேர்தலாகவும் இந்தத் தேர்தல் தமிழ் மக்களால் நோக்கப்படுகின்றது.

தேர்தலுக்கு இன்னும் நான்கு நாள்களே உள்ள நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் இப்போதுதான் சூடு பிடித்திருக்கின்றது. தேர்தல் சுவரொட்டிகள் இல்லாத மதில்களோ, மின் கம்பங்களோ இல்லை என்று சொல்லும் அளவுக்கு இம்முறை தேர்தல் பிரசாரம் சக்கைபோடு போடுகின்றது. பார்க்கும் இடம் எல்லாம் சுட்டு விரலை உயர்த்திக் கொண்டு பட்டு வேட்டி சால்வையுடன் பகட்டாக 'போஸ்' கொடுக்கும் வேட்பாளர்களின் 'போஸ்டர்கள்' கண்ணைப் பறிக்கின்றன. முக்கிய சந்திகள், மூலை முடுக்குகள் எங்கும் வேட்பாளர்களின் ஆள்உயரக் 'கட்டவுட்'டுக்களுக்குப் பஞ்சமில்லை. பச்சிளங்குழந்தைகள் முதல் பாடசாலை மாணவர்கள் வரை அனைவரது கைகளிலும் வேட்பாளர்களின் பஞ்சவர்ண நாள்காட்டிகளை சர்வ சாதாரணமாகக் காணமுடிகின்றது.

அரசியல் கட்சிகளுக்கு எந்த விதத்திலும் நாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கும் அளவுக்கு தேர்தல் களத்தில் போட்டியிடும் சுயேச்சைக்குழுக்கள் ஒட்டும் சுவரொட்டிகள், வெளியிடும் துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகளில் பிரசுரிக்கும் விளம்பரங்கள் அப்பாடா!! அளவே இல்லை.

யாழ்ப்பாணத் தேர்தல் களத்தில் இம்முறை என்றுமில்லாத அதிசயமும் ஒன்றுள்ளது. ஒன்பது உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்காக 12 கட்சிகள், 15 சுயேச்சைக் குழுக்கள் உள்ளடங்கலாக 324 வேட்பாளர்கள் களத்தில் இறங்கியிருக்கின்றார்கள். மூலை முடுக்குகள் எல்லாம் சுற்றித்திரியும் அவர்கள் வாக்கு வேட்டையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றமையைக் காண முடிகின்றது.

### வாரி இறைக்கப்படும் பணம்

யாழ்ப்பாணத் தேர்தல் களத்தில் முன் எப்போதும் இல்லாதவாறு இம்முறை பணம் விளையாடுகின்றது. தேர்தல் பிரசாரத்திற்காக அரசியல் கட்சிகள் முதல் சுயேச்சைக் குழுக்கள் வரை செலவு செய்யும் பணத்திற்கு அளவு கணக்கே இல்லை. அந்தளவுக்கு பணம் வாரி இறைக்கப்படுகின்றது. அந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்பது பலருக்கும் தெரிந்த விடயம்.

முகங்களே தெரியாத வேட்பாளர்கள் வீட்டு முற்றங்களுக்கு வந்து தமது வீர வசனங்களை வீசி; வாக்குச் சேகரிக்கும் சம்பவங்கள் நகரப்பகுதி முதல் கிராமப்புறங்கள் வரை எங்கும் அமர்க்களமாக நடந்து வருகின்றன. என்றுமே திரும்பிப் பார்த்திராதவர்கள் வீதியில் நீண்ட தூரங்களுக்குக் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கால் கடுக்க நடந்து, கண்டோரையெல்லாம் கும்பிட்டுச் சிரித்து; சுக துக்கம் விசாரித்து வாக்கு வேட்டையாடும் விசித்திரம் அப்பாப்பா! என்ன அதிசயம் இது.

இது வரை காலமும் சொந்தங்கள், உறவுகள் என்று அறிந்தேயிராதவர்கள் இப்போது வீட்டுப் படிகளில் ஏறி நாங்கள் உங்களுக்கு அந்தவழியில் சொந்தம்; இந்த வழியில் சொந்தம்; என்று கூறிக் காரியத்தைச் சாதிக்கப் படாதபாடுபடும் நிலைமைகளையும் சர்வ சாதாரணமாகக் காண முடிகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரசாரத்தில் அதி உச்சக் கட்டத்தை எட்டியிருக்கின்றது. அந்த உச்சக் கட்டத்தின் வெளிப்பாடாக பிரசாரத்தின் போது கட்சிகளுக்கிடையே மோதல் சம்பவங்களும் மோசமாகத் தலைதூக்கியிருக்கின்றன. தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவதில் இருந்து பிரசாரக் கூட்டங்களை நடத்துவது முதல் அனைத்திலும் அசுர போட்டித் தன்மை இப்போது எழுந்திருக்கின்றது. ஒரு சாரார் தமது சுவரொட்டிகளை ஒட்டிய சூடு ஆறுவதற்கு முன்னர், மறுசாரார் அந்தச் சுவரொட்டிகளுக்கு மேல் தங்களது வித்துவத்தனத்தை காட்டி அவற்றைக் கிழித்தெடுப்பதும், அவற்றுக்கு மேல் தமது சுவரொட்டிகளை ஒட்டுவதும் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்து வருகின்றன.

மற்றுமொரு சிரிப்பான - வெட்கக் கேடான விடயம் என்னவெனில் ஒரே சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் கூட தங்களுக்குள்ளே மோசமாக மோதிக்கொள்வதும், தமது சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வாகனங்களை அடித்து நொருக்கி துவம்சம் செய்வதும், அச்சுறுத்துவதும், நாங்கள் தான் நேரடியான பிரதிநிதிகள் என விளம்பரங்களையும், அறிக்கைகளையும் தனித் தனியே வெளியிடுவதும் என யாழ்ப்பாணத் தேர்தல் களம் ஒரு சேற்றுக் குட்டையாகிவிட்டது. 'அரசியலில் இது எல்லாம் சகஜமப்பா' என்று கூறு வதைப்போல அவர்களின் செய்கை களும் நடத்தைகளும் அமைகின்றன.

ஒரு சில பிரதேசங்களில் தாங்கள்தான் தனிக்காட்டு ராஜாக்கள் என்று சொல்லாமல் சொல்லும் அளவுக்கு ஜனநாயகத்தின் பெயரால் சண்டித்தன அரசியல் நடத்தும் கூட்டத்தினர் அப்பகுதிகளில் வேறெந்தத் தரப்பையும் பிரசாரங்களில் ஈடுபடாமல் அச்சுறுத்தும் சம்பவங்களுக்கும் குறைவில்லை. மீறி அந்த இடங்களில் பிரசாரக் கூட்டங்களை நடத்தும், சுவரொட்டிகளை ஒட்டும் மாற்றுக் கட்சிகளின் ஆதரவாளர்களை தாக்குவதும் மோசமான வார்த்தைப் பிரயோகங்களால் தூஷிப்பதும், அவர்களின் வாகனங்களை அடித்து நொருக்குவதும் என அவர்கள் புரியும் அட்டகாசங்களுக்கு பஞ்சமில்லை என்று சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

### மாறியுள்ள தேர்தல் கலாசாரம்

பிரசாரத்தின் போது விநியோகிக்கப்படும் துண்டுப்பிரசுரங்களை கொண்டுசெல்வதற்குக் கூட மக்கள் ப்பயப்படும் அளவுக்கு நிலைமை எல்லைமீறுகின்றது. மாற்றுக் கட்சிகளின் துண்டுப்பிரசுரங்களை வைத்திருப்பவர்களைக்கூட மிரட்டும் தேர்தல் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் தலை தூக்கியிருக்கின்றது.

இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரம் சற்றேனும் தணியவில்லை. மாறாக மேலும் மேலும் அது உச்சமடைந்தே வருகின்றது. இந்த அடாவடித்தனங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் மாற்றுக் கட்சிகள் அவற்றை வைத்தே தமது தேர்தல் பிரசாரத்தை முடுக்கி விடும் - அனுதாபம் தேடும் நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதும் கண்கூடு.

**- அதிரன் -**

இந்தத் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படும் புதிய தலைமைகளுடனேயே தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேச்சு நடத்தப்போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமையையும் இங்கு சுட்டிக்காட்டியாக வேண்டும். இந்த புதிய தலைமைகள் யார்? என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பும் - கடமையும் யாழ்ப்பாண மக்களின் தலையில் விழுந்திருக்கின்றது. எத்தனை பேர் போட்டியிடுகிறார்கள் என்பது இங்கு முக்கியமல்ல. தமிழினத்தின் விடிவுக்காக - சுயகௌரவத்திற்காக உழைக்கப் போகின்றவர்கள் யார்? என்பதை அறிந்தே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

"தமிழ் மக்கள் முன்னைய தேர்தல்களைப் போல இந்தத் தேர்தலிலும் ஏனோதானோ என்ற மனநிலையோடு நடந்து கொள்ளாமல் தமது விடிவை நிர்ணயிக்கும் முக்கியமான தேர்தல் என்பதைச் சிந்தித்து - போதிய கவனம் செலுத்தி வாக்களிக்க வேண்டும். அதன் மூலம் எமது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வோம்'' என யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது ஈஸ்ரர் தினச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

எனவே மிகவும் தெளிவாகவும் - நிதானமாகவும் சிந்தித்து செயலாற்ற வேண்டிய நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி மக்கள் உள்ளார்கள். எதிர்வரும் 8ஆம் திகதி அவர்கள் அதை திறம் பட்ச் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம். ✱

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 22 | 05.04.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி | : ஸப்தமி |
| | பி.இ. 5.35 வரை |
| நட்சத்திரம் : | மூலம் |
| | மு.இ.12.11 வரை |
| சுபநேரம் | : 12.09-01.39 வரை |
| ராகுகாலம் : | 07.39-09.09 வரை |

இன்னும் 14 நாள்களில்
JAFFNA International 2010 TRADE FAIR
2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்ரர் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



உதயன்
நிர்வாக இயக்குநர்

தொழிலதிபர்
**ஈ.சரவணபவன்**


## அகவை அறுபதில் வாழ்த்துகின்றோம்



### குருசுமுத்து நேசராஜா

*(முன்னாள் விளையாட்டுத்தலைவர், பயிற்றுவிப்பாளர், கோல் காப்பாளர், சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம், நவாலி)*

*எங்கள் விளையாட்டு ஆசான் நேசராஜா*
*என்றும் அவர் இளைய-ராஜா*
*விளையாட்டில் எம்மை ஏணியாய் உயர்த்திய - ராஜா*
*சமூக,சமய பொதுப்பணிகளிலும் எம்மை வழிகாட்டிய -ராஜா..*
*அண்ணை என்று செல்லமாக அழைத்திடுவோம்-எம்மை*
*அணைத்து பெரு வெற்றிகளை பெற்றுத் தந்திடுவார்.*
*அகவை அறுபதில் மனையரசி மக்களோடு*
*அகமகிழ்ந்து நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.*

*சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம், நவாலி.*

*(93373)*


## வேலை வாய்ப்பு

- Account Assistants
- Qualified Electrician With Experience
- Fancy Sales Assistant
- Beauticians for Cosmetic Shop

*இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 முதல் மாலை 4.30 மணிவரை நேர்முகத் தேர்வுக்காக சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.*

**Annai Naaga Food City**
175, K.K.S. Road, Jaffna

(சி/566426)


## மரண அறிவித்தல்

### கணபதி ஜெயகீதா



மானிப்பாய், சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியுமான கணபதி ஜெயகீதா சுவிஸில் அகால மரணமானார்.

அன்னார் கணபதி (ஜெகபதி) -ஜெகசோதி (பட்டு) தம்பதியரின் பாசமிகு இளைய மகளும் கீதாராணி, முகுந்தன், ராஜ்முகுந்தன் ஆகியோரின் அன்பு சகோதரியும் நிலா, துளசியின் பாசமிகு தாயாரும் சுவிஸ் சிசுபாலனின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ஜெகபதி - தொ.பே: 2361998
க.ராசரட்ணம் - தொ.பே: 0212225165

(சி/5661203)


## விற்பனைக்கு

DISCOVER
மோட்டார் சைக்கிள்
MK-XXXX விற்பனைக்குண்டு
T.P. No : 0774836908

## தேவை

யாழ். நகரில் இயங்கும் புடைவை நிறுவனத்துக்கு பழக, பழகிய பெண் வேலையாள்கள் தேவை. தொடர்புகளுக்கு.
தொ.பே: 0772850753

## தேவை

அரைக்கும் ஆலை, மோட்டார் சைக்கிள் திருத்துதல், சுத்திகரிப்பு, ரயர் வேலை என்பவற்றில் அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும் தேவை.
தொடர்பு : பிருந்தா மில்ஸ், N-18, நக்கா றோட், யாழ்ப்பாணம். T.P.- 0772231096

## சமையல் ஆள் தேவை

A grade Resturant ஒன்றிற்கு விருப்பம், அனுபவம், தகுதி உள்ள சமையல் ஆள் தேவை. சுயவிவரக் கோவையை ஒரு வாரத்தினுள் அனுப்பிவைக்கவும்.

தொடர்பு : C/Oஉதயன் 4003,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

தையலில் அனுபவமுள்ள ஆண், பெண் தையற்காரர்கள் கடையில் வேலை செய்வதற்குத் தேவை. சம்பளம் நேரில் பேசிக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு பிரபு தையலகம், நெடியகாடு, வல்வெட்டித்துறை.
T.P. No : 0213215838.

## வாகனம் உடன் விற்பனைக்கு

DAIHATSU Hijet Buddy VAN HS XXXX single owner, 58000 km, Center lock, A/C, Fulloptin orginal paint and tyres, Excellent condition. உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : கொக்குவில் கிழக்கு
0718052281

(96201)

## பிரத்தியேக வகுப்புக்கள்

கணிதபாடம், ஆங்கிலமொழி மூலமும், தமிழ் மொழி மூலமும் அத்துடன் ஆங்கிலப் பாடம் தரம் 6தொடக்கம் தரம் 11வரை இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகரினால் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படுகின்றது.
தொடர்பு 0776419899

## வாடகைக்கு

யாழ்.பிரதான வீதியில் (மக்கள் வங்கிக்கு அருகில்)3000 சதுர அடிகள் கொண்ட வியாபார நிலையத்துக் கேற்ற கட்டடம் உண்டு.

தொடர்பு கொள்ள:-
செயலாளர் - மெதடிஸ்த திருச்சபை
9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
0777737221, 021 2222992

(96360)


## தவறிவிட்டது

கட்டைப்பறிச்சான் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த குலராசா சுபாகரன் என்பவரது தே.அ.அ (871792976V), சாரதி அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதி அட்டை, வரிப்பத்திரம் என்பன பேர்ஸ்சுடன் கொடிகாமத்திற்கும் மீசாலைக்கு மிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் ஐங்கரன் தொலைத் தொடர்பகத்தில் ஒப்படைத்துதவவும் OR T.P- 0773753837

(96365)


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பால் பண்ணைக்கு அருகில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
T.P:- 0113135528


## மரண அறிவித்தல்

### திருமதி ரூபி பத்மாவதி செல்லையா

(இளைப்பாறிய ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி)



காலஞ்சென்ற கிங்ஸ்லி செல்லையாவின் அன்பு மனைவியும் அஜித்குமார்,டிலிந்திரா, டில்குமார், லக்ஷி ஆகியோரின் அன்புத் தாயாரும்,கிறிஷ்மி,கிறிஷ்சாந், அசான், கிறிஸ்டரின், கிறிஸ்சேன் ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் A.F.Raymonds மலர்ச்சாலை பொறளையில் அஞ்சலிக்காக ஞாயிற்றுக்கிழமை 4ஆம் திகதி மாலை 4மணிக்கு வைக்கப்பட்டு, திங்கட்கிழமை 5ஆம் திகதி மாலை 4மணிக்கு இறுதி ஆராதனையின் பின் கனத்தை மயானத்திற்கு தகன ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்படும்.

32/2, [illegible] வீதி,
கல்கிசை.

தகவல்:
அஜிட்குமார்,

(சி/566122)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா சபாபதி

(முன்னாள் பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச் சபை)



மருதங்கேணி தெற்கைப் பிறப்பிடமாகவும் பெரிய விளானை வசிப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, இருபாலையைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட பொன்னையா சபாபதி (முன்னாள் பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச் சபை ) அவர்கள் 02.04.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னைய -சின்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், புனிதவதி, தயாபரன்(பிரான்ஸ்), பராபரன், சுமதி (லண்டன்) ஆகியோன் அன்புத் தந்தையாரும் அமரர் சிவக்கொழுந்து (எழுது மட்டுவாள்), அமரர் சின்னத்துரை (புலோலி), ஐயாத்துரை (வரணி), காங்கேஸ்வரி (மருதங்கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் சிவபாலச்சந்திரன், தவமணி (பிரான்ஸ்), சுதாமதி, வாணிதாஸ் (லண்டன்), கௌசலா ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபிராஜ், தர்சிகா, கபில்ராஜ், ஆரதி, லதாங்கினி, சிவதர்சன், தர்மேந்திரா, பிரவீன், சுஜன், லக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் பொன்னுத்துரை, பார்வதி, தவமணி, அமரர் கதிர்காமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2மணியளவில் கோண்டாவில் பொதுமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை,கோண்டாவில்
பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/566423)

### சின்னத்தம்பி சின்னத்துரை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை 02/04/2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி சின்னையா - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யோசப் துரைமணி மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணபதிப்பிள்ளையின் மைத்துனரும், கலைச்செல்வி (லீலா, சுவிஸ்), ஜெயந்தி (ஜெயா), சூரியகுமார் (ரவி), கேமலதா (லதா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரன் (சுவிஸ்), பத்மநாதன் ஆகியோரின் மாமனாரும், அஸ்வினி, அபிஷா, நிருஷன், டினேஷன், நரேஷன், கஸ்மீரா, தனேஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 6, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

### குமாரசாமி சிவசுப்பிரமணியம்



கொக்குவில் மேற்கு, ஆடியபாத வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவசுப்பிரமணியம் 03.04.2010 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் குமாரசாமி - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், திரு. திருமதி சண்முகம் ஆகியோரின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், சுவேதா, அக்சயன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், தையல்நாயகி, செல்வராணி, சூரியகலா, தெட்சணாமூர்த்தி, ரூபகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவயோகநாதன், சிவஸ்கந்தகுமார்,கணேஸ்காந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாத வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
கு. தெட்சணாமூர்த்தி.

(96387)

### சின்னத்தம்பி கதிரவேலு



வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட சின்னத்தம்பி கதிரவேலு அவர்கள் நேற்று (03.04.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லி சின்னத்தம்பி - சின்னத்தம்பி வள்ளி தம்பதியரின் ஏக புத்திரரும் அன்னப்பிள்ளையின் கணவரும் கருணாநிதி, கருணாமூர்த்தி, சறோசாதேவி, கமலாதேவி, கருணாகரன் ஆகியோரின் தகப்பனாரும் வசந்தலீலா, செல்வராணி, அருள்நாயகம், துரைசிங்கம், றொபினி ஆகியோரின் மாமனாரும் கலைவாணி, துளசிகரன், கலைச்செல்வி, வசந்தகுமார், பார்க்கவி, கோகுலகவி, கீர்திகா, லுஜித்திரா, துசியந்தன், துசாயினி, துவாரகன், துசிதரன், கவிஸ்ணன், மயூரேஸ், சங்கீத் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் அவரது பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க யாழ்.தேர்தலில் மட்டும் 324 வேட்பாளர்கள்!

## இத்தனைக்கும் 'ஜனசபா' தான் தரலாம் என்கிறார் ஜனாதிபதி

தேர்தல் திருவிழா ஆரம்பமாகி விட்டது. இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதளவு சுயேச்சைக் குழுக்கள் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளன. அதிலும் அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற தேர்தல் மாவட்டங்களிலேயே பெருமளவு சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றன. யாழ்ப்பாணத்தில் மட்டும் யாழ்ப்பாண மக்களுக்குச் சேவை செய்வதற்காக 324 பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அன்பான யாழ்ப்பாண மக்களே! நீங் கள் ஏற்றுக் கொண்டாலும்சரி ஏற்றுக்கொள்ள விட்டாலும் சரி நிச்சயமாக இந்த 324 பேரும் உங்களுக்குச் சேவை செய்வதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றனர். நம்புங்கள்....?



இனிமேல் கறுப்புச்சட்டை அணிந்த தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் வாதிகள் தமிழர்களை ஏமாற்றுகின்றார்கள் என்று யாரும் கூறமுடியாது.ஏனெனில் இம்முறை தேர்தலில் உண்மையான ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. உயர் மட்டத்திலிருந்து ஆகக் கீழ் மட்டம் வரை தேர்தலில் போட்டியிடுகின்றனர். பேராசிரியர், மருத்துவர், பட்டயக் கணக்காளர், தொழிலதிபர், கணனிப் பொறியியலாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், பிரபல வர்த்தகர்கள் முதல் சாதாரண சில்லறை வியாபாரிகள், தொழிலாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். எனவே இம்முறை வாக்காளர்கள் தாம் விரும்பியவரைத் தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்வதற்கு வாய்ப்புக்கிட்டியுள்ளது. ''தமிழ் ஈழம்'' கேட்ட அரசியல்வாதிகள் தனிநாட்டுக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் அனைவரும் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அவுஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் நிரந்தரவதி விட உரிமைபெற்றவர்களும் யாழ்ப்பாணம் வந்து பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்து தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தேர் தலில் போட்டி யிடுகின்றனர் பாருங்களேன்! இதுமட்டுமல்ல, யாழ்ப்பாண மக்களுக்குச் சேவை செய்வதற்காகச் சில சிங்களவர்களும் சுயேச்சைக் குழுக்களாக யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்றனர். தங்களுக்கும்ஏதோ கிடைக்கப் போகிறது என்ற நினைப்புடன் யாழ்ப்பாணத்தவர்கள் சிலரும் இவர்களின் பின்னால் அலைகிறார்கள்.

சில யாழ்ப்பாண யுவதிகள் தாங்கள் தான் இந்த சிங்கள அரசியல்வாதிகளின் பி.ஏ (Parsonal Assistant)எனத் தம்பட்டம் அடித்துக்கொண்டு திரிகின்றனர். நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் இறுதி நாளன்று யாழ்ப்பாணம் கச்சேரியில் ஒரு யுவதி சிங்கள வேட்பாளர் ஒருவரின் பெயரைச் சொல்லி தான் அவரது பி.ஏ என தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். (அரசியல்வாதிகளும், தொழிலதிபர்களும் எதற்காக அழகிய பெண்களைத் தமது பி.ஏ யாக நியமிக்கின்றார்கள் என்பது உலகம் தெரிந்தவர்களுக்குப் புரியும்).

அன்பான தமிழ் மக் களே! வாக்களிப்பது ஒருவரது அடிப்படை உரிமை. அதை யாரும் தடுக்க முடியாது.அத்துடன் இம்முறை உங்களை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்கும் யாருமில்லை. எனவே நீங்கள் விரும்பும் ஒருவரை உங்களது பிரதிநிதியாகத் தெரிவு செய்வதற்கு இம்முறை சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

### எங்கே போனார்கள்?

நாங்கள் 25 கிராம் தேயிலைக்காக மணித்தியாலக் கணக்கில் கியூவில் நின்றபோது இவர்கள் எல்லாம் எங்கே போனார் கள் என்று நீங்கள் கேட்டால் நீங்கள் அரசியல் தெரியாதவர் என்று அர்த்தம். அல்லது முள்ளிவாய்க் காலில் எமது உடன் பிறப்புக்கள் அனாதைப் பிணங்களாகத் தமது உறவுகளை விட்டு விட்டு வரும்போது இவர்கள் எங்கேயிருந்தார்கள் என்று சிலர் கேட்கலாம். அப்படிக் கேட்டால் சிலவேளை அவர்களுக்குப் புலி முத்திரை குத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை,ஏனென்றால் நிலைமை அப்படி. சாதாரணமாக ஒரு சுவரொட்டி அச்சிடுவதற்கு 18ரூபா செலவாகின்றது. கறுப்பு, வெள்ளை சுவரொட்டிக்கு 12ரூபா செலவாகின்றது. தேர்தல் விளம்பரங்களுக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவரை குடாநாட்டுப் பத்திரிகைகளில் கட்டணம் அறவிடப்படுகின்றது.அன்பான தமிழ் மக்களே! உங்களுக்குச் சேவை செய்வதற்காகவே இந்த 324 பேரும் பணத்தைத் தண்ணீராக இறைத் துச் செலவு செய்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். நிச்சயமாக வாகன வியாபாரம் செய்வதற்காகவோ அல்லது தமது குடும்ப உறுப்பினர்களை வெளி நாட்டுக்கு அனுப்புவதற்காகவோ இவர்கள் தேர்தலில் போட்டியிடவில்லை என்பதை நினைவில் வைத்திருங்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அற்பசொற்ப சலுகைகளுக் காக எம்மவர்கள் தேர்தலில் போட்டியிட வில்லை

## என்ன கோலமடா இது?

என்பதை மீண்டும் அடித்துக் கூறுகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் என்னவென்று தெரியாவிட்டால் கீழே உள்ள பட்டியலைப் பாருங் கள்,

**ந.பரமேஸ்வரன்**

சம்பளம் 40,000ரூபா.

பிரத்தியேகச் செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு அவருக்குரிய சம்பளம்.

சிற்றூழியர் ஒருவரை (Peon) நியமிப்பதற்கு அவருக்குரிய சம்பளம், வாகனச் சாரதிக்குரிய சம்பளம்,

வாகனம்

வீடு

இலவச தொலைபேசி(2)

கைத்தொலைபேசி(1) இலவசம்

வாகனப் பராமரிப்பு

டீசல்-கொழும்பு 10,000 ரூபா வெளியே 20,000 ரூபா ரயர் ரியூப்

மதிய உணவு 150.00 ஒருநா ளைக்கு

சிற்றுண்டி இலவசம்

கணனி

பக்ஸ் இயந்திரம்

முத்திரை மட்டும் ஒரு வருடத்திற்கு 50,000

கடித உறை பெரிது 200 - கடித உறை சிறிது 200 (குறிப்பிட்ட காலப் பகுதிக்கு)

கோவை (5)

நாடாளுமன்றுக்குச் சமுகமளிப்பதற்கு 500.00

தமிழ் அரசியல்வாதிகள் காந்தீய வழியில் நடப்பவர்கள். இந்த அற்ப சொற்ப சலுகைகளுக்காக அவர்கள் தேர்தலில் போட்டியிடவில்லை என்பது மட்டும் உறுதி.

### ஒற்றுமைக்கு உதாரணம்

ஒற்றுமை என்றால் அதற்கு உதாரணமாகத் தமிழ் அரசியல்வாதிகளைச் சொல்லலாம்.யாராலும்பிரிக்க முடியாத அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கூறினர். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றாக உடைந்துவிட்டது. கஜேந்திரகுமார், சிவாஜிலிங்கம், சிறீகாந்தா, கஜேந்திரன், பத்மினி ஆகியோரின் முதல் எதிரி சம்பந்தன்தான். திருமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக ஜி. ஜி., திருமலையில் போட்டியிடுவதைத் தவிர்த்துக் கொண்டார் என்பது பேரனுக்குத் தெரியுமோ தெரியாது! அல்லது தெரிந்தும் சம்பந்தன் என்ற ஒரே எதிரியை வீழ்த்துவதற்காகத்தான் இவர்கள் திருகோணமலையிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளார்களோ தெரியாது!

தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்த தமிழ்ப்பண்டிதர், அப்போது அரசியல் நடத்திக் கொண்டிருந்த ஜி.ஜி., செல்வா, சுந்தரலிங்கம் மூவரையும் ஒரே மேடையிலமர்த்திவிட்டு சாஷ்டாங்கமாக காலில் வீழ்ந்து எமது கழுத்துவரை கத்தி வந்து விட்டது தயவு செய்து ஒன்றுபடுங்கள் என்று வேண்டிக்கொண்டாராம்.

இப்போது பண்டிதர் இல்லை காலில் வீழ்வதற்கு. ஆனால் பண்டிதர் கூறிய கழுத்து வரை வந்த கத்தி ஒரு லட்சம் பேரைச் சீவித் தள்ளிவிட்டது என்பதை ஐ.நா. சபையே ஏற்றுக்கொண்டுள்ளது.


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பதின் மூன்றாவது திருத்தச் சட்டம் பிளஸ் என்கிறார். ஆனந்தசங்கரி இந்திய மொடல் என்கிறார்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி என்று சொல்கிறது. தமிழ்க் காங்கிரஸ் கடல் கடந்த தமிழ் ஈழமாம். இவர்கள் இப்படிக் கூறுகிறார்கள்.

அதி உத்தம ஜனாதிபதி கடந்த 01.04. 2010 அன்று துரையப்பா விளையாட்டரங் கில் வைத்து உங்களுக்கு 'ஜனசபா' கிராம சபை தரலாம் என திருவாய்மலர்ந்துள்ளார். எனவே 'ஜனசபா' தேர்தலுக்குத் தமிழ்க் கட்சிகள் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் இப்போதே இறங்குவது தான் நல்லதுபோலத் தெரிகிறது பாருங்கோ......

## சாவிலிருந்து வாழ்வுக்கு.......

**பொய்மையிலிருந்து மெய்மைக்கும்**
**இருளிலிருந்து ஒளிக்கும்**
**சாவிலிருந்து வாழ்வுக்கும்**
**என்னை அழைத்துச் செல்வாய் சாந்தி!**
**என்றும் சாந்தி! எங்கும் சாந்தி!**

*இதுதான் இன்று மக்கள் ஒவ்வொருவரதும் ஏக்கப்பெருமூச்சு, இடைவிடா வேண்டுதல். இந்தக் கடப்புநிலை எமக்கு கிட்டாதா என்ற ஏக்கம். இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு இக்கடப்பிற்கான உறுதிப்பாட்டைத் தருகின்றது. சிலுவைச் சாவிலிருந்து உயிர்ப்பின் மகிமைக்கு அவர் கடந்துபோனார் என்பது எமக்கும், தனித்தும் மக்கள் இனமாகவும் இக்கடப்பு சாத்தியமென்ற நம்பிக்கையைத் தருகின்றது.*



### தமிழ் மக்களின் பெரிய வியாழன்

*அந்தப் புனித வியாழனிலே இயேசு கைது செய்யப்பட்டதையும், கசையால் அடிக்கப்பட்டதையும் முள்முடி சூட்டப்பட்டு எள்ளிநகை யாடப்பட்டதையும் இரவுமுழுவதும் பல்வேறு தரப்பால் கடுமையா்ன விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதையும் நினைக்கிறோம். இந்த இரவின் நினைவு இன்று எமது மக்களின் பலரின் அவலமான நிலைகளுக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. கைது, சித்திரவதை ,விசாரணை என்பவற்றின் பயங்கரங்களாக அந்தப் பொழுதின் தனிமையையும், துன்பத்தையும் இன்றுஎதிர்கொண்டு துன்புறும் எமது மக்களை நினைக்கிறோம். தமது உறவுகள் பற்றிய நினைவுகளோடு அவர்களைக் காண்போமா என்ற ஏக்கத்தோடு எனது பெரிய வெள்ளி எந்தக் கணத்தில் நிகழுமோ என்ற அச்சத்தோடும் வாழ்கின்ற இவர்கள்தான் இன்றைய இயேசுக்கள்.*

### தமிழ் மக்களின் பெரிய வெள்ளி

*இயேசுவின் சிலுவைப் பயணம் புனித வெள்ளி காலையில் ஆரம்பித்தது. துன்பம் நிறைந்த அந்தப் பயணம் கல்வாரி குன்றிலே பிற்பகல் மூன்று மணியளவில் அவரது மரணத்தோடு முடிவுற்று வந்தது. நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் பொய்த்துப்போக மரணத்தின் பிடிக்குள்ளே அவர் அகப்பட்டார். தமிழ் மக்களாகிய எமது சிலுவைப் பயணம் நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து உலகமே மௌனமாக பார்த்திருக்க முள்ளிவாய்க்காலிலே முடிவுற்றது. ஆயிரக் கணக்கில் மக்கள் ஒன்றாக பெரிய வெள்ளியை சந்தித்தனர். இயேசுவிற்காவது அடக்கம் செய்யப்பட ஒரு கல்லறையும் காவிச்செல்ல சில ஆள்க ளும் அகப்பட்டனர். அவரது தாய்க்கு தனது மகனை மடியில் தாங்கி அழுது ஆறுதல் பெறும் பாக்கியம்கிடைத்தது. ஆனால் எமது மக்களோ காயப்பட் டவர்களைக்கூடக் கவனிக்காமல் ஓட வேண்டியதாயிற்று. இறக்கும் வேளையில் ஒரு துளி நீர் கொடுக்க ஆள்கள் அற்றுப் போயினர். இந்தப் பெரிய வெள்ளயின் சோகம் பெரும் சுமையாக எமது மக்களின் இதயங்களில் கவிந்திருக்கின்றது.*

### தமிழ் மக்களின் புனித சனி

*இயேசுவின் வாழ்வு புனித சனி என்பதை கல்லறையில் அனைத்தும் புதைக்கப்பட்ட தினம். இயேசு பற்றிய எதிர் பார்ப்புக்கள் யாவும் முற்றுப்பெற அவரை அன்பு செய்தவர்கள் அவரை கல்லறைக் குழியில் வைத்தனர். ஆனால் ஆழ்வோரிடம் இன்னும் பயமின்றி இருக்கின்றது. அதனால்தான் அவரது கல்லறைக்கு அவர்கள் காவல் வைத்தனர். இன்றைய நாள்கள் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் கல்லறை நாள்கள் தான். தெருத்தெருவாக காவலர்கள் நிறைந்த கல்லறையில்தான் நாம் வாழ்கின்றோம்.கல்லறை முற்றுப்புள்ளி என்பது தான் பலரது கணிப்பு. ஆனால் கல்லறை கடந்தும் வாழலாம் என்ற காத்திருப்பிற்கே இயேசுவின் கல்லறை அழைக்கின்றது.*

### தமிழ் மக்களின் உயிர்ப்பு ஞாயிறு

*இயேசுவின் வரலாற்றிலே கல்லறை கருவறையான கதையைப் பார்க்கின்றோம். உடலாகப் புதைக்கப்பட்டவர் புத்துருப்பெற்று எழுகின்றார். சாவிலிருந்து வாழ்வுக்கு கடந்து போகின்றார். ஒளி உதித்து சுடர்விட இருள்கன்று போகின் றது. மெய்மை வெற்றிபெற பொய்மை மறைகின்றது. இயேசுவில் நிகழ்ந்த இந்தக் கடப்பு எமது வாழ்விலும் நிழகவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. காவலில் இருப்போர் கலக்கமுற புத்துயிர்ப்பு நிகழவேண்டும். நாங்களும் மக்களென இப்புவியில் வாழ்வதற்குக் காலம் கனிந்து வரவேண்டும். எமது நம்பிக்கை உன்னை மீட்டது என்பதுதான் இயேசுவின் பிரியமான வார்த்தை. வாழ்வின் மீதான எமது நம்பிக்கைதான் எமக்கும் புத்துயிர்ப்புத் தர முடியும். புனித வெள்ளியைக் கடந்து உயிர்ப்பின் ஞாயிறை அனுபவிக்க இந்த நம்பிக்கை தேவை...*

**அருட்பணி. ம.வி.இ.இரவிச்சந்திரன்.**

## இவர்களை இதற்கு அனுமதித்தவர்கள் எவரோ...?

*யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் அண்மையில் தற்காலிக நியமனம் பெற்ற பட்டதாரிகள் குறிப்பிட்ட கட்சி ஒன்றின் தேர்தல் பரப்புரைகளுக்கு பயன் படுத்தப்பட்டு வருகின்றார்கள்.*

*காலையில் குறிப்பிட்ட அலுவலகங் களில் கையொப்பமிட்ட பின்னர் இவர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.*

*இந்தஊழியர்கள்இடம்பெயர்ந்தமக்களின் தகவல்களைத் திரட்டுவதற்காக ஐ.ஓ.எம். அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்றவர்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். குறிப்பிட்ட ஊழியர்கள் தேர்தல் பிரசார செயற்பாட்டில் ஈடுபடுவதுடன் பொது மக்களிடம் மாதிரி வாக்களிப்புச் சீட்டைக் காட்டி தாம் கச்சேரியில் இருந்து வருவதாகக் கூறுவதுடன் குறிப்பிட்ட சின்னத்தைக் காட்டி இதற்கு வாக்களியுங்கள் எனக் கூறிவருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.*

*அரச ஊழியர். தற்காலிகமாகவோ அன்றி நிரந்த ஊழியராகவோ இருந்தால் ஒருகட்சியின் தேர்தல் பிரசாரச் செயற்பாட்டில் ஈடுபட முடியாது என்பது அலுவலக நடைமுறைக் கோட்பாட்டில் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**மக்கள் மன்றம்**

*அவ்வாறிருக்க யாழ். மாவட்டத்தில் மக்கள் தேவைகளை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்குடன் ஒரு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனம் வழங்கும் நிதி உதவிபெற்று கடமையாற்றும் அரச ஊழியர்களை எந்த வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைக்குப் பயன்படுத்த முடியும் என்ற கேள்வி எல்லோர் மனங்களிலும் எழுகிறது.*

Clear hands *உடன் இருக்க வேண்டிய இந்த ஊழியர்கள் எந்த அடிப்படையில் அலுவலக நேரத்தில் தேர்தல்பிரசாரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளனர்?*

*யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி அரச அதிபர்கள் கூட இந்த விடயத்தில் கண்டும் காணாதது போன்று ஏனோ தானோ என்று - இருப்பது இதனை யாரும் குறை கூறக் கூடாது என்பதற்காகவா?*

*எவர் எவரோ இதற்கு வகை வகையான காரணங்கள் அல்லது நியாயங்கள் கூறக்கூடும். ஆனால் இந்தச் செயற்பாடு அரச நிர்வாகத்துக்கு மிக மிகத் தொலைவானது என்பது தெளிவானது...!*

*யாழ்ப்பாணம்.* 'யாழ் வாசன்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய
உப தலைவருமாகிய சி.நாகேஸ்வரன்
அவர்களின் பாசமிகு தாயார்

## சிதம்பரப்பிள்ளை செல்லம்மா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரமடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாவைக்கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் (வரையற்றது)
மாவிட்டபுரம்.

(96353)





The Original
**BIOTIN 250**
*From Germany*

BIOTIN 250 கூந்தல் உதிர்தல் கூந்தலில் ஏற்படும் பிளவு, மந்தமான கூந்தல் வளர்ச்சி, மற்றும் பொடுகு என்பவற்றை தடுப்பதோடு உங்கள் கூந்தலை ஆரோக்கியமானதாகவும் வலுவானதாகவும் வளர்ச்சியடைய செய்கின்றது. கூந்தலின் வேர்களுக்குத் தேவையான போஷாக்கை வழங்கி கூந்தலின் வளர்ச்சியை மேம்படுத்தும் அதேவேளை கூந்தலின் தன்மையையும் தோற்றத்தையும் சிறப்பானதாக்குகிறது.

யாழ் விநியோகஸ்தர்
வனிக்கா மெடிக்கல்ஸ்
85, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212226291, 0212222445.

Sole Agents of Sri Lanka :
Neomed International,
P. O. Box 692, Colombo
E-mail : neoint@sltnet.lk


# பணியாளர்கள் வெற்றிடம்

★ வேலைத்தளப் பணியாளர்கள்/ பயிலுநர்கள் (ஆண்/பெண்)

**நேர்முகத் தேர்வு:**
06.04.2010 செவ்வாய்க்கிழமை
காலை 9 மணி.

**தொடர்புகளுக்கு:**

**Equip Unit Trust (EUT)**
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
தொ.பே: 0212240110,
0215677477.

# திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே. சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த, புகழ் பூத்த- சுயதெரிவு முறை முன்னோடி-தனிமனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேலமுதனுடன் தொடர்பு கொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:2360488, 2360694, 4873929

# வாடகைக்குத் தேவை

ISUZU லொறி நாள் வாடகைக்குச் சாரதியுடன் தேவை.

**தொடர்பு:**

**0217200142, 0217200143**

# வீடு வளவு விற்பனைக்குண்டு

அச்சுவேலி விளங்கியவத்தையில், பஸ் நிலையத்திற்கு அருகாமையிலும், வைரவர் கோயிலுக்கு முன் ஒழுங்கையிலும் உள்ள 2 பரப்புக் காணியுடன் கூடிய 3 அறை, 2 விறாந்தை, அற்றாச் குளியலறையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- மாக் பற்றசன்
**0777222346,0715258049**

# 60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.Iயின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

**BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH**

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)

60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

இலவச T.Shirt ஒன்றும் Tigo Sim English Book என்பன இலவசம்

இலவச Phone Sim

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு பெயர்,முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**The ENGLISH LANGUAGE INSTITUTE**
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம:

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விரோதிவருஷம் பங்குனி மாதம் 22ஆம் நாள் (05.04.2010) திங்கட்கிழமை பகல் 10.55 மணிமுதல் 12.31 மணிவரையுள்ள மிதுனலக்கின சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**இராசகுமார் (குமார்)**
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
**வாசுகி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்.வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் திருக்கல்யாண மண்டபத்தில் (நாச்சிமார் கோயில்) திருமாங்கல்ய தாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

திரு.திருமதி செ.இராசேந்திரம் குடும்பத்தினர்
14 2/3, பூநாறி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

திரு.திருமதி இ. கருணாமூர்த்தி குடும்பத்தினர்
144, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

# நாடாளுமன்றத் தேர்தல் - 2010
## எஸ்.எக்ஸ். குலநாயகம்



இவர் எங்கள் வீட்டுப்பிள்ளை.
அவரது எப்பணியிலும் தமிழ்த்தேசியம் முந்தி நிற்கும்.
தந்தை செல்வா முதல் அனைவராலும்
அரவணைத்து வளர்க்கப்பெற்றவர்.

**எங்கள் பிரதிநிதியாக**

## எஸ். எக்ஸ். குலநாயகம்

இம்முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப் பெறவேண்டும்.
யாழ். நல்லூர் தொகுதி வாக்காளர்கள்





**இலங்கைத் தமிழரசுக் கட்சி** X
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
**எஸ். எக்ஸ். குலநாயகம்** 12

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 ★ 02 ★ 1926



உதிர்வு 08 ★ 04 ★ 2007

**விநாசித்தம்பி ஆறுமுகம் (குஞ்சுத்தம்பி)**

அன்பும் பண்பும் நிறைந்த
பாசமுள்ள தந்தையே
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்வுக்கு வழிகாட்டி திகழ்ந்த எங்கள் தெய்வமே
மூன்றாண்டுகள் ஆகியும்
நீங்கா நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*43, இருபாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு* (96206)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 ★ 02 ★ 1962



ஆண்டவன் அடியில் 04 ★ 04 ★ 2009

**சரோஜாதேவி இராசகுமாரன்**

(முன்னாள் ஆசிரியை, யா/முத்துத்தம்பி ம.வி)

பன்னிரு மாதங்கள் பறந்தோடி விட்டன
பார்கவியோ பாசந்தேடிப் பரிதவிக்கிறார்
பிஞ்சுதனையும் மறந்து பிரிந்துவிட்டாய் எமை
பெருஞ்சுமை தாளாமல் வீழ்கின்றோம் நாம்
பேதலிக்கும் உன்குஞ்சு பெருமை பெறவேண்டி
பொழுதெல்லாம் போக்குகிறோம் உன் நினைவாக
உன் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கும்.

*04, அரசடி லேன்,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (96371)

மகள்: பார்கவி,
கணவர்: இராசகுமாரன்.

## குழுப்படம் எடுத்தல்
### (பட்டப்பின் கல்வி டிப்ளோமா 2006/2008)

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி நேர கற்கைநெறியை பூர்த்தி செய்த 2006/2008 கல்வியாண்டு மாணவர்களின் குழுப்படம் எடுக்கும் நிகழ்வு 10.04.2010 (சனிக்கிழமை) காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளமையால் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(சி/566406)   வகுப்புப்பிரதிநிதி (0773144505)

## மரண அறிவித்தல்



### வெற்றிவேலு வைத்தியலிங்கம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், ஏழாலை வடக்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வெற்றிவேலு வைத்தியலிங்கம் நேற்று (03.04.2010) சனிக்கிழமை பிற்பகல் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு-ஆச்சிமுத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-சிவகாமி தம்பதிகளின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், கணேசலிங்கம், சிரோண்மணி, விஜயலட்சுமி, மகேஸ்வரி, சிவராசா (ஜேர்மனி), செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுசீலா, அரியதாஸ், பரமலிங்கம், மகாலிங்கம், ராஜலட்சுமி (ஜேர்மனி), அமரர் ஜெயகாந்தன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரரும், அமரர் நவரத்தினம், அன்னபூரணம், சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், அமரர் அருளம்பலம், காந்தமலர், காந்திமதி ஆகியோரின் மைத்துனரும், ஜெயசுதா, கோமலதா, லோககீதா, தேவறாதா, பிரதீஸ்வரன், மயூரன், கனிஷ்ரா, காண்டீபன், விதூஷினி, துளசிகா, கம்சிகா, சிந்தூரன், செந்தூரன் ஆகியோரின் பேரனும், கபிலாஸ், சங்கீதன், கதுஷன், டனுஸ்ரிகன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை வடக்கு, உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அமெரிக்கமிஷன் பாடசாலை அருகாமை,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தொ.பே.இல: 0770240332
0778737358 (96396)

தகவல்: குடும்பத்தினர்.


## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பம், UK Citizen, 35வயது, (B.Com) கம்பனி ஒன்றில் கடமையாற்றி வருகின்றார். ரோகினி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றம் இல்லை, தகுந்த மணமகனை எதிர்பார்க்கிறார்.

லண்டன் தொடர்பு: 00447404120188 (95732)

## வீடு வாடகைக்கு தேவை

மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் தங்குவதற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 0772349934 (96384)




## Computer Engineer

## அரச புலமைப்பரிசில்

**விண்ணப்பிக்க விரும்புவோர் 10-04-2010 இற்கு முன்னர் நேரில் தொடர்புகொள்ளவும்**

MCS Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி அருகில்
யாழ்ப்பாணம்,
T.P-772395895 Bus Root - 764

## புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு

ஒரு நாள் புறொயிலர் குஞ்சு 07.04.2010 இல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

விவரங்களுக்கு : கிருஷ்ணா பாம்,
மானிப்பாய்.
0772333084

(96323)

## காணி விற்பனைக்கு

நாவற்குளி, கண்டி வீதியில் உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாக அமிர்தா வீதியில் 16 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. (களஞ்சியத்துக்கோ/ தொழிற்சாலைகளுக்கோ ஏற்ற இடம்)

தொ.பே 0776047589 (96331)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம். ஒட்டுமடம் சந்திக்கு அருகில் கராச்சுக்குப் பக்கத்திலுள்ள 3½ பரப்பு நீள்சதுரக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: அன்பன், 0777420240, 0777661655, 0112424261

## வீடு வாடகைக்குண்டு

பிரதான வீதியில் மாநகர எல்லைக்குள் யாழ்.நகரம், பல்கலைக்கழகம், நல்லூர் கோயில் ஆகியவற்றிற்கு ½கிலோ மீற்றர் தொலைவில் அமைந்த வீடு எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. அலுவலகம், குடியிருப்புக்கு உகந்தது.

தொ.பே.இல: 0778116484

## வீடு விற்பனைக்கு

யாழ் மண்ணில் நீங்கள் பாடுபட்டு சேர்த்து வைத்த வரவை, தலைநகர் கொழும்பில் உங்களுக்கென்று ஒரு வீட்டில் முதலிடுங்கள்.

**0777295102**

## கல் உடைக்கும் இயந்திரங்கள் விற்பனைக்கு

"Nakayama" - Japanese Jow Crusher
(Primary Crusher) - 38" x 16"
"Nakayama" - Japanese Jow Crusher
(Secondary Crusher) - 30" x 6"

தொடர்புகளுக்கு
தமிழில் : 0777 560862
சிங்களம்/ஆங்கிலத்தில் : 077 970097


## மரண அறிவித்தல்கள்

### ஆசைப்பிள்ளை (கனகராசா) தியாகராஜா

(முன்னாள் உத்தியோகத்தர், மீன்பிடிக் கூட்டுத்தாபனம்)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நெட்டிலிப்பாய், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை (கனகராசா) தியாகராஜா 31.03.2010 புதன் கிழமை காலமானார்.

அன்னார் கனகராசா-காலஞ்சென்ற அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினமயில்வாகனம் - பொன்னம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற ஞானப்பூங்கோதையின் அருமைக் கணவரும், கெங்காதரனின் அன்புத் தந்தையும், திருமதி பரிபூரணராணி சிவநாதன் (நீர்கொழும்பு), திருமதி யோகராணி ராஜேந்திரன் (நியூசிலாந்து), சற்குணராசா (அவுஸ்திரேலியா), திருமதி ஜெயராணி சண்முகராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி புஸ்பராணி மகாதேவன், ஸ்ரீதரன் (U.K), சத்தியசோதி, காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் ராஜேந்திரம், சியாமளா, சண்முகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பையா கனகராசா
(தந்தை)

(96470)

### சிதம்பரப்பிள்ளை செல்லம்மா



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வேரக்கேணியடி, நுணாவில் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை செல்லம்மா 02.04.2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவஞானம், லிங்கேஸ்வரி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற இராமநாதன், கமலாதேவி மற்றும் நாகேஸ்வரன் (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானம், இராமநாதன், கருணா, சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சற்குணராசா புஸ்பவதி, காலஞ்சென்ற சதீஷா மற்றும் லுகுணதாஸ் (டோகா), பாஸ்கரதாஸ் (சுவிஸ்), கமல்ராஜ் (சுவிஸ்), இரத்தினராஜ் (கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்), தீபராஜ், சந்திரிகா, திருமதி றோகான்குமார் கம்சிகா (கனடா), கிரிசாந், தர்சிகா (யா/இந்து மகளிர் கல்லூரி), லுதர்சன் (யாழ்.இந்துக்கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு-பொன்னம்மா, சின்னத்தம்பி-சின்னம்மா ஆகியோரின் சகோதரியும், திருமதி சமன்ராஜ், சர்மிலா, பர்மிலா, சியாமலா (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), அபிஷாந், றிகானா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரக்கோட்டம்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
0213219523

(96381)

தகவல்:
குடும்பத்தினர்,
நாகேஸ்வரன் (மகன்).

### கந்தையா தர்மராசா

(இளைப்பாறிய ஆசிரியர், சுழிபுரம் ஆறுமுகம் வித்தி)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர், சுழிபுரம் ஆறுமுகம் வித்தியாலயம்) நேற்று (03.04.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகம்மா (இளைப்பாறிய ஆசிரியை, பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை) அவர்களின் அருமைக் கணவரும் அன்பரசி, அருளரசன் (ஆசிரியர், யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அம்பிகா (அரச முகாமைத்துவ உதவியாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்), ஜீவானந்தம் (ஆசிரியர், மு/ மல்லாவி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணராசா , விஜயகுமார், கல்யாணி, லிசிதமாலா ஆகியோரின் மாமனாரும் சிவரூபன், சிவதர்சனா, இராகவன், முரளிதரன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*வடலியடைப்பு*
*தொ.பே.: 0779907174*

(96374)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைகல்

# இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஒரு வேண்டுகோள்

தமிழ் பேசும் மக்களே! உங்கள் புலம்பெயர் உறவுகள் விடுக்கும் ஓர் வேண்டுகோள் இது. விழித்திருங்கள்; தூங்கிவிடாதீர்கள்; தந்தை செல்வாவின் வழியையே பின்பற்றுங்கள். அவருடைய சின்னம் வீடு. அந்த வீட்டையே தெரிவு செய்யுங்கள். 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்ற அவரது வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். நான் எழுபது வயதை எட்டி விட்டேன். எங்கள் அறுபது ஆண்டு அரசியலைப் பற்றி நன்கு அறிந்தவன் நான். 1948-1972ஆம் ஆண்டுவரை இங்கிலாந்து எலிசபெத் மகாராணியினால் நியமிக்கப்பட்ட தேசாதிபதி யின் கீழ் இந்நாட்டு அரசாங்கங்கள் செயற்பட்டு வந்தன. 1972ஆம் ஆண்டு இலங்கை ஒரு குடியரசு நாடாக மாற்றப்பட்டது. அதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் தமிழ்க் காங்கிரஸ் கட்சி உறுப்பி னர்கள் அருளம்பலம் மற்றும் தியாகராசா ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவர். தமிழரசுக் கட்சி உறுப்பினர் பத்தொன்பது பேரும் ஒத்துழைக்கவில்லை. அன்று மேற்குறிப்பிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கள் இருவரும் புதிய அரசமைப்புக்கு ஆதரவு அளித்திராவிட்டால் அம்முயற்சி வெற்றி பெற்றிருக்காது. அவர்களுக்கு ஒரு தமிழன் கையொப்பமிட்டாலே போதும். அன்று அந்தச் சந்தர்ப்பத்தை அந்த இருவராலும் இழந்தோம்.

முன்பு டொனமூர், சோல்பரி ஆணைக்குழுவின் யாப்பின்படி அரசியல் நடைமுறை கைக்கொள்ளப் பட்டது. இந்நாடு குடியரசு ஆகியபின் பெரும் பான்மை இன மக்கள் காலத்துக்குக் காலம் தங்கள் தேவைகளுக்கேற்ப சட்டங்களை ஆக்கி, ஆண்டுகொண்டு வருகின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்த பின் சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைக் குத் தீர்வு காணுவேன் என உலக நாடுகளுக்குக் கூறி வந்துள்ளார். ஆகையினால் அவர் தீர்வுத் திட்டத்தை கட்டாயம் வழங்க வேண்டும். அந்தத் தீர்வுத் திட்டம் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருத்தல் வேண் டும். தமிழரசுக் கட்சி, அந்தத் தீர்வுத் திட் டம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்துமா? திருப்தி ப்படுத்தாதா? என்பதனை ஆராய்ந்து அதில் ஏற்புடைய என்ன திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று விவாதிப்பார்கள். மாற்றுக்கட்சி உறுப்பினர்களை அரசாங்கம் விலைகொடுத்து வாங்கித் தங்கள் கைக்குள் போட்டு அவர்களின் ஆதரவைப் பெற்றுவிடும். பின் அரசாங்கம் தான் நினைத்தபடி தமிழனை ஆண்டு கொண்டு இருக்கும்.

காலம் காலமாக விலைபோகும் தமிழர்களால்தான் மொத்த தமிழனுக்கும் துன்பம். அதனால் தான் தந்தை செல்வாவின் வழியில் நின்று ஒருமித்து தமிழ்த் தேசியத்தை வென்றெடுங்கள். புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் ஈழத்தமிழினம் தனக்குரிய உரிமைகளைப் பெறுவதற்கு உதவ முயற்சி செய்கின்றார்கள். நீங்களும் பெற்றுக் கொடுக்க எங்களுடன் ஒத்துழைத்து மாற்றுக் கட்சிகளை ஆதரிக்காமல் முன்னர் போன்று தமிழரசுக் கட்சி வேட்பாளர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இம்முறையும் ஒரு கட்சியை அனுப்புங்கள். அரசாங்கக் கட்சியில் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கம் வகித்தால், அரசு தான் நினைத்ததை நிறைவேற்றிக்கொள்ளும்.

1972ஆம் ஆண்டில் நீங்கள் விட்ட பிழையை இனியும் விடவேண்டாம். எல்லாத் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து தமிழ் மக்களது உரிமைகளைப் பெற்றுத்தரமுயலும், தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சிக்கு வாக்களித்து அவர்களை நாடாளுமன்றம் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன். ★★★

திருமதி கே. சுந்தா
(தற்போது),சுன்னாகம்.

# நாடாளுமன்றத் தேர்தலும் தமிழ் பேசும் மக்களும்

நீண்ட நெடுங்காலமாக உரிமை மறுக்கப்பட்டுவரும் இலங்கைத் தமிழ் பேசும் இனம், தவிர்க்கமுடியாமல் இன்னொரு தேர்தலைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஜனநாயகம் என்பது ஒரு கேலிக் கூத்து என்று நிரூபிக்கும் வகையில் வேட்பாளர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. வேட்பாளர்கள் பலருக்கே தாம் என்ன செய்கின்றோம் என்று தெரியாமலிருக்கும் போது வாக்காளர்களைப் பற்றி என்ன எண்ணுவது? வாக்காளர்களுக்கு மனக் குழப்பத்தை ஏற்படுத்தும் செயலும் இப்போட்டியினால் அரங்கேற்றப்படுகின்றது.

வழமை போல தமிழ் மக்களின் ஒரேநோக்கான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது என்ற கோஷம் முன்வைக்கப்படுகின்றது. இவ் வெளிப்படுத்தலுக்காகவே உழைப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முடிவெடுத்திருக்கிறது. அத்துடன், எமது முயற்சியென்பதைவிட, வேறு எங்கோ இருந்து தீர்வு வரும் என்ற நம்பிக்கை யையும் தொடர்ந்து வலியுறுத்தவும் த.தே.கூட்டமைப்பு தவறவில்லை. தமிழ்மக்களின் வாழ்வில் விடிவு வரும் வரை உழைப்போம். அதற்கான நிகழ்ச்சி நிரல் இது. மக்கள் இயக்கமாக மாற்ற என்ன செய்ய வேண்டியுள்ளது என்ற விடயங்களை முன்வைக்க த.தே.கூட்டமைப்பு தவறியுள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தேர்தலை எதிர்கொண்டாகி விட்டது. ஆகவே அதற்கான தயாரிப்புக்களில் ஈடுபட வேண்டியது அவசியம். தற்போதைய த.தே.கூட்டமைப்பின் நடவடிக்கைகள், வாக்களார்கள் பெரிதாகக் குழப்பமடையாத காலங்களுக்குப் போதுமானவை. வாக்களிப்பிலேயே வெறுப்பு உண்டாக்கப்படும் சம்பவங்கள் மிகுந்து காணப்படுவதால் சிறப்புக் கவனம் தேவை. தேர்தலை விட, பெரும்பகுதியான பணி வேறு உள்ளது. அது தான் உண்மையிலேயே செய்யப்பட வேண்டியது என்று மக்களுக்கு அறிவுறுத்தி, மக்களோடு நின்று அதை முன்னெடுக்க த.தே.கூட்டமைப்பு முன் வரவேண்டியது மிக அவசியமானது.★★★★★★

வை. சந்திரபாலன்
கொக்குவில்.

# ஒற்றுமையே உரிமைக்கு வழி

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனை வருக்கும் தாழ்வு' என்னும் கவிதையை அமரகவி பாரதியார் அவர்கள் அன்று பாடிவைத்தார்.

அதுவும் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பே பாடிவைத்தார். அந்தப் பாடல் அநேகமாக எல்லா நாடு களுக்கும் பொருத்தமுடையதாகவும். எல்லாக் குடும்பங்களுக்கும் பொருந்தக் கூடியதாகவும் அமைந்திருக்கின்றது.

அந்தப் பாடலின் உட்கருத்தை எல்லோரும் நன்றாக அறிந்திருக்கிறார்கள் என்று தான் நாங்களும் நம்பியிருந்தோம். ஆனால் எங்களுடைய நாட்டிலே இருக்கின்ற தமிழர்களில் சிலர் அதைப் புரிந்திருந்தும் புரியாதவர்களாக நடக்கிறார்களே! அதை நினைக்கும் போது தான் இங்கேயுள்ள பெரும்பாலான தமிழ் மக்கள் வேத னையும் விரக்தியும் அடைந்திருக்கின்றார்கள்.

தற்போது எம் நாட்டிலே நிலவுகின்ற சூழ் நிலையில் எம் தமிழர்களுக்கிடையில் இந்தப் போட்டி பூசல்கள் நிலவுவதைக் கண்டு வெளி நாட்டு அரசாங்கங்கள் எந்தளவுக்கு எம்மக்களின் தன்மானமற்ற போக்கைக் கணித்துக் கொள்வார்கள் என்பதை இவர்கள் புரிந்துகொள்வார்களா?

எங்கள் நாடு சுதந்திரம் அடைந்து தற்போது 62 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. இன்றுவரை இந்த நாட்டை ஆண்ட அரசுகள் சிறுபான்மை மக்களுக்குரிய அடிப்படை உரிமைகளையோ சுயநிர்ணய உரிமைகளையோ வழங்க வில்லையென்பது இந்த நாட்டிலே வாழ்கின்ற எல்லாத் தமிழர்களுக்கும் நன்றாகத் தெரிந்த விடயம். நம் நாட்டிலே மாறி மாறி எத்தனை ஜனாதிபதிகள் பதவிக்கு வந்து போனார்கள். அவர்களது அமைச்சரவையில் தமிழர்கள் பலரும் அமைச்சர்களாக இருந்துள்ளார்கள். எத்தனை தமிழர்கள் பிரதி அமைச்சர்களாக இருந்தார்கள். இவர்கள் எல்லோரும் தமது சுயலாபத்திற்காகவும் தங்களது வாழ்வை மேம்படுத்து வதற்குமே தமது பதவிகளைப் பயன்படுத்தினர். இனியும் இத்தகையோர் அரசாங்கத்தோடு சேர்ந்து தமிழ் மக்களது உரிமைகளைப் பெற்றெடுக்க என்ன செய்யப் போகின்றார்கள்?

அண்மையில் எம் நாட்டில் நடந்து முடிந்த போரிலே எம் மக்கள் எத்தனை கஷ்டங்களை அனுபவித்து அழிந்து போனார்கள். பெருமளவு சொத்துக்களை இழந்தார்கள். இதைவிட பலர் தமது அவயவங்களை இழந்து அவஸ்தைப் பட்டார்கள். அப்போதெல்லாம் அரசாங்கத்தோடு சேர்ந்து இருந்தவரெல்லோரும் என்ன செய்தார்கள் இந்த மக்களுக்கு?. ஆனால் எமது அண்டை நாட்டு - தமிழ் நாட்டு இளைஞர்கள் எத்தனையோ பேர் தங்களைத் தாங்களே தீயிட்டு உயிர் விட்டார்களே எதற்காக? அவர்களும் எம்மினத்தவர்கள் என்ற காரணத்தினால் தானே? இதை இங்கேயுள்ள மக்கள் சிந்தித்துப் பார்த்தார்களா? இதைவிட வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசை நிர்வகிப்போர் சிங்கள மக்களைக் குடியேற்றுகின்றார்களே, அதுவும் இவர்களுக்குத் தெரியாதா? அவையெல்லாம் தெரிந்திருந்தும் நாடாளுமன்றத்திலே வாய்மூடி மௌனிகளாக இருந்தார்களே!

மீண்டும் இன்று தேர்தலுக்கு நிற்க வந்துவிட்டார்கள். தாமும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டோம் என்ற பெருமையைத் தக்க வைத்துக் கொள்ளப் போராடும் பலர், நம்மினத்தவர்களின் வாக்குக்களைப் பிரித்து பெரும்பான்மையின பிரதிநிதிகள் தொகையை அதிகரிக்கவும், உறுதிப்படுத்தவும் இந்தத் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளனர். இதை மக்கள் நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும், நடைமுறையில் அடிப்படை இன உரிமைகளை, கல்வி, தொழில் உட்பட சகல சிறுபான்மை மக்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க உறுதிப்படுத்த அரசியல் பிரதிநிதித்துவம் அவசியமாகின்ற தென்பதை எமது வாக்காளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். வாக்குகளின் பெறுமதியை உணர்ந்து கொள்ள வேண்டும். வாக்கின் பெறுமதி வாழ்க்கையோடு தொடர்புடையது. ஆகவே எம் தமிழ் மக்கள் இனிவரும் காலங்களில் தமிழன் இந்த நாட்டிலே சுதந்திரமான, சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டுமானால் எங்களுக்குள் இருக்கும் பகைமையுணர்வை மறந்து இனவு ணர்வை வளர்த்துப் போட்டி, பூசல்களை அகற்றி தம்மிடையே ஒற்றுமை காண முயல வேண்டும்.

ஒருவரை ஒருவர் குறை சொல்வது, பிளவுபடுத்துவது, வஞ்சிப்பது, ஒற்றுமையைத் தகர்ப்பது போன்ற கீழான செயல்களால் மனிதத் தன்மையை இழக்காமல், மானமுள்ள தமிழர்களாக ஒரே கொள்கையுடனும், ஒரே கட்சியுடனும் நின்று எமது ஈழத்துக் காந்தி என்று அழைக்கப் பட்டவரான எங்கள் தந்தை செல்வா அவர்க ளினால் உருவாக்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களித்து அக்கட்சியின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வீர்களென நம்புகின்றேன்.✱

க. சீவா, கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் மக்களின் எதிர்காலமும் கா

## ஏகபிரதிநிதி ஜனநாயகத்திற்கு ஒவ்வாத வார்த்தையாகும் பேசாமல் விட்ட தவற்றை மீண்டும் விட்டுவிடக் கூடாது

**வீரகேசரி 29.03.2010**

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான காலம் கனிந்துள்ளது. அந்த வாய்ப்பான காலத்தை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அணிதிரளவேண்டும். முரண்படக்கூடாது. ஏகபிரதிநிதி ஜனநாயகத்திற்கு ஒவ்வாத வார்த்தையாகும் சில இடங்களில் நாங்கள் பேசாமல் விட்டதவறினால் மீண்டும் அப்படியானதொரு நிலைமை வரக்கூடாது. யாருமே ஏகபிரதிநிதி என்ற கருத்து முன்வைக்கக் கூடாது. மக்கள் இணைந்து செயற்படுவதன் மூலமாக எழுகின்ற சக்தியே பெரும் சக்தியாகும் என தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரகாசன் தெரிவித்தார்.

இலங்கை 83 ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் துடிப்புக்கொண்ட நாடாக இருந்தது. பொருளாதாரம் சரிவடைந்து இருந்தாலும் துடிப்பாக இருந்தது. பெரிய பேரழிவுக்குப் பின்னர் கூட துடிப்போடு இருந்தது.

இந்தியாவில் தமிழ்நாட்டில் அப்போது இருந்த பொருளாதாரம் ஒரு மந்த கதியில் இருந்தது. தமிழ்நாட்டில் இன்று சொல்ல முடியாத பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இன்று நாட்டில் அமைதி நிலவுகின்றது. ஆனால் இருந்த துடிப்பு போய்விட்டது.

யாழ்ப்பாணத்துக்கு எனது வீட்டைத் தேடிச்சென்றபோது தெல்லிப்பழையில் எனது வீடு காட்டுக்குள் இருப்பதைக் கண்டேன். அது எனக்கு ஒரு புத்துணர்ச்சியைக் கொடுத்தது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது அழிக்கப்பட்ட ஜப்பானிய, ஜேர்மனிய நாடுகள் விரைவாக உலகத்தில் முன்னணி நாடுகளாக உருவெடுத்துள்ளன.

கருத்துக்கள் வேறுபடலாம். எனினும் முயற்சிக்கு நாம் தோள் கொடுக்கவேண்டும். சண்முகநாதனின் நடவடிக்கைகளை பார்க்கின்றபோது அவர் சிறந்த சிந்தனையாளர், செயற்பாட்டாளர் என்பது புலனாகின்றது.

இந்தியாவுக்கு நாங்கள் அகதிகளாக சென்றோம். அந் நாட்டில் அகதிகளென்பது சட்ட புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. குடியுரிமை உள்ளவர் அல்லது வெளிநாட்டுக்காரர் என்ற இரு பிரிவினர் அங்கிருந்தனர். அப்படிப்பட்ட சூழலில் அங்கு வாழ்ந்த எமது அகதி மக்களை பக்குவப்படுத்தி தகைமைப்படுத்தி அவர்கள் இன்று பல்வேறு வழிகளில் வளர்ந்துவந்துள்ளனர். ஏராளமான பட்டதாரிகளை உருவாக்கிய ஒரு சமூகமாக அங்கு வாழ்கின்றனர். இந்தியாவிற்கு அகதியகச் சென்ற ஒரு சிறுவனேனும் எழுத்தறிவில்லாதவன் இல்லை என்ற நிலைமையை நாம் உருவாக்கியுள்ளோம்.

இந்த பெரிய சாதனை எங்களால் முடியுமென்றால் அதனை விடவும் பெரிய பெரிய விடயங்களை எம்மால் சாதிக்கமுடியும். இந்தியாவில் இருக்கின்ற இலங்கை அகதிகள் அத்தனை பேருக்கும் குடியுரிமை வழங்குமாறு தமிழக முதல்வர் பரிந்துரைத்துள்ளார் என்றால் உலக நாட்டில் சாதிக்கமுடியாததை நாம் சாதித்துள்ளோம்.

இந்த நாட்டில் குடியுரிமைப் பிரச்சினை வந்தது. அந்த பிரச்சினைக்கு சமாதான காலமாக 2003 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தின் மூலம் விடிவு பிறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நாட்டிற்காக உழைத்த மக்கள். நாட்டின் முதுகெலும்பான மக்களின் உரிமை பறித்தெடுக்கப்பட்ட துர்பல சம்பவங்கள் முடிவிற்கு வரும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. 2003 ஆம் சட்டத்தில் கூட சிறு இடைவெளி இருந்தது.



தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரகாசன்

இலங்கையில் இருந்தவர்களுக்கு எந்த உரிமை என்று சொல்லப்பட்ட காரணத்தினாலேயே மலையகத்தில் வாழ்ந்த ஏறாதாழ 30 ஆயிரம் பேர் வடக்கு-கிழக்கிற்கு, சென்று அங்கிருந்து புலம் பெயர்ந்து இந்திய முகாம்களிலேயே வாழ்ந்து வந்தார்கள்.

மிகநலிந்த நிலையிலிருந்த அந்த மக்கள் என்றோ ஒரு நாள் சொந்தத் தாயகத்திற்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் குடியுரிமை கிடைக்காவிட்டால் எம்மக்களாலேயே விரட்டப்படுவார்கள் என்ற காரணத்தினால் அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினோம் .அதன் அடிப்படையிலேயே குடும்பங்களின் பட்டியலைப் பெற்று அந்த விளக்கங்களை தமிழக அரசின் ஊடாக இலங்கைக்கு அனுப்பி இதற்கு திருத்த சட்டமொன்றை கொண்டு வர வேண்டும் எனக் கோரினோம்.

ஆனால் பாராளுமன்றத்திற்கு அது கொண்டு செல்லப்படவில்லை. மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கட்சியின் பிரதிநிதிகள் வருகை தந்தனர். எம்முடன் கலந்துரையாடினர் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி யாரும் எதிர்க்காத நிலையில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சென்ற இந்திய வம்சாவளி மக்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான சட்டம் நிறைவேற்ற முடியும் என்றால் அவ்வாறான ஜனாதிபதியின் தலைமையின் கீழான அரசாங்கத்திடம் நீங்கள் ஏன் பெற்றுக்கொள்ள முடியாது எனக்கேட்டேன்.

இந்தியாவிற்கு 2006 ஆம் ஆண்டு அகதிகளாக வந்தனர். சாதாரண தரத்தில் கற்றுக் கொண்டிருந்தவர்களுக்கு கல்வியைத் தொடரக்கூடிய வாய்ப்புகள் இருக்கவில்லை, இரண்டு வருடங்கள் படிப்பை இழந்தே அவர்கள் மீண்டும் கற்கவேண்டும். இதனை கவனத்தில் கொண்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதிநிதிகளை இந்தியாவிற்கு அனுப்பி அங்கும் மையமொன்றை நிறுவி பரீட்சைகளை நடத்துமாறு ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். பரீட்சைகள் நடந்தன

ஜனாதிபதியின் தலைமையின் கீழான ஆட்சியில் உலக நாடுகளே வியக்கவைக்கும் அளவிற்கு பல்வேறான விடயங்கள் நடந்தேறியிருக்கின்றன எங்களுடைய பெண்களின் சேமிப்புகளை வங்கிகளில் வைப்பிலிடுவதற்கு கஷ்டப்பட்டோம். அவர்களின் 500, 1000 ரூபாவை பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவிலிருக்கின்ற எந்த வங்கிதான் முன்வரும்.

ஆனால் இலங்கை வங்கியிடம் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டோம். பொருள்ாதார ரீதியில் வங்கிக்கு பெரிய பங்களிப்பு ஏற்படாவிட்டாலும் ஆனால் மனிதாபிமானத்திற்கு அது பயன்படும் என்பதனை சுட்டிக்காட்டினோம். அகதி பெண்களுக்காக வங்கிக்கணக்குகள் திறக்கப்பட்டன. அதுமட்டுமன்றி அவர்கள் நாடு திருப்புகின்ற போது அத்தனை பெண்களுக்கும் இலங்கையில் கணக்கு திறந்து கொடுக்கப்படல் வேண்டும் எனகேட்டுக்கொண்டோம்.



கலந்துரையாடலில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்

## நா

**தினக்குரல் 27.03.2010**

இலங்கையில் யுத்தம் மூண்டதையடுத்து இடம் பெயர்ந்து இந்தியாவுக்கு வருகின்ற அகதிகளுக்கு அங்கிருந்து பல்வேறு உதவிகளைச்செய்து வருகின்றேன். 30 வருடங்களுக்குப்பிறகு இங்கு வந்தபோதிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை வடக்கு, கிழக்கில் சென்று பார்வையிட்டுள்ளேன்.

இவ்வாறு தந்தை செல்வநாயகத்தின் புதல்வர் சட்டத்தரணி எஸ்.சந்திரகாசன் தெரிவித்தார்.

கொழும்பு றமடா ஹோட்டலில் புதன் கிழமை நடைபெற்ற தமிழ் மக்களின் எதிர்காலம் காலத்திற்கேற்ற அணுகுமுறைகள் என்ற சிறப்புக்கலந்துரையாடலில் உரை

## தொண்டமான் தன்னுடைய மக்களை போராட்டத்தில் ஈடுபடுத்த விரு



\- சோ. சந்திரசேகரன் -

**வீரகேசரி 27.03.2010**

இந்த கலந்துரையாடலில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் கருத்துரைக்கையில்,

தமிழ் மக்களின் எதிர்காலம் காலத்திற்கு ஏற்ற அணுகுமுறைகள் என்ற சிறப்பு கலந்துரையாடலில் எதிர்காலம் மற்றும் அணுகுமுறைகள் தொடர்பில் நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் கலந்துகொள்ள வேண்டிய கடப்பாடு இருக்கிறது.

எதிர்காலம் என்ற சொல் முக்கியமானது. ஏனெனில், இன்று சகல துறைகளிலும் எதிர்காலவியல் என்ற நோக்கிலேயே பார்க்கப்படுகிறது. வரலாற்று நோக்கில் பார்க்கப்பட்ட காலமும் இருக்கின்றது. மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் 2020 ஆம் ஆண்டில் தாய்லாந்து அல்லது 2030 ஆண்டில் மலேசியா போன்ற கண்ணோட்டங்களிலேயே பார்க்கப்படுகின்றது.

எதிர்காலவியல் நோக்கில் பார்க்கப்படுகின்ற போது தான் எமது தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் இன்று கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றோம்.

காலத்திற்கு ஏற்ற அணுகுமுறை என்ற சொற்றொடரில் எல்லா காலத்துக்கும் ஏற்ற அணுகுமுறை இருக்காது. எல்லா காலத்துக்கும் எல்லா அணுகுமுறைகளும் பொருந்தாது. வரலாற்றில் இருந்து பலவிடயங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். வரலாற்றில் இருந்து நாம் எதனையும் கற்றுக் கொள்வதில்லை என்பதே வரலாற்று பாடமாகும்.

நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டியவர்கள். கடந்த காலங்களில் எமது அணுகுமுறைகளில் ஏதேனும் பெரிய தவறுகள் இடம்பெற்றிருக்குமோ என்று சிந்திக்க வேண்டிய கட்டமும் இருக்கின்றது. அது தொடர்பில் நாம் எம்மை சுய விமர்சனத்திற்கு உள்ளாக்கிக்கொள்ள வேண்டும். சுய விமர்சனமின்றி எந்த நாடும் எந்த சமூகமும் முன்னேற்றத்தை காணமுடியாது.

பல நாடுகள் வீழ்ச்சியடைந்த காலத்தில் எல்லாம் அவை தம்மை சுயவிமர்சனத்திற்கு உள்ளாக்கிக் கொண்டன. நாம் அணுகுமுறைகள் பற்றிய சுயவிமர்சனத்தை செய்து கொள்ள வேண்டும். பழைய அணுகுமுறைகளைக்கைவிட்டு விட்டு புதிய அணுகுமுறைகள் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

எங்களுடைய குறைகளை, அபிலாஷைகளை, பிரச்சினைகளை அவற்றில் முன்நிலைப்படுத்தி இவற்றில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவை? இவை எந்த காரணத்திற்காகவும் தட்டிக்கழித்து விடக்கூடாதென அரசாங்கத்திற்கு முறையாக எங்களுடைய தலைவர்களினூடாக அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் ஊடாக நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

இலங்கையில் இருக்கின்ற சில தமிழ்க்குழுக்கள், தமிழ்க்கட்சிகள் இவ்வாறான அணுகுமுறைகளை கடந்த காலங்களில் கையாண்டு இருக்கின்றன. மறைமுகமாக சொல்வோமாயின், மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் தன்னுடைய மக்களை பெரிய போராட்டத்தில் ஈடுபடுத்தி அவர்களைக்காட்டிக்கொ

டுக்க நான் … இந்தக் … இணைந்து … மூலம் எங் … வகையான … சிநேகபூர் … தொரு அ … பில் கவ … ஒரு நாட் … மும் தலை … சில வகை … நல்லாட்சி … தமிழர்கள் … பான்மை … கேட்டறிந் … நிச்சயமாக … எங்களு … சந்தர்ப்பங் … பிலும் ப … துப் பார்க் … இழந்துவி … சிந்தித்துக் … டம் பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லுப்போனால் சொல்லுப் போச்சு...!



மூகத்துக்கு அழகு தருவதில் பற்களுக்கும் முக்கிய பங்குண்டு. மனிதகுல வரலாற்றிலேயே முன்னொருபோதும் இல்லாத விதத்தில் பற்கள் உறுதியாகவும் பலமாகவும் இருப்பது இன்றைய நவீன காலத்திலேயே ஆகும். பற்களை எவ்வாறு சுத்தம் செய்ய இயலும் என்ற விடயம் புரியாமல் பல ஆயிரம் வருடங்கள் மனிதன் கைக்குக்கிடைத்ததையெல்லாம் வாயில் போட்டுப் பற்களைத் தேய்த்துச் சுத்தப்படுத்த முயன்றிருக்கின்றான்.

பல நூறு வருடங்களுக்கு முன்னர் கீழைத்தேய வாசிகள் செங்கல் தூள், சாம்பல் போன்றவற்றைப் பயன்படுத்திப் பல் துலக்க ஆரம்பித்த சமயம், மேலைத்தேய வாசிகள் மீன் எலும்புத்தூள், முட்டைக் கோதுத்தூள் போன்றவற்றால் பற்களைச் சுத்தப்படுத்தி வந்தனர்.

இதற்கெல்லாம் வெகுகாலத்துக்கு முன்பே ரோமானியர்களிடமும் பல் துலக்கும் வழக்கம் இருந்துள்ளது. தேனில் தோய்த்தெடுத்த துணித்துண்டுகளையே அவர்கள் பல் துலக்கப் பயன்படுத்தினராம். பண்டைய கிரேக்க நாட்டு மக்கள் கொத்தமல்லி இலையைக் காயவைத்துத் தூளாக்கிப் பல்துலக்கப் பயன்படுத்தியுள்ளனர். இது அவர்களுக்குப் புத்தம்புது மணமூச்சைக் கொடுத்ததால் அதனை மனிதனின் முதன் முதலான 'மவுத்வாஷ்' எனக் கொள்ள முடியுமல்லவா?

பற்பசையைப் பயன்படுத்திப் பற்களைச் சுத்தம் செய்யும் முறை அறிமுகமாவதற்கு முன்னரே, பற்றூரிகை கொண்டு பற்களை உரஞ்சிச் சுத்தப்படுத்தும் வழக்கம் ஆரம்பமாகி விட்டிருந்தது. அந்த வகையில் இந்தியர்கள் பயன்படுத்திய வேப்பங்குச்சியும், ஆலங்குச்சியுமே உலகத்தின் முதன் முதலான பற்றூரிகை எனக் கொள்ள முடியும். இப்போது புழக்கத்திலுள்ள பற்றூரிகை போலத் தோற்றத்தில் ஒற்றுமை கொண்ட பற்றூரிகை என்றால் அது 1500ஆம் ஆண்டளவில் சீனாவில் புழக்கத்தில் இருந்த பற்றூரிகைதான்.

மனித உடலின் அவயங்களில் பற்களும் மிக முக்கியத்துவம் கொண்டவையாகும். வாயில் பற்கள் ஒழுங்காக இல்லாவிட்டால் மனிதனின் பேச்சு மற்றவர்களுக்கு விளங்கக் கூடியதாக அமையாது. இதனாலன்றோ 'பல்லுப் போனால் சொல்லுப் போச்சு' என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

- ரீ.வசந்தா, உரும்பிராய்.

# நான், எனது, என்பதெல்லாம் செருக்கின் வெளிப்பாடு



பாண்டவர்கள் வனவாசம் முடித்த பிறகு அவர்களுக்குரிய நாட்டைக் கேட்க அவர்களின் தூதராகக் கண்ணபிரான் அஸ்தினாபுரம் சென்றார். ராஜவீதியில் கண்ணனைக் காணப் பலரும் தங்கள் மாளிகை வாசலில் நின்றிருந்தனர். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் தனது ரதத்தை நிறுத்திய பகவான் ''இதுயாருடைய வீடு?'' என்று கேட்டார். எல்லோருமே, ''இந்த அழகிய மாளிகை என்னுடையது கண்ணா!'' என்று கர்வமும் பெருமிதமும் பொங்கச் சொன்னார்கள்.

பகவான் தனது ரதத்திலிருந்து இறங்கவில்லை. விதுரனின் வீடு வந்தது. ''இது யாருடையது?'' - பகவான் தனது வழக்கமான கேள்வியைக் கேட்டார்.

விதுரன் வணக்கத்துடன் வாசலில் நின்றிருந்தான். ''கண்ணா! உனக்குத் தெரியாததா? இது உன்னுடைய வீடல்லவா!'' அன்பும் பக்தியும் குழைந்த குரலில் விதுரன் சொல்ல, பகவான் அகமகிழ்ந்து அந்த வீட்டுக்குள் மட்டும் சென்றார்.

எனது என்கிற செருக்கை ஒழித்தவர் இடத்துக்கே பகவான் வந்து நின்று அருள் பாலிப்பார். ★★★

- ஜெ.கண்ணன், ஓட்டுமடம்.

# நாடகங்கள், நாவல்களால் புகழ் எட்டியவர் பேர்னாட்ஷா



இலக்கியத்துக்காக நோபல் பரிசுபெற்ற புகழ்பூத்த நாடக எழுத்தாளர் 'பேர்னாட்ஷா' கிண்டலாகப் பேசுவதில் வல்லவர்.

1925ஆம்ஆண்டில் இலக்கியத்துக்கான நோபால் பரிசுக்கு அவரது பெயர் அறிவிக்கப்பட்டபோது ''இந்த வருடம் நான் நாடகம் எதனையும் எழுதவில்லை. அவ்வாறு எழுதாமல் விட்டதற்காகவா இந்தப்பரிசு'' எனக் கிண்டலாடித்தாராம். ''இல்லையில்லை இது நீங்கள் ஏற்கனவே எழுதிய 'செயின்ட் ஜான்' என்ற நாடகத்தின் சிறப்புக்கானது' என நோபல் பரிசுக்குரியோரைத் தேர்ந்தெடுக்கும் குழு தெரிவித்த போது இது, ''நடுக்கடலில் தத்தளிக்கும் ஒருவன் கஷ்டப்பட்டுக் கரைசேர்ந்த பின்னர் அவனுக்குக் காற்று நிரப்பிய ரப்பர் ரியூப் கொடுத்தது மாதிரி இருக்கின்றது'' என்று மீண்டும் கிண்டல் செய்தாராம்.

தமக்குக் கிடைத்த அந்தப் பரிசை அவர் நேரில் சென்று வாங்கிக் கொள்ளவில்லை. பரிசுத் தொகை வீடுதேடி வந்தபோது அதனை இலக்கியப் பணிகளுக்குச் செலவிடக்கொடுத்துவிட்டார்.

ஷேக்ஸ்பியருக்குப் பிறகு ஆங்கில இலக்கிய உலகுக்குக் கிடைத்த பொக்கிஷம் எனப் புகழப்பட்ட 'பேர்னாட்ஷா'வுக்கு 'ஆர்டர்ஒவ் மெரிட்' என்ற உயர் விருது வழங்குவதாக அறிவிப்பு வெளிவந்தபோது தமக்கேயுரிய கிண்டல் பாணியில் ''இந்த விருதை நானே எனக்கு எப்போதோ கொடுத்து விட்டபடியால் இப்போது இது எனக்குத் தேவையில்லை'' என்றாராம்.

நாடகங்கள் எழுத ஆரம்பிப்பதற்கு முன்னர் இசை நிகழ்ச்சிகளின் விமர்சகராக இருந்த ஷாவின் விமர்சனங்களில் கிண்டல், நையாண்டி பெருமளவில் நிறைந்திருக்கும். ஆங்கில இலக்கிய ஆர்வலரான பிரிட்டிஷ் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சிலுக்கு ஒருமுறை தமது நாடகத்தைப் பார்ப்பதற்காக இரண்டு நுழைவுச் சீட்டுக்களை அனுப்பிவைத்த பேர்னாட்ஷா கூடவே ''உங்களுடன் நண்பர் ஒருவரையும் அழைத்துவர வசதியாகவே இந்த இரு நுழைவுச்சீட்டுக்கள்- அப்படி உங்களுக்கு நண்பர் எவரேனும் இருந்தால்'' - எனக் கிண்டல் பாணியில் ஒரு குறிப்பையும் அனுப்பியிருந்தார். அதற்கு வின்சன்ட் சேர்ச்சிலோ ''இன்று வரமுடியவில்லை. நாளைய நாடகத்துக்கு இரண்டு நுழைவுச் சீட்டுக்கள் அனுப்பிவையுங்கள்- நாளைவரை நாடகம் நடக்குமானால்-'' என அதே கிண்டல் பாணியிலான குறிப்புடன் நுழைவுச் சீட்டுக்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

தாம் எழுதிய நாடகங்கள் மூலம் இங்கிலாந்து மக்களின் பாராட்டுதல்களையும் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்ட பேர்னாட்ஷா, பள்ளிக் கூடப்படிப்பைக் கூட முழுமையாக முடிக்காதவர் என்பது ஆச்சரியம் தரும் ஒன்றல்லவா? ஆனால் இளம் வயதிலேயே பைபிள் முதல் ஷேக்ஸ்பியர் வரை அத்தனை புத்தங்களையும் ஆர்வத்துடன் படித்து முடித்தவர் வழமையாக மற்றவர்களுடன் பேசவோ பழகவோ கூச்சப் பட்ட இவர் பிற்காலத்தில் மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கினார். 1856ஆம் ஆண்டில் பிறந்த பேர்னாட்ஷா, தமது 42ஆவது வயதிலேயே 'கரோனெட்' என்ற இளம் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். வாழ்க்கையில் மது அருந்துதல், புகைத்தல் போன்ற எந்தவித கெட்ட பழக்கங்களும் இவரிடம் இருந்ததில்லை. ★★★

- த.சுரன், நல்லூர்.




# புறா சமாதானத்தின் சின்னமானது எப்படி!

வீட்டில் செல்லமாக வளர்க்கப்படும் பறவைகளுள் புறாவும் ஒன்று. அழகான இச் சிறிய பறவை கட்டான உடல் கொண்டது. இதனது இறகுகள் பட்டுப்போன்று மென்மையாக இருக்கும். புறாக்கள் பல நிறங்களில் உள்ளன. முற்றிலும் வெள்ளை நிறமான புறாக்களும் உள்ளன. புறா, சமாதானத்தின் சின்னமாக உலகெங்கிலும் கருதப்படுகிறது.

புறாக்களில் பல இனங்கள் உள்ளன. துருவப்பிரதேசங்கள் தவிர உலகின் ஏனைய அனைத்து நாடுகளிலும் இவை வாழ்கின்றன. கோயில் கோபுரங்களிலும் கடைத்தெருக்களிலும் காணப்படும் ஒரு புறா இனத்துக்கு மாடப்புறா என்று பெயர். மாடப்புறாவின் உடல் சாம்பல் நிறமானது. இவை கழுத்தில் பச்சையும், கருஞ்சிவப்பும் கலந்த அழகான இறகுகள் கொண்டவை. கால்கள் சிவப்பு நிறமானவை.

மணிப்புறா, தவிட்டுப்புறா, பச்சைப்புறா எனப் புறாக்களில் சில இனங்கள் உள்ளன. இவை உருவில் சிறியவை. விசிறிவால் புறா என்னும் ஆடும் புறா இனம் வீடுகளில் வளர்க்கப்படுகின்றது. சாதாரண புறாக்களுக்கு 12 வால் இறகுகளும் ஆடும் புறாவுக்கு 40 வரையான இறகுகளும் உள்ளன. ஆடும் புறா தனது இறகுகளை விரித்து ஆடும் போது அழகாகத் தோன்றும்.

புறாக்கள் தானியங்கள் மற்றும் விதைகளைத் தமது உணவாகக் கொள்பவை. இரையைச் சேகரித்து வைத்துக் கொள்ளவென புறாவின் உடம்பினுள் தீனிப்பை என்ற விஷேட உறுப்பு அமைந்திருப்பது சிறப்பு அம்சமாகும். வேண்டியபோது தீனிப்பையில் தான் சேகரித்து வைத்திருக்கும் உணவின் ஒரு பகுதியைத் தனது இரைப்பைக்குள் செலுத்தி சமிபாடு அடைய வைக்கும் ஆற்றல் புறாவுக்கு உள்ளது. பிற பறவைகள் தமது அலகில் நீரை நிரப்பி தலையை உயர்த்தி நீரைப் பருகுவது போலல்லாது தலையை உயர்த்தாமலே நீரை உறிஞ்சிக் குடிக்கும் திறன் புறாவின் விஷேட அம்சமாகும்.

புறாக்களில் ஆணும் பெண்ணும் இணைபிரியாது வாழ்கின்றன. இரண்டுமே அடை காக்கின்றன. முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் கண் திறவாத நிலையில் ஆண், பெண் புறாக்கள் இரண்டுமே குஞ்சுகளுக்கு உணவூட்டும். தமது தீனிப்பையில் சுரக்கும் ஒருவகை தயிர் போன்ற ஒரு பொருளையும் இவை தம் பிள்ளைகளுக்கு ஊட்டுகின்றன.

புறாக்கள் இடைவிடாது நெடுந்தொலைவு பறக்கக்கூடிய தன்மை கொண்டவை. முற்காலத்தில் ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கு செய்திகளை அனுப்பப் புறாக்களைப் பயன்படுத்தி வந்தனர்.

- ப.பதுனா,
சிவப்பிரகாசம் வீதி,யாழ்.



# பண்டைய சிந்துவெளி நாகரிகத்தை வெளிக்கொணர்ந்த புதைபொருள் ஆய்வு



புராதன நகரான மொகஞ்சதாரோ இருந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது 1923 ஆம் ஆண்டில் அந்நகரமும், ஹரப்பா என்ற இடத்தில் இன்னொரு நகரமும் மீட்டெடுக்கப்பட்டன. ஆரியர் வருகைக்கு முன்னர் இந்தியப் பிரதேசம் மிகச் சிறந்த நாகரிகத்தைக் கொண்டிருந்துள்ளது என்பதை இந்த நகரங்கள் எடுத்துக் காட்டுவனவாகவுள்ளன.

சிந்துமாகாணத்தில் 'வார்க்கனா' என்ற மலைப்பகுதியில் அகழ்வராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வின்போது 1923ஆம் ஆண்டு 5000 ஆண்டுகாலம் புதைந்து கிடந்த புராதன நகரத்தைக்கண்டு பிடித்தனர். 'மொகஞ்ச தாரோ' என்று அந்த மலை அழைக்கப்பட்டது. அதன்கருத்து இறந்தவர்களின் புதை குழிகளைக்கொண்ட மலை என்பதாகும். அங்கிருந்து 750 கிலோமீற்றர் தொலைவில் ஹரப்பா என்ற இடத்தில் இன்னொரு நகரமும் கண்டுபிடிக்கப்பட்டது. பஞ்சாப்பில் ரவி ஆற்றங்கரையில் இந்நகரம் காணப்பட்டது. இந்த நகரங்கள் செழித்து நின்ற நாகரிகமானது பழங்கற்காலத்துக்கும் வெண்கல காலத்துக்கும் உரியவை என்று ஆய்வாளர்கள் நிர்ணயித்துள்ளனர். இவை மெஸபத்தேனிய, சுமேரியத் மற்றும் பாபிலோனியன் நாகரிகங்களுக்கு சமமானவை என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. - ரம்யன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்பான

## பெற்றோர்களே,

CONCEPT STUDIO 2430

## நீங்களும் நாடும் வளமடைய
## மாற்றுவோம் ஆட்சியை!

பொருட்களின் விலை, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், காஸ் விலை, மின்கட்டணம், நீர்க்கட்டணம் ஆகியவற்றை உடனடியாகக் குறைக்கும்*

## ஐக்கிய தேசிய முன்னணியை

X

## ஆட்சியில் ஏற்றுவோம்.

*எமது கொள்கைப் பிரகடனத்தை வாசிக்கவும் அல்லது www.unfmanifesto.com ஐப் பார்வையிடவும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதீத அன்பு



காப்பியம் ஒன்றில் திருப்பு முனையாக அமையும் பகுதிக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. கம்பராமாயணத்தில் இப் பெருமையைப் பெறும் பகுதி அயோத்தியா காண்டமாகும். மிகக் குறைந்த பாத்திர வார்ப்புக்களுடன் அயோத்தியா காண்டத்தைக் கம்பன் அழகுறப் படைத்தான்.

பிள்ளை வளர்ப்பில் பெற்றோரின் பங்கு பற்றிப் பிரஸ்தாபிப்போர் அறிந்து கொள்ள வேண்டிய அரிய சில செய்திகள் அயோத்தியா காண்டத்தில் பொதிந்துள்ளன. அத்தகு செய்திகளுள் ஒன்றைக் காண்போம்.

தசரதச் சக்கரவர்த்தி, எவ்வளவு தான் ஆற்றல் மிக்கவன் என்றாலும் தன் குடும்ப நிலையில் மனைவியரையும் புதல்வர்களையும் புரிந்து கொள்வதில் குறைபாடுடையவனாகவே விளங்கினான். இராமன் மீது அவன் கொண்டிருந்த அதீத அன்பே மேற்கண்ட குற்றச்சாட்டிற்கான அடிப்படையாகும்.

## இலக்கியக் காட்சி 35

இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் என நான்கு பிள்ளைகளைப் பெற்றாலும் இராமனைத் தவிர ஏனைய பிள்ளைகளை இவன் நினைத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

விசுவாமித்திர முனிவர் தசரதனிடம் வந்து 'நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' எனக் கேட்டபோது தசரதன் பதறிப் போனான்.

'கரிய செம்மல்' என்ற நிலையில் தசரதனுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். இராமனைப் போலப் பரதனும் கறுப்பு நிறமுடையவன்.

**'தள்ள அரிய பெரு நீதித்**
**தனி ஆறு புக மண்டும்**
**பள்ளம் எனும் தகையானை**
**பரதன் எனும் பெயரானை**
**எள்ள அரிய குணத்தாலும்**
**எழிலாலும் இவ் இருந்த**
**வள்ளலையே அனையானை**
**கேகயர்கோன் மகன் பயந்தான்'**

என்பது விசுவாமித்திரருடைய வாக்கு. மேலும் ''நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்'' என்ற ஓடக்காரக் குகனது கூற்றும் இராமனது தோற்றத்தை ஒத்தவனே பரதன் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

''மரகத மலை என வளர்ந்த தோளினான்' என்ற கம்பனது கூற்றும் பரதனது நிறத்தைச் சான்றுப் படுத்துகின்றது. மரகதம் பச்சை நிறமுடைய மணி. எனவே பரதனது நிறமும் கருமையானதே.

'கரிய செம்மல் ஒருவன்' என்ற தொடர் எப்படி இராமனை மட்டும் குறிக்க முடியும்? என நோக்கினால் 'ஒருவன் என்ற சொல் ஒப்பற்றவன் என்ற பொருள் தருகின்றமையை நாடி, இராமனையே விசுவாமித்திரர் குறித்தார் என விடை காணமுடியும்.

பிறரது சொற்களின் பொருளை நுட்பமாகத் தேர்ந்து பொருள் அறியும் திறம் பெற்ற தசரதன் தன் குடும்ப விடயத்தில் எப்படிச் செயற்பட்டான்? என்பதே இங்குள்ள வாதமாகும்.

இராமன் காட்டிற்குச் செல்லும் சூழல். இவர்களைக் காட்டில் விடுவதற்காகச் சுமந்திரன் தேரில் ஏற்றிச் சென்றான். இராமன் காட்டிற்கு செல்கிறான் என்ற மாத்திரத்திலேயே மூர்ச்சையற்று வீழ்ந்த தசரதன்; தேர் அவர்களை இறக்கி விட்டு வந்த நிலையில்மூர்ச்சை தெளிந்தான். 'வீரன் வந்தனனோ? என்று இராமன் வருகை பற்றி வசிட்டரிடம் கேட்கிறான். 'இல்லை' என வசிட்டரிடமிருந்து பதில் கிடைக்கிறது.

வசிட்டரது வாசகத்தையும் தசரதன் நம்பவில்லை. சுமந்திரனை தன் இருப்பிடம் அழைத்தான்.

**''நாயகன் பின்னும் தன் தேர்ப்**
**பாகனை நோக்கி நம்பி**
**சேயனோ? அணியனோ? என்று**
**உரைத்தலும் தேர் வலானும்**
**வேய் உயர் கானம் தானும்**
**தம்பியும் மிதிலைப் பொன்னும்**
**போயினன் என்றான், என்ற**
**போழ்தத்தே ஆவி போனான்''**

இராமன் தொலைவில் உள்ளானோ? அண்மையில் உள்ளானோ? எனத் தேர்ப் பாகனிடம் கேட்டுப் பார்த்தான். இராமன் போயினன் என்று சுமந்திரன் சொன்ன போதே தசரதன் உயிரை விட்டு விட்டான்.

தசரதன், இராமனைத் தனது உயிராகவே கருதி வந்தான்.

மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன் என்ற கம்பரது கூற்று இதனை உறுதிப்படுத்துகின்றது.

ஒரு பக்கம் சார்ந்து செலுத்திய அதீத அன்பு தரசதனது சிந்தையையே மறைத்து விடுகின்றது. இராமன் தனது கொள்கையில் உறுதிப்பாடானவன் என்பதையோ ஆதலால் அவன் திரும்பி வந்திருக்க மாட்டான் என்பதையோ இராமனுக்கு ஒப்பான ஒருவன் பரதன் என்பதையோ அவன் உணர்ந்திருக்கவில்லை. இராமன் மீதிருந்த அதீத அன்பு இவை எல்லாவற்றையும் மறைத்து நின்றது.

**''சொன்னேன் இன்றே இவள் என்**
**தாரம் அல்லள் துறந்தேன்**
**மன்னே ஆவான் வரும் அப்**
**பரதன் தனையும் மகன் என்று**
**உன்னேன் முனிவா அவனும்**
**ஆகான் உரிமைக்கு''**

எனச் சத்தியமிடுகின்றான். பண்பில் உயர்ந்த பரதனால் நீர்க் கடன் செய்யப்படுவதற்குரிய தகுதிப்பாட்டையும் தானாகவே இழந்தான்.

பிள்ளைகளிடம் அன்பு காட்டுவதில் ஏற்ற தன்மை பேணப்பட வேண்டும். ஒரு பிள்ளையிடம் மட்டும் காட்டும் அதீத அன்பு பெற்றோரைப் பிழையான தடத்திற்கு இட்டுச் செல்லலாம். தசரதன் இராமன் மீதுவெளிப்படுத்திய அதீத அன்பு, இராமனையோ பரதனையோ அவனால் முழுமையாக அறிய விடாமல் மறைத்து நின்றது. அன்பு காட்டுவதிலும் அவதானம் தேவையல்லவா?✱



ச.லலீசன், விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

---

சிறுகதை

# என்னதான் நடக்கின்றது?

மல்லிகை சி.குமார்.

அந்த வீட்டின் ஸ்தோப்பில் ஒரு குப்பி விளக்கு புகையைக் கக்கியவாறு எரிந்து கொண்டிருக்கிறது.

அதன் புகை மூக்கில் ஏறுவதைக் கூடப் பொருட்படுத்தாமல் இந்தத் தோட்டத்தின் இன்றைய நிலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றனர், அண்ணாமலையும் அடுத்த வீட்டு ஆறுமுகமும்.

'அண்ணாமலை...... இந்தத் தோட்டத்து சனங்க தலையில இப்படியொரு இடி விழுமென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கல்ல'

'என்ன ......ஆர்மோம்..... நான் மட்டும் எதிர்பார்த்தேனாக்கும். யாரோ ஒரு முதலாளி இந்தத் தோட்டத்தை வாங்கப்போறார் என்று சொன்னாங்க. அட, அந்த முதலாளி வாங்கினா என்னாக்குடி முழுகிடப் போவுது. நமக்கு வேலை கொடுத்துத்தானே தீருவான் என்று அசட்டையாகத்தான் இருந்தேன். ஆனா....

> 1970 களில் ஈழத்துப் புனைகதைத் துறையில் தம்மையும் இணைத்துக் கொண்டதன் மூலம் ஈழத்துச் சிறுகதைத் துறைக்குப் பங்களிப்பு வழங்கிய மலையக எழுத்தாளர்களில் மல்லிகை சி.குமாரும் குறிப்பிடத்தக்கவர்.
>
> 'மல்லிகை' சஞ்சிகை வழங்கிய ஊக்குவிப்பின் மூலம் தரமான பல தமிழ்ச் சிறுகதைகளை எழுதியுள்ளார்.
>
> மல்லிகைச் சிறுகதைகள் இரண்டாவது தொகுதியில் இடம்பெற்றுள்ள அவரது ''என்னதான் நடக்கின்றது?'' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

இப்பத் தலைக்கு மேலே வெள்ளம் வரப்போவுது.'

'எல்லாப் பயிலுங்களும் ஒன்னா சேர்த்துக்கிட்டு நம்ம தொழிலாளிங்க வயிற்றில் மண்ணை வாரிப் போட்டானுங்களே...... அவனுங்கலெல்லாம் உருப்படுவானா?'' என்று உளம் நொந்து சொன்ன அண்ணாமலை எச்சிலைக் காறிப் பக்கத்திலுள்ள பணிக்கத்தில் துப்பிவிட்டு 'ஆர்மோம்...... நாற்பது வருஷத்து மேல நாம இந்தத் தோட்டத்தில் வாழ்ந்திட்டோம். ஆனா இப்படியொரு அநியாயம் இதுவரைக்கும் நடக்கல்ல. இந்தத் தோட்டத்தை அடுத்த முதலாளிக்கு விற்கப் போறன். அதுக்கப்புறம் உங்களுக்கெல்லாம் இங்கே வேலை கிடைக்காமல் போனாலும் போகுமுன்னு அந்தப் பழைய துரை ஒரு வார்த்தை சொன்னான்......? பாவி மூடிவச்சே கழுத்தறுத்திட்டான். அட.... அவன்தான் அப்பிடி செஞ்சிட்டான்னா இந்த தோட்டத்தைப் புதுசா வாங்கின முதலாளி என்ன சொல்லுறான் தெரியுமா?

'எனக்கு தேயிலை தேவையில்லை. நான் மாட்டுப் பண்ணை வைத்து நடத்தப் போறன். அதை எல்லாம் கவனிக்க வெளியிடத்திலிருந்து ஆள்கள் வருவாங்க' என்று சட்டம் போட்டிட்டான். அப்படினா.... இவ்வளவு காலமும் இந்த நிலத்தில் உழைத்த நம்ம கதி,' கேள்விக் குறியை எழுப்பிய அண்ணாமலை ஆறுமுகத்தை நோக்கினார்.

'நம்மகதி என்னவா.....? அதுதான் அந்த புது முதலாளி நேத்து சொன்னானாம்.... மூணு நாளைக்குள்ள இங்கு....... இந்த மண்ணில் உழைச்ச நம்ம தொழிலாளிங்கெல்லாம் இந்த நிலத்தை விட்டு வெளியேறிடனும்னு கட்டளை போட்டுட்டானாம் கட்டளை!' ஆத்திரத்தோடு சொன்ன ஆறுமுகத்தின் கண்கள் சிவந்தும் வார்த்தைகள் சினந்துமிருந்தன.

வெளிப்புற வாசல் நிலையில் சாய்ந்தபடி இவர்களின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ராக்கம்மாவை ஏறிட்டுப் பார்த்தார் அண்ணாமலை. விளக்கொளியில் அவளின் முகத்தில் பொதிந்து கி[illegible] அவரால் நன்[illegible] ராக்கம்மா கார்த்திகேசு வரவுக்காகத்தான் நிலைப்படியில் காத்து நிற்கின்றாள் என்று தனக்குள் எண்ணிக்கொண்ட அண்ணாமலை வலதுபுறக் காதில் செருகி வைத்திருந்த சுருட்டுத் துண்டை எடுத்து விளக்குச் சுடரில் காட்டி இரண்டு இழுப்பு இழுத்துவிட்டு வாயில் ஊறிய எச்சிலைத் துப்பி விட்டு 'ஆர்மோம்...... நல்மள விடுய்யா...... நாமெல்லாம் ஐந்து வருஷத்துக்கு முன்னமே பென்ஷன் வாங்கி ஐந்தே நாளில் தின்னு கழிச்ச கட்டைங்க. இன்னைக்கோ நாளைக்கோ நாலாள் தலை மேல் காட்டைப் பார்த்துப் போறவுக. ஆனா.... இன்னைக்கி இந்த தோட்டத்தில் வாழும் இளசுகளை எண்ணிப் பாரையா. அதுகளோட எதிர்காலம் என்னாகும்? எம் மகன் காத்தியையே எடுத்துக்குவோம். அவனுக்குக் கல்யாணங்கட்டி இன்னும் ஆறு மாசம் முடியல்ல. அதுக்குள்ள அவன் மனைவியோட வாழும் இந்த வீட்டிற்கே இப்படியொரு இக்கட்டு வந்திச்ச. ரவ்வோடு ரவ்வா வந்து கூட்டுக் கூரையைப் பிரித்துப் போட்டாலும் போடுவான் இந்தப் புது முதலாளி. அதுக்கப்புறம் நாமெல்லாம் நடுத்தெருவில் தானே நிற்கணும்......' என்று வேதனையோடு சொன்னார் அண்ணாமலை.

'இந்தா.... இதுக்கெல்லாம் நாம கவலைப்படக்கூடாது. காலம் காலமாக

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 143**

நாம இந்த நிலத்தில் உழைச்சவுங்க. நேத்து வந்த அந்தப்புதுப்பய நம்மை எல்லாம் ஓடுன்னு சொன்னாப்பில நாம ஓடனுமாக்கும்!' துணிவோடு நிமிர்ந்து சொன்ன ஆறுமுகம், பின் ஏதோ ஒரு நினைவில் முகத்தை முழங்காலுகளுக்கிடையில் புதைத்துக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தார். கையில் கனிந்து கொண்டிருக்கும் சுருட்டை இழுத்தபடியே ராக்கம்மாவைப் பார்த்தார் அண்ணாமலை.

அவள் கதவில் சாய்ந்தபடி நிலவொளியில் மங்கலாகத் தெரியும் வெளிச்சூழலை நோக்கிக் கொண்டிருந்தாள்.

'இந்த....... புள்ளே! நீ ஏம்மா இப்படி வாசற்படியிலேயே நிற்கிற? உள்ள போம்மா. கார்த்தி இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடுவான் தானே. நீ உள்ளப் போய் இரும்மா......'

அண்ணாமலையை வெறித்துப் பார்த்த ராக்கம்மா 'மாமா.... எனக்கென்னமோ பயமா இருக்கு அவரை இன்னும் காணோமே......?'

'இந்தாம்மா...... நீ ஏன் இதுக்கு இப்படி பயந்து சாவுர? அப்படி அவன் எங்க போயிருக்கான்.நம்ம சங்கத்து ஜில்லாவுக்குத்தானே. அதுவும் அவன் மட்டுமா போயிருக்கான். இல்லையே....... பத்தோட பதினொன்னா போயிருக்கான். பிரதிநிதி அய்யா நமக்கெல்லாம் என்னா முடிவு சொல்லப் போறாங்கன்னு கேக்கப் போனவுங்க. எப்படியும் நேரம் தாழ்த்தித் தானே வருவாங்க. நீ இதுக்கெல்லாம் சங்கடப் படலாமா? போ..... பனியில் நனையாமல் உள்ளப் போம்மா.....' என்று ஆறுதலாகச் சொன்னார் ஆறுமுகம்.

'ஆமாய்யா ஆர்மோம்.... நான் சொல்லியும் அதுக்காதில் விழுல்ல. நீயும் வேற சொல்லய்யா' அலுத்துக் கொண்டார் அண்ணாமலை.

ராக்கம்மா அந்த இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். 'நான் அவரைக் காணத் துடித்துக் கொண்டிருக்கின்றேன். அந்தத் துடிப்பைப் பற்றி இவர்களுக்கென்ன தெரியும்.....' தனக்குள் எண்ணி நொந்து கொண்ட ராக்கம்மா வெளியில் எட்டிப் பார்த்தாள். பக்கத்திலுள்ள குடியிருப்புகளெல்லாம் நில வொளியில் மங்கலாக..... பயங்கர அமைதிக்குள் மூடிக்கிடந்தன. எதிரே உள்ள குன்றில் கட்டப்பட்டிருக்கும் துரை பங்களாவின் முகப்பில் எரிந்து கொண்டிருக்கும் மின் விளக்கு மட்டும் பள்ளத்தில் உள்ள ஏழைத் தொழிலாளியின் குடியிருப்பைப் பார்த்து ஏளனம் செய்வது போல பளிச் சென்று எரிந்து கொண்டிருந்தது. அந்த ஒளியைப் பார்க்கப் பார்க்க

(18ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அறிவை அதிகரிக்கும் மீன் உணவுகள்

நீங்கள் புத்திசாலியாக மாற வேண்டுமா? அப்படி என்றால் மீன் சாப்பிடுங்கள் என்கிறார்கள் சுவீடன் ஆராய்ச்சியாளர்கள். சுமார் 5 ஆயிரம் பேரை வைத்து இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அவர்களின் உணவுப் பழக்கவழக்கங்களை ஆய்வு செய்தார்கள். ஆய்வின் முடிவில், வாரத்திற்கு ஒன்றும் மேற்பட்ட முறை மீன் உணவு உட்கொண்டவர்கள், அதைவிடக் குறைவாக மீன் உட்கொண்டவர்கள் மற்றும் மீனே சாப்பிடாதவர்களைக் காட்டிலும் அதிக அறிவுடன் செயற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.



இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறும்போது, 15 வயதுக்கு மேல் மீன் உணவு அதிகம் உட்கொள்வது அறிவு வளர்ச்சிக்கு உதவுகிறது என்பது எங்கள் ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. வாரத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட முறை மீன் உணவை எடுத்துக்கொள் பவர்கள்தான் இந்தப் பலனைப் பெற முடியும். அதனால், மீன் உணவுகளைத் தவிர்க்காமல் அடிக்கடி எடுத்துக்கொள்வது நல்லது என்றனர்.

தாய்மைக் காலத்தில் வாரம் இரண்டு முறையேனும் மீன் உண்ணும் தாய்மார்களின் குழந்தைகள் அறிவில் படு சுட்டியாக இருப்பார்களாம். அமெரிக்காவில் நடத்தப்பட்ட விரிவான ஆய்வு ஒன்று தாய்மார்களின் உணவுப் பழக்கவழக்கத்திற்கும், பிறந்த குழந்தைகளின் வளர்ச்சிக்கும் இடையேயான ஒற்றுமை வேற்றுமைகள் குறித்து ஆராய்ந்தது.

இந்த ஆராய்ச்சி நல்ல மீன் வகைகளை அடிக்கடி உண்ணும் தாய்மார்களின் குழந்தைகள், மீன் உணவு உண்ணாத தாய்மார்களின் குழந்தைகளை விட, அறிவுக்கூர்மை அதிகம் உடையவர்களாக இருக்கிறார்கள் என முடிவு வெளியிட்டிருக்கிறது.


தாய்மார்களின் உணவுப் பழக்கம் ஆராயப்பட்டது. பின்னர் குழந்தைகளுக்கு மூன்று வயதான போது அவர்களுக்கு சில சோதனைகள் கொடுக்கப்பட்டன. பார்வை, எளிதில் உள்வாங்குதல், கவனம் சிதறாமை போன்ற வகைகளில் நடந்த இந்தச் சோதனையில் முன்னிலை வகித்தவர்கள் மீன் உணவு உட்கொண்ட தாய்மாரின் குழந்தைகளே.

மீன்களை உண்ணும் மீன்கள், மற்றும் அதிக காலம் வாழும் மீன்கள் போன்றவை பாதரச அளவு அதிகம் கொண்ட மீன்கள் எனும் வரிசையில் வருகின்றன. அத்தகைய மீன்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் இந்த ஆராய்ச்சி அறிவுறுத்துகிறது. பாதரச அளவு குறைந்த அளவு உள்ள மீன்களே தேவையானது என்பது இந்த ஆராய்ச்சியின் முடிவாகும்.

மீன் சாப்பிடும் பழக்கம் உள்ளவர் எந்த நோய் பற்றியும் கவலைப்பட வேண்டாம். மீன் சாப்பிடும் பழக்கம் உள்ளவர் என்றால், நீங்கள் எந்தநோய் பற்றியும் கவலைப்பட வேண்டாம்! ஆஸ்துமா முதல் இருதயநோய் வரை, எதுவும் உங்களை நெருங்காது.

அநேகமான மருத்துவ நிபுணர்கள், மீன் உணவில் உள்ள மருத்துவ குணங்கள் பற்றி பல முறை எடுத்துச்சொல்லிவிட்டனர்.

மீன் உணவில், கொழுப்பு அறவே இல்லை. அதிகமாக புரோட்டீன் சத்து உள்ளது. வாரத்தில் குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு முறையாவது, மீன் உணவு சாப்பிட்டு வருவது மிக மிக நல்லது.★★★★★★★★★★★★★★★★★★★★★★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறைக்கிறதே இந்த...... .....யதார்த்தம்.....!

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஏற்பட்ட நீண்டவரட்சி அந்தச் சிற்றூர் மக்களை வாட்டி வதைத்தது. கிணறு, குளங்களின் நீர்மட்டம் குறைய, பயிர் பச்சைகள் கருக, கால் நடைகள் தாகத்தைத் தீர்க்க முடியாமல் தவித்தன; குழந்தைகளும் கிழவர்களும் வெப்பம் தாங்க முடியாமல் அதில் வெந்து சுருண்டனர்.

ஊரிலுள்ள பிரமுகர்கள் ஒன்று கூடினர். வரட்சியைப் போக்கும் வழி பற்றிக் கலந்துரையாடினர். இயற்கையின் சீற்றத்தைத் தணிக்க வேண்டுமானால், தெய்வத்திற்குப் பிரீதி பண்ணுவதே ஒரே வழி என்றனர் முதியவர்கள் சிலர். ஊரின் நடுவே உள்ள பத்திரகாளி அம்பாளுக்குப் பாலாபிஷேகம் செய்தால் மழை பெய்யும்; வரட்சி நீங்கும் என்றும் கூறிய அவர்கள் முன்னர் இரண்டொரு தடவை நடந்ததை ஆதாரமாகக் காட்டினர்.

அனுபவம் மிக்கவர்களின் அந்த ஆலோசனை ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அபிஷேகத்துக்குரிய நாள் குறிக்கப்பட்டது. ஊரிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஆகக் குறைந்தது ஒரு குடம் பால் கொடுத்து உதவ வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

அபிஷேகத்துக்கு முதல் நாள் கோயில் வாசலில் மூடி போட்ட மிகப்பெரிய அண்டா ஒன்று வைக்கப்பட்டது. ஊரிலுள்ளோர் தமக்கு வசதியான வேளையில் தம் பங்களிப்பை வழங்குவதற்கு வாய்ப்பாகவே அந்த ஏற்பாடு. இரவு முழுவதும் மக்கள் அங்கு வருவதும் அண்டாவைத் திறந்து பாலை ஊற்றுவதும் போவதுமாகவே இருந்தனர்.

விடிந்தது;

பூர்வாங்கக் கிரியைகள் பூர்த்தியாகி, பாலாபிஷேகத்திற்குரிய நேரம் வந்தது.

அண்டாவிலுள்ள பாலை எடுத்துவரச் சென்றவர்கள் மிகப்பெரிய அதிர்ச்சிக்கு ஆளாகினர்.

அண்டாவிற்குள் பால் ஊற்றப்பட்ட அடையாளமே இல்லை! அண்டா முழுவதும் தண்ணீரே நிறைந்திருந்தது. பச்சைத் தண்ணீர்!

இரவிரவாக ஊரிலுள்ள ஒவ்வொருவரும் கொண்டுவந்து ஊற்றிய பால் எங்கே? பாலுக்குப் பதிலாகத் தண்ணீர் எப்படி வந்தது? பாலை எடுத்துவிட்டு தண்ணீரை நிரப்பியவர் யார்?

மந்திரமா? மாயமா? பத்திரகாளி அம்பாளின் திருவிளையாடலா?

> **யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையின் வெளியீடான "இந்து சாதனம்" இதழில் (2010 - மார்ச்) வெளியாகியுள்ள 'நடப்பும் நடிப்பும்' என்ற தலைப்பிலான ஆசிரிய தலையங்கம் இது. இன்றைய தமிழர் வாழ்வியலின் சூத்தையை வெளிப்படுத்துகின்றது இந்த ஆக்கம். பொருத்தம் கருதி அதனை இங்கு மீள் பிரசுரம் செய்கிறோம். (ஆ-ர்)**

காரணத்தை இரண்டொருவரால் ஊகிக்க முடிந்த தாயினும் அதை விண்டு சொல்லும் துணிவு அவர்களுக்கு ஏற்படவில்லை.

ஆனால் நேரம் செல்லச் செல்ல அது ஊகம் அல்ல என்பதும் அதுவே உண்மை என்பதும் பலருக்கு உறைக்கத் தொடங்கியது.

நடந்தது இதுதான்:

"ஊரிலுள்ள மற்ற எல்லோரும் பாலை கொண்டுவந்து அண்டாவை நிரப்பும்போது நான் மட்டும் தண்ணீரை ஊற்றினால், எவ்வித பாதிப்பும் ஏற்பட மாட்டாது; யாரும் என் பிழையைக் கண்டு பிடிக்கவும் மாட்டார்கள்" என ஒவ்வொருவருமே நினைத்துக் கொண்டு நம்பிக் கொண்டு பாலுக்குப் பதிலாகத் தண்ணீரையே ஊற்றிவிட்டார்கள்!

தாம் செய்வதை யாராவது கவனித்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற பயத்தில் அங்குமிங்கும் பார்த்தபடி பதற்றத்துடன் மூடியைத் திறந்து அவசர அவசரமாகத் தம் குடங்களைச் சரித்தபடியால், ஏற்கனவே அண்டாவிற்குள் என்ன இருந்தது என்பதை யாருமே கவனிக்கவில்லை!

பல ஆண்டுகளின் முன்னர் தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்த சைவத் தமிழ்ப் பெரியார் ஒருவர் சொன்ன கதை இது!

ஆனால், இது கதை மட்டுமல்ல; சமுதாய விமர்சனமும் கூட, சமுதாயத்திலுள்ள பெரும் பாலானவர்கள் எப்படி நடக்கின்றார்கள், எப்படி நடிக்கின்றார்கள் என்பதைப் பற்றிய விவரணம் விமர்சனம்!

நமது சமுதாயத்தில் பலர் பொய்மையாளர்களாக - போலி வேடதாரிகளாக - இருப்பது மறுக்க முடியாத - மறைக்க முடியாத - மன்னிக்க முடியாத ஒரு யதார்த்தம்!

நேர்மையாக நடப்பவர்களைவிட, நேர்மையாளர்களாக நடிப்பவர் தொகை பெரிது.

நெஞ்சில் நஞ்சும், நாக்கில் நறுந்தேனுமுடையோரை நாள் முழுவதும் பார்க்கலாம்; நாடுமுழுவதிலும் சந்திக்கலாம்!

பிறர் அறிந்துவிடக்கூடாது என்பதில் குறியாக இருந்துகொண்டு - அறிந்து கொள்ளாமல் இருப்பதற்கான தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு அநியாயம், அக்கிரமம், அடாவடித்தனம் செய்வோர் அநேகர்!

தமக்கு ஆகாதவர்களை - தமது முன்னேற்றத்துக்குக் குறுக்கே நிற்பவர்கள் எனத் தாம் சந்தேகப் படுபவர்களை, தம் அடியாள்கள் மூலம் அகற்றிவிட்டு - அழித்துவிட்டு, அந்தரங்கத்தில் ஆனந்தக் கண்ணீரும் அம்பலத்தில் அனுதாபக் கண்ணீரும் வடிப்போர் மிகப்பலர்.

ஆனால் அத்தகையவர்களை இலகுவில் அடையாளம் காணமுடியாமல் இருப்பதுதான் மிகப் பெரிய அவலம்!

உள்ளொன்றை வைத்துப் புறமொன்றைப் பேசுகின்ற - உள்ளொன்றைச் செய்து புறமொன்றைக் காட்டுகின்ற இவர்களால் சட்டத்தின் கிடுக்கிப் பிடியிலிருந்து தப்பக் கூடியதாக இருக்கலாம்; சமுதாயத்தின் சந்தேகக் கண்களுக்குள் அகப்படாதிருக்க முடியலாம். ஆனால், சர்வ வல்லமை படைத்த பரம்பொருளின் "மௌனப் பார்வை" யிலிருந்து, "சமநீதி"யிலிருந்து தப்ப முடியவே முடியாது!

"அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும்" என்றுமே அழியாத இந்த உண்மை உணரப்படாதிருக்கும் வரை இத்தகையோரின் தொகை வெள்ளமாகப் பெருகிக் கொண்டே இருக்கும்; வேகமாகப் பரவிக்கொண்டே இருக்கும்! ******

# யுத்த வெற்றியைக் காட்டி அரசு அதிகாரத்தைத் தக்கவைக்க முயற்சி

**வன்னி மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடும் நூர்டீன் மசூர் 'உதயனுக்கு' வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.**

**கேள்வி:** ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துவமான சமூகக் கட்சியாகும். அப்படியிருந்தும் நீங்கள் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேர்தலில் குதிப்பதன் காரணங்கள் எவை எனக் கூறமுடியுமா?

**பதில்:** முஸ்லிம்களின் தனித்துவம், உரிமை, இருப்பு, அபிலாஷைகளைக் காக்கும் புனிதமான நோக்கமுடனேயே மறைந்த தலைவர் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார். அந்தத் தனித்துவத்தைப் பேணவே தற்போதைய மு.கா செயற்பட்டு வருகின்றது. கட்சியின் அடிப்படைக் கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை. எனினும், கட்சியின் வளர்ச்சி, ஆதரிக்கும் மக்களின் நன்மை கருதி "சின்னம்" போன்ற சில அம்சங்களை விட்டுக்கொடுத்து அரசியல் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கின்றது. இந் நாட்டில் நடை பெறும் ஜனநாயக விரோத ஆட்சியை ஒழித்து, உண்மை யான அர்த்தமுள்ள ஜனநாயக அரசை நிறுவ ஐக்கிய தேசியக் கட்சி பாடு படுகின்றது. தமிழ்பேசும் சிறுபான்மை மக்கள் தொடர்பாக இந்த அரசு பாதகமான செயற்பாட்டி லேயே ஈடுபடு கின்றது. மு.கா. போன்ற சிறுபான்மை அரசியல் கட்சிகள் தனித்து நின்று போராடி, எமது மக்களுக்கான நலவுரிமைகளைக் காப்பாற்ற முடியாது. இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை இன மக்களைப் போன்று சிறுபான்மை மக்களும் தலைநிமிர்ந்து வாழவேண்டு மென்பது எமது கட்சியின் கொள்கையாகும். அர்த்தமுள்ள ஜனநாயக ஆட்சி இடம் பெற வேண்டும் என்பதே எமது எண்ணம். அந்த வகையில், ஐக்கிய தேசியக் கட்சி, எமது நேசக் கட்சியாக இருக்கின்றது. தமிழ்பேசும் மக்களைப் பாதிக்கும் சட்டமூலங்களை இந்த அரசு மேற்கொள்ளும் போது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து குரல் கொடுத்து அவற்றைச் சுலபமாக முறியடிக்க முடியும் என நாம் நம்புகின்றோம்.

**கே:** நாடு தழுவிய ரீதியில் மு.காவுக்கு இருந்த ஆதரவு படிப்படியாகக் குறைந்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுவது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**ப:** மக்கள் மத்தியில் மு.காவுக்கான செல்வாக்குக் குறைந்து வருகின்றது என்ற எண்ணப்போக்கு தவறான ஒன்று. கடந்த பொதுத் தேர்தல்களில் மு.கா. பெற்ற வாக்கு வங்கியை ஒப்பிடுவோமாயின் மு.காவின் செல்வாக்கு அதேநிலையில் இருப்பதை அவதானிக்கலாம். மு.கா. மூலம் நாடாளுமன்றம் போகும் பிரதிநிதிகளில் சிலர் கட்சியின் கட்டுக்கோப்பு, வளர்ச்சி என்பன பற்றிச் சிந்திப்பதில்லை. ஏதாவது ஒரு காரணத்தை முன்வைத்து கட்சிக்குத் துரோகம் செய்கின்றனர். இந்த நிலைமை மு.காவுக்கு மட்டும் ஏற்படவில்லை. ஐ.தே.க., ஜே.வி.பி. போன்ற கட்சிப் பிரதிநிதிகள் கூட விலை போயுள்ளனர். மஹிந்த அரசு 2005இல் ஆட்சி அமைத்தபோது, போதிய பெரும்பான்மை இருக்கவில்லை. எதிரணியைச் சேர்ந்த 47பேர் பட்டம், பதவிகளுக்காக அரசுடன் இணைந்தனர். அதனால் அரசின் பெரும்பான்மைப் பலம் அதிகரித்தது. எனவே, எமது கட்சி ஊடாக வெற்றி பெற்ற உறுப்பினர்கள் விலகுவதைக் கொண்டு மு.கா. போன்ற எதிரணிக் கட்சிகளின் மக்கள் செல்வாக்கு குறைந்ததாகக் கருதுவது பொருத்தமற்றது என்பதே எனது கருத்தாகும்.

**கே:** நீங்கள் கடந்த காலங்களில் வன்னியைப் பிரதிநித்துவப் படுத்திய காலகட்டத்தில் வன்னி மக்களுக்கு ஆற்றிய சேவை பற்றிக் கூறுவீர்களா?

**ப:** வன்னி மக்கள் எனது குணநலன், நேர்மை, ஆளுமை பற்றி நன்கறிந்தவர்கள். வன்னிக் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் என்னை நேசிக்கும் அன்பர்களும், ஆதரவாளர்களும் உள்ளனர். ஆகையினாலே தான், என்னை நாடாளுமன்றம் அனுப்பினர்.

பிரதிநிதியாவதற்கு முன்பு கூட நான் மக்கள் சேவகனாக வாழ்ந்தவன். மக்கள் தேவைகளை நிறைவு செய்தவன். பள்ளிகள், மத்ரஸாக்கள், பாடசாலைகள் போன்ற பொதுத் தேவைகளுக்கு என் சொந்த நிதியை நன்கொடையாக வழங்கியவன்.

நான் வன்னிப் பிரதிநிதியாக இருந்த காலத்தில், அங்குள்ள மக்களுக்குப் பல சேவைகளைச் செய்துள்ளேன். ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியிலே வன்னிப் புனர்வாழ்வு அமைச்சராக இருந்து வன்னி மக்களுக்கான நல்வாழ்வுக்கு அத்திவாரமிட்டேன். தற்போது இடம்பெற்றுள்ள முசலி மீள்குடியேற்றத்தின் மூலகர்த்தா நானே. வன்னி மாணவர்களின் உயர்கல்விக்காக ஆண்டுதோறும் 100 புலமைப்பரிசில்களை, எனது சொந்த நிதியில் வழங்கி வந்தேன். விதவைகள், அனாதைகள், வலுவிழந்த பெண்களுக்கு விஷேட கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்தேன். சுயதொழில் வாய்ப்புகளை ஊக்குவித்தேன். இடம்பெயர்ந்த மாணவர்கள் கற்ற பாடசாலைகளில் பௌதீக வளத் தேவைகளை, ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தேன். தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள உலக வங்கி நிதியுடனான மீள்குடியேற்ற வீடமைப்புக்கு அத்திவாரமிட்டது மு.காவே என்றால் மிகையாகாது.


நூர்டீன் மசூர்

இஸ்லாமிய சர்வதேச மாநாடு மலேஷியாவில் நடந்தபோது, அங்கு சென்ற நான், பிரதமர் மஹாதிர் முஹம்மதிடம் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மகஜர் ஒன்றைக் கையளித்ததுடன், அங்கு வருகை தந்திருந்த பல்வேறு நாட்டின் தலைவர்களையும் சந்தித்து, முஸ்லிம் அகதிகளின் பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தினேன்.

பேசாலை, வங்காலை, முசலி, சிலாவத்துறை போன்ற மீனவக் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்ததுடன், பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாக்கக் குளிரூட்டிப் பெட்டிகளை வழங்கினேன்.

**கே:** இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும் எனக் கருதுகின்றீர்களா?

**ப:** அரசு யுத்த வெற்றியைக் காட்டி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றது. எனினும், மக்கள் மத்தியில் அரசின் மீது பாரிய வெறுப்பு உருவாகியுள்ளது. எங்கும் பசி, பட்டினி, வறுமை மக்களை வாட்டுகின்றது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. ஏழைகளை மட்டுமல்ல, செல்வந்தர்களையும் அது பாதிக்கின்றது. அரசின் பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கையால் சாதாரண ஏழைகள் பரம ஏழைகளாகி விடுகின்றனர். சாதாரண பணக்காரர் பெருஞ் செல்வந்தராகின்றனர். யுத்தம் முடிவுற்ற போதும் வன்செயல்களும், கெடுபிடிகளும் அதிகரித்து வருகின்றன. வீண் விரயங்கள், ஊழல்கள், இலஞ்சத்தை நீக்க மாற்று நடவடிக்கை தேவையென மக்கள் உணர்கின்றனர். வறுமைக்கோட்டின் கீழுள்ளவர்களைக் கைதூக்க, நிவாரணமளிக்க, சமுர்த்திக் கொடுப்பனவை அதிகரிக்க ஆட்சி மாற்றம் தவிர்க்க முடியாதது என மக்கள் உணர்கின்றனர். எனவே, புதிய அரசொன்றை அமைக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் ஆணை வழங்குவார்கள் என்றே நம்புகின்றேன். ********************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் - 2010

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – TNA



வெறும் வேட்டுச் சத்தத்துக்கே வெருண்டோடி மக்களை
கைவிட்டோர் மத்தியில் மக்களோடு மக்களாக என்றும் நின்று
அவர்களின் உண்மைக் குரலாகச் செயற்பட்டோம்.

உங்கள் உரிமைக்காக
உழைத்தவருக்கே
உங்கள் வாக்கு...!

உதயன்
நிர்வாக இயக்குநர்
தொழிலதிபர்
ஈ.சரவணபவன்

6

பரிசுத்தமான வெள்ளை
நிறத்தில் அழகிய டிசைன்கள

சித்திரை புதுவருட சுப நேரத்தில் வேலைக்கு அணிந்து செல்ல ஏற்ற,
பரிசுத்தமான வெள்ளை நிறத்திலான அழகிய டிசைன்களில் சேர்ட் வகைகள்.



Emerald CORPORATE

இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருப்போருக்கு விசேட விலைக் கழிவு. மேலதிக விபரங்கள்
அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில். சேர்ட் பெக்கிங் உள்ளே இருக்கும் இரகசிய இலக்கத்தை
0773402446 க்கு SMS செய்து பெறுமதியான சேர்ட்டை வெல்லுங்கள்.

நல்ல நல்ல கடைகளில் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி

## நாடாளுமன்றத் தேர்தல் 08.04.2010



வீ.ஆனந்தசங்கரி

இல 01

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், வன்னி மக்கள், சிறையிலும் தடைமுகாம்களிலும் அனுபவிக்கின்ற துன்ப, துயரங்களுக்கு பரிகாரம் காண விழைவது தமிழர் விடுதலைக் கூட்டணியே!



த.தி.சம்பந்தர்JP

ஏழாலை

இல 03

எனவே உதயசூரியனுக்கு வாக்களித்து

இலக்கம் 1 க்கும் இலக்கம் 3 க்கும் விருப்பு வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்யுங்கள்.

(95924)

---



தந்தை செல்வா

தமிழர் தாயகத்தின்

ஒற்றுமையைக் காத்திட

சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட



தளபதி அமிர்

## உங்கள் வாக்குகள்!

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

## நடேசு இராசேந்திரன்

(Dip. in Accy, APFA, AMA, FMAAT)

அவர்களை வெற்றிபெறச் செய்வோம்



X 4

கோப்பாய் தொகுதி வாக்காளர்கள்

---

தந்தை செல்வா வழியில்....

கடமை வீரர் பண்டிதர் கா.பொ.வின் நெறியில்... தமிழர் தேசியத்தை நோக்கி...!

பேராசிரியரின் வெற்றிப் பயணம்!

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

பேராசிரியர்

## இரா.சிவசந்திரன்



நஞ்சாக்கப்பட்ட எமது காற்றுவளம்

சிதைக்கப்பட்ட எமது நிலவளம்

மாசாக்கப்பட்ட எமது கடல்வளம்

மொட்டையடிக்கப்பட்ட எமது பனைவளம் மீட்போம்! மீட்போம்!!

ஆற்றல் வாய்ந்த மனிதவளம் நாம்!

X

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

---

**மலரும் புத்தாண்டில்...**
**உங்கள் முதல் கொடுப்பனவு**
**கல்விக்கான முதலீடாகட்டும்**

## புத்தாண்டு சிறப்புச் சலுகை

தெரிவு செய்யும் எந்தவொரு பாடநெறிக்கும்



**50% கட்டணக்கழிவு**

இச் சலுகை எமது 16 பிராந்திய நிலையங்களிலும் வழங்கப்படுகிறது

- Diploma in Computer Application
- Diploma in AutoCAD
- Diploma in Graphic Design
- Diploma in Video Editing
- Diploma in Web Designing
- Diploma in Computer Hardware
- Diploma in Computer Hardware & Networking
- Tally Accounting Technician
- Diploma in Computerized Accounting
- Diploma in Office Automation
- Diploma in Computer Programming
- Diploma in 3D Modeling & many more...

Free study pack

**பாடசாலை மாணவர்களே!**
விடுமுறை காலத்தை பயனுள்ளதாக்குங்கள்

பாடசாலை மாணவர்களுக்கான கணினி பாடநெறிகள்

**JUNIOR CERTIFICATES COURSES**

- Computer Studies
- Computer Graphics
- Graphic Animation
- Movie Making
- Computer Programmer
- Computer Hardware

10 ஆண்டு கால அனுபவம்

யாழ் குடாநாட்டில்...

## TECHNO WORLD

**Studies (Pvt) Ltd**

## கணினிப் பயிற்சி நிறுவனம்

**கஸ்தூரியார் வீதியில்**
334,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 4921124

**மானிப்பாயில்**
தினேஸ் வெதுப்பக மேல்மாடி,
182,யாழ் வீதி, மானிப்பாய். 4922400

**திருநெல்வேலியில்**
142,பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி. 4922401

**சாவகச்சேரியில்**
கென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில்
சாவகச்சேரி.

கணினி உலகில் என்றும் உங்கள் [illegible]

---

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

★அதி உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றிட....
★ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலத்தை மீட்டிட....
★இடம்பெயர்ந்தோரைத் துரிதமாக மீள்குடியமர்த்தி புனர்வாழ்வு அளித்திட....
★நீதியான சமாதானத்தைப் பெற்றிட....
★நிரந்தர அரசியற் தீர்வினை வென்றிட....
★தமிழ்த் தேசியத்தைத் தக்க வைக்க....
★அரசியற் கைதிகளை விடுதலை செய்திட....
★இன அடையாளத்தை நிலை நிறுத்திட....

ஆதரிப்போம்

## திரு.முடியப்பு றெமிடியஸ் அவர்களை

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ் தேசியக் கூட்டமைப்பு)



(அ/566401)

கனடா வாழ் உறவுகள்

X 9

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் இனிய நண்பர்களான இளைஞர் யுவதிகளே!

1. தங்களின் வயதொத்த வாலிபன் நான். உங்களைப்போலவே கனவுகளையும் இலட்சியங்களையும் கொண்டவன் என்பதனால் உங்களின் உள்ளவோட்டத்தை அறிந்தவன். எல்லா வழிகளிலும் எல்லா நேரத்திலும் உங்களுக்கு உதவக் காத்திருப்பவன் உங்களைப் போல் ஒருவன் - உங்களில் ஒருவன் நான் என்பதை புரிந்து கொள்ளுமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.


2. வீராவேசமான உரைகளின் மூலம் நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசி "வாய்ப்பேச்சு அரசியலின் முடிசூடா மன்னன்" ஆக நான் விளங்க விருப்பமற்றவன். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஓடி ஒளியவும் விருப்பமற்றவன். சேவையே எனது நோக்கமாகும். பேச்சை விடுத்து எமது மக்களுக்காக செயலில் இறங்கி மக்களைப் பேச வைப்பதே எனது எண்ணம்.


3. இலங்கை அன்னையின் தமிழ்ப்புதல்வர்களில் இளையவர்களுக்கான அரசியலின் வெற்றிடம் நீண்ட நெடுங்காலமாக நிரப்பப்படாமலேயே இருப்பது உங்களுக்குத் தெரியும். தொலைநோக்குப் பார்வையும் கல்வியறிவும் கொண்ட தமிழ் இளைஞன் என்ற வகையில் அந்த வெற்றிடத்தை நிரப்ப தகுதியானவன் நான் என்பதை அறிவு பூர்வமாக சிந்தித்து நீங்களும் உய்த்துணர்ந்திருப்பீர்கள். நீங்கள் அளிக்கும் இந்த சந்தர்ப்பத்தை முற்று முழுதாக உங்களுக்காக உழைக்க, அர்ப்பணிக்க உறுதி பூண்டுள்ளேன்.

4. எதுவித நன்மையும் பயனும் பயக்காது சந்ததிகளின் அழிவோடு முடிந்து போனது போர். நாமனைவரும் ஒரு புதுயுகத்தின் நுழைவாயிலில் நின்றுகொண்டிருக்கின்றோம். இளைய சந்ததியினரின் பலத்தை இனிய வழியில் வெளிக்காட்டக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் இது. தாங்கள் அளிக்கப்போகும் பலமான ஆதரவின் பேரால் எனது வலு அதிகமாகி, சக்திமிக்கவனாய் சனாதிபதியுடன் இந்தப் புதுயுகத்திற்கான புரட்சியைச் செய்து எம் மக்களை நலமோடு வாழவைக்க முடியும். நாம் பெறவேண்டியதை பெற்றுக்கொண்டு, அடுத்த சந்ததிக்கும் பெற்றுக்கொடுப்போம். எமக்கு முந்திய சந்ததியினரை விரல் நீட்டி நாம் கேள்வி கேட்பதுபோல அடுத்து வரும் எமது சந்ததியினர் எம்மைக் கேள்வி கேட்கும் கேலிக்கூத்துக்கு நாம் ஆளாகக் கூடாது என்பதில் நாமனைவரும் உறுதி பூணவேண்டும்.

5. போர் - வாழமுடியாத சூழல் - பொருளாதார தேவைகளின் நிமித்தம் வெளிநாட்டில் வாழ்ந்தது, வெளிநாட்டை நம்பியது போதும் விலைமதிக்க முடியாத எமது மூளைவளத்தை எமக்காக பயன்படுத்துவோம். எல்லா வளங்களையும் நாமே உருவாக்கிக் கொண்டு தலைநிமிர்வோம். எமது உழைப்பில் நம்பிக்கை வைத்து உயர்வோம். உலகத்தின் சுட்டுவிரல் அதன் மூக்கில் உட்காருமாறு செய்வோம். இளைய சமுதாயத்தினரின் வளமான எதிர்காலத்திற்கு நாம் கண்ட கனவு மெய்ப்பட என்னாலான சகல உதவிகளையும் செய்யவுள்ளேன்.

6. அரசியலில் இருப்பவர்கள் கடவுளல்ல, இலகுவில் எட்ட முடியாத தூரத்தில் இருப்பதற்கு நான் எளிமையானவன். எப்போதும் உங்களுடன் தொடர்பில் இருப்பவன், இருக்க விரும்புபவன். அதிகமான விருப்புவாக்குகளுடன் பாராளுமன்றம் சென்ற பிறகும் எளிமையாக என்னை நீங்கள் சந்திக்க, பேச, கலந்துரையாட, அபிப்பிராயம் சொல்ல முடியும். தொடர்பாடல் யுகத்தில் இருக்கும் நாம் ஏன் தொடர்புகொள்ள முடியாது? சிந்தியுங்கள் எப்போதும் உங்களுடன் இருந்து உங்களுக்காக உழைக்க காத்திருப்பவன்.







## அங்கஜன் இராமநாதன்
## Angajan Ramanathan B.ENG (HON), MBA

www.angajanramanathan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 107



அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1. வயது
4. உபசரணை செய்
8. கற்புக்கரசி
10. அரசியலைக் குழப்பும் அணிக்கு இந்தப் பெயர்.
11. செல் நெறியில் நடத்துபவர்.
13. பகுதி/ நான்கு முழங்கொண்ட அளவு.
15. மறி
17. ஒரு பலகாரம்
18. தற்போதைய யுகம்.
19. உயிர்ப்பின் ஆரம்பம் இங்கு
20. தாங்குவது இது.
21. அறிவு/ படிப்பு.
22. உள்ளக நிகழ்ச்சிகள் நடப்பது இங்கே.
23. தேவை/ அவசியம்/ கோரும்.
24. இது புகினும் கற்கை நன்றே.

### மேலிருந்து கீழ்

1. தற்செருக்கு
2. விழி
3. இந்து சமய உட்பிரிவுகளில் ஒன்று
5. வெளி ஆடம்பரம்.
6. சமையல் பாத்திரம்.
7. முனிவன்.
9. பிய்த்துப் போடு/ கூறுபடுத்து
12. காதலன் மனம் கவர்ந்தவள்.
14. விற்பதும் வாங்குவதும் இங்கே.
16. மாமரத்தில் ஒட்டி வளர்வது.
18. மிகப் பெரும் நிலப்பரப்பு.
19. படி/ படி கட்டவும் பாவிக்கப்படுவது.
20. உந்து/ ஏவு.
21. உலோகத்தினாலானது. மெலிந்து நீண்டு இருக்கும். மாடிக்கட்டடம் அமைக்க அவசியமானது.
22. கல்லுக்குப் பின் வந்தது இது என்பர்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 105 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சம்பாதி (4) தலைவி (6)வனப்பு (7)கமலம் (11) திறன் (12)காரணி (13) புலன் (15) மன்மதன் (17)அக (18)கால் (19)சகல (20)துளை (21) வியாபாரம்

**மேலிருந்து கீழ்**

(1)சங்கதி (2) பாவலன் (3)தினம் (4) தபுதாரன் (5) வியாதி (8) மறவன் (10) மணி (12)காலன் (13) புதல்வி (14)அகலம் (15)மத்து (16)மகா (17)அகர (19) சபா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 105 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — செல்வி பா. சர்விகா, பா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் கோப்பாய்.

2 ஆம் பரிசு — அ-அமுதாஸ், /பொன்னா தோட்டம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

3 ஆம் பரிசு — க. சசிகலா, 'சிமாட் கிட்ஸ்', ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

4 ஆம் பரிசு — இ- குகானந்தன், ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.

5 ஆம் பரிசு — ரிஷ்னி றோய்லன்ஸ், 'றெனோ வில்லா' சில்லாலை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) எஸ். சுகன்யா, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

(2) சி. சுமதி, சிவசோதி பவனம், சந்தைவீதி, உடுப்பிட்டி.

(3) பா.சிவனேஸ்வரி, பிரதேச செயலகம், வலி.தெற்கு , உடுவில்

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 107**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 14.04.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.107இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 18.04.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# என்னதான் நடக்கின்றது?

*(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ராக்கம்மாவிற்கு உடம்பெல்லாம் எரிவது போன்ற உணர்வு தட்டியது. இவ்வளவு காலமாய் இந்த மண்ணில் உழைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் தொழிலாளர் வாழ்க்கையில் மண்ணைப் போடுவதற்கென்றே வந்திருக்கும் புது முதலாளி அந்தப் பங்களாவில் தானே இருக்கின்றான் என்பதை எண்ண அவளுக்கு ஆத்திரமாக இருந்தது. மேலும் வெளியில் நிற்க விரும்பாதவள் வீட்டிற்குள் போய் அடுப்பங்கரையில் அமர்ந்து கொண்டாள்.

ஸ்தோப்பில் அமர்ந்திருக்கும் கிழட்டுக் கட்டைகள் எதை எதையோ பேசிக் கொண்டிருந்தனர்.

இவர்களின் பேச்சு ராக்கம்மாவிற்குப் பட்டும் படாமலும் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனாலும் அவள் தன் கவனத்தை இதில் ஈடுபடுத்தவில்லை. அவளின் எண்ணமெல்லாம் கணவன் கார்த்திகேசுவைச் சுற்றியே வலம் வந்தன.

'ராக்கம்மா.... இப்ப இங்கே நடக்கிற பிரச்சினை சாதாரணப் பிரச்சினையில்ல. ஒவ்வொரு தொழிலாளியின் வாழ்க்கைப் பிரச்சினை. இவ்வளவு காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு வெளியே போடான்னு கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகின்ற அளவுக்கு முத்திவிட்ட ஒரு பயங்கர நிலையில் நாம் இருக்கின்றோம். நம்ம தொழிலாளர் வர்க்கத்தை நமக்கு மேலே இருக்கின்ற ஒரு வர்க்கம் போட்டு அமுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த அமுக்கலில் இருந்து நாம் விடுபட..... ஒரு சரியான தீர்வைக் காண்பதற்காகத்தான் நாம் முயன்று கொண்டிருக்கிறோம். இன்றைக்கு ஜில்லாவில் இதைப் பற்றி ஒரு முடிவெடுக்கத்தான் பிரதிநிதி ஐயா எல்லாரையும் ஜில்லாவுக்கு வரச்சொல்லி இருக்கிறார். யாரோ ஒரு பெரிய தலைவர் கூட வரப் போறாராம். நானும் போய் வருகின்றேன் ராக்கம்மா' என்று சொல்லிவிட்டு மத்தியானத்திற்குப் பிறகு தன் கட்சிக் காரியாலயத்திற்குச் சில தொழிலாளர்களுடன் போன கார்த்திகேசு இன்னும் திரும்பாமல் இருப்பது ராக்கம்மாவுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

* * *

அந்தப் பெண்மணி கேட்கிறாள். 'இன்னும் கனதூரம் இருக்குதோ அந்த இடத்துக்கு?'

'பொறுங்கோ நான் அந்த இடம் வரேக்கை காட்டுறன். அவங்களும் பாத்து யாழ்ப்பாணத்து பஸ்ஸைத் தான் எப்பவும் மறிக்கிறாங்கள். எங்கடை ஆக்கள்தானே பெட்டிக்கிளை இருக்கின்ற எல்லாத்தையும் எடுத்துப் போட்டுக்கொண்டு 'ஷோ'க் காட்ட வாறவை'. நடுத்தர வயதுள்ள ஒருவர் தனது கைக்கடிகாரத்தைக் கழற்றி வைத்தபடி அங்கலாய்க்கின்றார்.

பஸ் அடர்ந்த காட்டினூடாகச் செல்கின்றது. திடீரென்று ஒரு பிரேக் போட்ட சத்தம். பஸ் நிற்கின்றது. பிரயாணிகள் முகத்தில் திகில் படர்கின்றது. நகையிழந்து பரிதாபக் கோலத்தில் நிற்கும் பெண்மணி 'முருகா முருகா' என முணுமுணுக்கிறாள். 'சந்நிதிக் கந்தா, இதிலையிருந்து என்னைக் காப்பாற்றினால் உனக்கு பாலாலை அபிஷேகம் செய்வன்' 'இந்தச் சனியன் பிடிச்ச நகையளை ஏன்தான் போட்டுக் கொண்டு வந்தேன். பேசாமல் பெட்டியிலை போட்டுட்டு வந்திருக்கலாம். இதுகளாலே எவ்வளவு கரைச்சல். இனி ஒரு நாளும் இப்படி நகைகளைப் போட்டுக்கொண்டு வரக்கூடாது.'

பெண்கள் மத்தியில் சுடலை ஞானச் சிந்தனைகள்.

பஸ்ஸிலிருந்து டிரைவர் இறங்கிக் கீழே செல்கிறான். அவனைத் தொடர்ந்து சில பிரயாணிகள். சிறிது நேரத்தின் பின் அனைவரும் பஸ்ஸினுள் ஏறுகின்றனர். 'டிரைவர் பயத்திலை கண் மண் தெரியாமல் ஓடி மாடு ஒண்டை அடிச்சுப்போட்டான்.' பிரயாணிகள் ஒருவருக்கொருவர் குசுகுசுத்துக் கொள்கின்றனர். பயணம் தொடர்கிறது.

அடர்ந்த காடுகளினூடாகப் படு வேகத்துடன் பஸ் செல்கிறது. 'இது தான் ஆறாங்கட்டை; நேற்றுக் கொள்ளை நடந்த இடம்' மீசைக்காரன் இடத்தைக் காட்டுகின்றான். திடீரென்று பஸ் மறுபடி நிற்கின்றது. முன்னால் ஒரு லொறியிலிருந்து இரண்டு பச்சை யூனிபோம் அணிந்த ராணுவ வீரர்கள் பஸ்ஸினுள் நுழைகின்றனர். பிரயாணிகளின் அச்சம் அதிகரிக்கின்றது. கொள்ளைக்காரனும் ராணுவ வீரன்போல் வந்து கொள்ளையடித்துச் செல்வதாகக் கேள்விப்பட்ட கதைகள் நடுத்தர வயதுள்ள அம்மனிதரை மேலும் கலங்கச் செய்கின்றன. 'இதி யாருடைய பெட்டி' ராணுவ வீரர்கள் ஒவ்வொன்றாகப் பஸ்ஸிலுள்ள ஏல்லாப் பெட்டிகளையும் சோதனையிட்டு விட்டுச் செல்கின்றனர். அவர்களுடைய லொறி புறப்படுகின்றது.

பஸ் வெளிக்கிடுகிறது. காடுகள், பற்றைகள், வயல்வெளிகள் கடந்து செல்கின்றது. வழியில் ஏறுவோர் மீதெல்லாம் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பயணம் தொடருகின்றது. தம்மிடமுள்ள நகைகளெல்லாம் கல்லாகக் கனப்பதுபோல பெண்களுக்குத் தென்படுகின்றது. அந்தச் சின்னக் குழந்தை மட்டும் உறக்கத்தில் சிரிக்கின்றது. சிறுமிகள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தபடி தூங்குகின்றனர். முன்னேயிருக்கும் ஆண்களும் பயத்துடன் அமைதியாக இருக்கின்றனர்.

ஒருவாறாகப் பஸ் ஹொறவப் பத்தானையைத் தாண்டி பன்குளத்தை அடைகின்றது. 'இனிப் பயமில்லை' இஞ்சாலை பொலிஸ் காவல் கூட. குடியிருப்புகளும் கூட; பயணிகளில் ஒருவர் கூறுகின்றார். பயணிகள் எல்லோருக்கும் இப்போதுதான் பழையபடி முகத்தில் களை வருகின்றது. 'பாருங்கோ இந்தக் கொள்ளைக்காரங்கள் ஒரு இரண்டு மூன்று பேர்தான் வருவாங்கள். பஸ்ஸுக்குளை இருபது முப்பது பேரிலை ஒரு இரண்டு பேராவது துணிஞ்சு அவங்களை மடக்கவேணுமென்று நினைச்சா மடக்க ஏலாதே? சிங்களவங்கள் எண்டால் துணிஞ்சு வெட்டிப் போடுவாங்கள்' தன்னுடைய [illegible] பெனியனுக்குள் போட்டுக்கொண்ட அந்த நடுத்தர வயதுள்ள மனிதர் கூறுகின்றார்.

குழந்தையுடனும் சிறுமியருடனும் பயந்தபடி இருந்த அவர்களின் தாயார் அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பிக் காதணிகளையும் வளையல்களையும் அணிவிக்கிறாள். 'மலை வந்திட்டுதோ அம்மா?' சிறுமியர் வினாவுகின்றனர். அந்தக் குழந்தைக்கும் உறக்கத்திலேயே அதன் வளையல்களையும் சங்கிலியையும் தாய் அணிவிக்கிறாள். குழந்தை விழித்துப் பார்த்துவிட்டுப் பின் தூக்கத்தை தொடர்கின்றது. பின் தன்னைப்போல் நகையின்றி இருக்கும் மற்றப் பெண்மணியை யதேச்சையாகப் பார்க்கிறாள். நகையின்றி 'முருகா முருகா' என்றபடி இதுவரை பிரார்த்தித்தபடி வந்த பெண்மணிக்குத் தன்னை அவள் ஏளனமாகப் பார்ப்பதுபோல் தோன்றுகின்றது. அவளுடைய நகையோ முன் சீற்றில் இருக்கும் கணவனின் பெட்டியில் இருக்கின்றது. தனது பக்கம் திரும்பாமல் இருக்கும் கணவன்மீது கெட்ட கோபம் வருகின்றது அவளுக்கு. 'இந்த மூளிக் கோலத்தில் எவ்வளவு நேரம் இருக்கிறது' தனக்குள் அவள் புகைந்து கொள்கிறாள்.

பன்குளத்தில் சிறிது தூரம் சென்று பஸ் ஒரு தேநீர்க் கடையின் முன்னால் நிற்கின்றது. நகையின்றி அந்தரப் பட்டுக் கொண்டிருக்கும் பெண்மணியிடம் அவளது கணவர் வருகின்றார். 'தேத்தண்ணி குடிக்கப்போறியோ?'

'தேத்தண்ணி வேண்டாம். அந்த நகையளைத் தாங்கோ. நகையளில்லாமல் வெறுங்களுத் தோடையும் கையோடையும் எவ்வளவு நேரம் பிரமசத்தி பிடிச்சது போலை இருக்கிறது' கணவனிடம் அவள் கடுகடுவெனப் பொரிந்தாள்.

அவன், பெட்டியை அவளிடம் கொண்டுவந்து கொடுக்கிறான். அவள் அவசர அவசரமாக நகைகளை அள்ளிப் போட்டுவிட்டு பக்கத்திலிருந்த பெண்மணியை ஒருவித செல்வப் பெருமிதத்துடன் பார்க்கிறாள். அவளுடைய மனக்கண்ணில் நகையும் நட்டுமாகத் திருமலையில் தன் அண்ணன் வீட்டில் தான் சொர்ணலட்சுமியாகப் போய் இறங்கப் போகும் காட்சி நிழலாடுகிறது. எண்ணங்களின் நடுவே கை தானாகவே சங்கிலியை எடுத்து வெளியே விடுகிறது.

பஸ் புறப்படுகின்றது. * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டினாலும்
பச்சை நாம்,
மாற்றுவோம்
ஆட்சியை!

வாருங்கள்
வாக்களிக்க.

ஐக்கிய தேசிய முன்னணியை

ஆட்சியில் ஏற்றுவோம்.

CONCEPT STUDIO 2435

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் குறிப்பிட்ட ஓர் இனம் மட்டும் வாழ்ந்ததாகக் கூறுவதற்குத் தக்க ஆதாரம் எதுவுமில்லை

உலக நாடுகளிடையே காணப்படும் வரலாற்றுப் பெறுமதியுடைய தொன்மையான தொல்லியல், பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு நிதியுதவி அளித்து வரும் யுனஸ்கோ நிறுவனம் இலங்கையில் உள்ள எழு இடங்களை உலகத் தொல்லியற் சுற்றுலா மையங்களாக அடையாளம் கண்டு அவற்றைப் பராமரித்து வருகிறது. அவற்றின் தொடர்ச்சியாகத் தமிழர் பிராந்தியங்களில் உள்ள தொல்லியல், பண்பாட்டு மையங்களைப் பரா



மரிக்கும் நோக்கில் இலங்கைக் கலாசார அமைச்சின் கீழ இயங்கும் மத்திய கலாசாரநிதி நிறுவத்தின் பணிபபாளர் பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினருடன் இணைந்து இரு நாள் கருத்தரங்கினை நடத்தியுள்ளார். கடந்த மாதம் 17ஆம் திகதி பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடந்த கருத்தரங்கில் தனது யாழ்ப்பாண வருகையின் அடையாளமாகப் பொலநறுவையில் கிடைத்த விநாயகர் சிலையின் மாதிரிவடிவத்தை பல்கலைக்கழகத்திற்கு வழங்கி உரைநிகழ்த்தும் போது "பல்லினப் பண்பாடு கொண்ட எமது நாட்டில் குறிப்பிட்ட ஒரு இனம் அல்லது குறிப்பிட்ட ஒரு மொழி பேசிய மக்கள் மட்டும் வாழ்ந்ததாகக் கூறுவதற்கு ஆதாரமில்லை. இங்கு பௌத்த கலாசாரத்திற்குத் தொன்மையான வரலாறு இருப்பது போல் இந்து கலாசாரத்திற்கும் தொன்மையான வரலாறு உண்டு. இதற்கு வரலாற்று ஏடுகளில் காணப்படும் ஐந்து பழமை வாய்ந்த சிவதேவாலயங்களே சான்றாக உள்ளன. கல்வியறிவு மிக்க யாழ்ப்பாணத்தில் பெறுமதிமிக்க இயற்கைக் கனிமங்களும், தொன்மைமிக்க பண்பாட்டுச் சின்னங்களும் இருப்பதை நாம் அறிவோம். கடந்த காலங்களில் தென்னிலங்கையில் நாம் மேற்கொண்ட தொலலியற் பணிகளால் பல பண்பாட்டு மையங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பாதுகாத்து வருகிறோம். அதற்கு வேண்டிய நிதியினை யுனஸ்கோ நிறுவனம் வழங்கி வருகிறது. ஆனால் அப்பணிகளையெல்லாம் கடந்த காலங்களில் வடஇலங்கையில் மேற்கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் இப்பணிகளை உங்கள் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினருடன் இணைந்து மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். எமது பூர்வீக மக்களது தொல்லியல் மையங்களையும், பண்பாட்டுச் சின்னங்களையும் அழிந்து போகாது பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். அது நாம் எமது சந்ததியினருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்" என்றார். இக்கருத்தரங்கில் அறிமுகவுரை நிகழ்த்திய வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஷ்பரட்ணம். "தென்னாசியாவின் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்களில் பேராசிரியர் சுதர்சன் செனிவரட்ணாவும் ஒருவர். பேராசிரியர் செம்பகலட்சுமி, பேராசிரியர் கைலாசபதி ஆகியோருக்குப் பின்னர் தமிழக, இலங்கை வரலாற்றிற்கு அதிலும் குறிப்பாக பண்டைய அரச உருவாக்கம் பற்றிய அவரது கருத்துக்களும், முடிவுகளும் பலரால் ஏற்றுக் கொள்ளப் பட்டவை. இலங்கை மக்களிடம் கலாசார ஐக்கியம், பண்பாட்டு ஒருமைத்தன்மையை உருவாக்க தனது தொலலியற் கண்டுபிடிப்புக்களை விருப்பு வெறுப்பின்றி வெளியிட்டு வரும் இலங்கை அறிஞர்களில் அவரும் ஒருவர். அவர் கடந்த முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று எமது பல்கலைக்கழகம் வந்து கருத்துரை வழங்குவது எமக்குப் பெருமையளிக்கிறது. எதிர்காலத்தில் மத்திய கலாசார நிதிநிறுவனம் வடஇலங்கையில் உள்ள தொலலியல் பண்பாட்டுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க இருப்பது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அப்பணிகளை முன்னெடுக்க எமது துறை மாணவர்களும், ஆசிரியர்களும் ஏனையோரும் முழுமையாகப் பங்கெடுப்பார்கள் என்பதில் எமக்கு ஐயமில்லை" என்றார்.

அடுத்தநாள் 18ஆம் திகதி விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் அவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் ஒழுங்குபடுத்திய கருத்தரங்கிற்கு அதன் தலைவர் திருமதி கலாநிதி குகநாதன் தலைமை தாங்கினார். அதில் 'வெசகிரித் தொல்லியல் ஆய்வும் விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் விரிவான கருத

## இப்படிக் கூறுகிறார் பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா

துரையை வழங்கிய பேராசிரியர் சுதர்சன் செனிவரட்ணா "தொல்லியல் சார்ந்த கருத்தரங்கொன்றில் விஞ்ஞான பீட ஆசிரியர்களும் மாணவர்களும் ஆர்வத்துடன் பெருமளவில் கலந்து கொண்டதையிட்டு மகிழ்ச்சி அடைவதாகக குறிப்பிடதுடன் அவர் சமகாலத்தில் எமது பேராதனைப் பல்கலைக்கழக தொல்லியல் மாணவர்கள் விஞ்ஞானம் சார்ந்த பல பாட அலகுகளை தமது கல்வித்திட்டத்தில் இணைத்து கல்வி கற்றுவருவதனால் அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களும், ஊதியமும் பெருமளவு அதிகரித்து வருகிறது" எனக் குறிப்பிட்டார்.

"கடந்த காலத்தில் 'வெசகிரி'யில் நாம் வெளிநாட்டு அறிஞர்களுடன் இணைந்து மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் முழுமையாக வெற்றி பெறுவதற்கு பேராதனைப் பல்கலைக்கழப் பொறியியல், மருத்துவ, விவசாய, விஞ்ஞான பீடங்களின் ஒத்துழைப்பே முக்கிய காரணமாகும். அதேபோல் யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடமும், ஏனைய பீடங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல், மாணவர்களுக்கு தொல்லியலுடன் இணைந்த விஞ்ஞான அறிவை வழங்க முன்வர வேண்டும். அவை எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ள இருக்கும் தொல்லியல் ஆய்வுகளுக்கும், பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாக்கவும் பெரிதும் உதவியாக இருக்கும்" என்றார்.

அன்றையதினம் பல்கலைக்கழக நூலககேட்போர் கூடத்தில் பேராசிரியர் கிருஷ்ணராஜா தலைமையில் நடை பெற்ற முழுநாள் வேலைப்பட்டறையில் யுனஸ்கோ நிறுவன அனுரசனையுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்லியல் மையங்களைக் கண்டறிதல், அவறறைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புக்கள்



தொடர்பான பயிற்சியை கலாநிதி சோமதேவ, கலாநிதி. நிலான் கூரோ ஆகியோர் வழங்கினர். இதில் தொல்லியல், வரலாற்று மாணவர்களுடன் ஏனைய துறை மாணவர்களும், ஆசிரியர்களும் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

மூன்றாம் நாளான 19ஆம் திகதி காலை வரலாற்றுத் துறை விரிவுரை மண்டபத்தில் பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா ஏற்பாட்டில் தொல்லியல், வரலாற்றுத்துறை மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் சிகிரியாத் தொல்லியல் ஆய்வில் பங்கெடுக்கவுள்ள தொல்லியல் மாணவர்கள் தமக்குரிய தேவைகள் குறித்து சில கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றைச் சாதகமாகப் பரிசீலிப்பதாகக் கூறிய பேராசிரயர் எதிர்காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள் ளப்படும் தொல்லியல் ஆய்வுகளில் தமது மத்திய கலாசார நிதி நிறுவன உதவிகள் பெருமளவில் கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கலைப்பீடாதிபதி ந.ஞானக்குமார் "பல ஆண்டுகளுக்குப் பின்னர் தென்னிலங்கையில் இருந்து ஒரு தொல்லியல் அறிஞர் பல்கலைக்கழகம் வந்திருப்பது வடக்கு தெற்கு கல்விசார் உறவுகளுக்கு ஒரு தொடக்கப்புள்ளி எனக் குறிப்பிட்டு எதிர்காலத்தில் இவ்வாறான தொடர்புகளுக்கு கலைப்பீடம் உதவியளிக்கும்" எனக் குறப்பிட்டார். மேலும் அவர் எதிர்காலத்தில் எமது தொல்லியல் மாணவர்கள் தென்னிலங்கை மாணவர்களுடன் இணைந்து மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கு பல்கலைக்கழகம் இயன்ற உதவிகளை வழங்கத் தான் துணையாக இருக்கப் போவதாகவும் கூறினார்.

இந்நிகழ்வில் வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் புஷ்பரட்ணம் மற்றும் பேராசிரிய கிருஷ்ணராஜா உட்பட பலரும் கருத்துரை வழங்கினர்.

# குழந்தைகளுக்கான மூலிகைக்குளியல்



அண்மைக்காலமாக மூலிகைக்குளியல் (herbal bath) எண்ணெய்க்குளியல் (oil bath), சூரியக் குளியல் (sun bath) என்பன பற்றி அதிகம் பேசப்படுகிறது. பத்திரிகைகளிலும் இதை பற்றிய குறிப்புகளும், கட்டுரைகளும், விளம்பரங்களும் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. ஆனால், இவை எமது பாரம்பரியமுறைகள் என்பதை நம்மில் பலர் மறந்துவிட்டார்கள். குழந்தைபிறந்த சில வாரங்களிலிருந்தே மூலிகைக்குளியல் முதலியன




பின்பற்றப்பட்டு வந்துள்ளன. இவை வெறும் சம்பிரதாயத்துக்காகப் பின்பற்றப்படும் முறைகளல்ல என்பதை இளஞ்சந்ததியினர் விளங்கிக் கொள்ளல் வேண்டும். சில நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கும், சில நோய்களுக்குச் சிகிச்சையாகவும் இவை கையாளப்படுகின்றன. அதுமட்டுமன்றி எமது சீதோஷ்ண நிலைக்கேற்ப குழந்தையின் உடல் நலனைப் பேணுவதிலும் இவை உதவுகின்றன.

குழந்தை பிறந்து 11, 15, 31, 41, 45 நாள்களில் ஏதாவது ஒரு தினத்தில் குழந்தைக்குக் கிரந்தி எண்ணெய் தலைக்கு வைக்க ஆரம்பிக்கப்படுகிறது. கிரந்தி எண்ணெய் என்பது குழந்தைப்பருவத்தில் ஏற்படக்கூடிய பல நோய்களைத் தடுக்கக்கூடிய (குறிப்பாகத் தோல் நோய்களுக்கெதிரான) மூலிகைகளையும், நல்லெண்ணையையும் கொண்டு தயாரிக்கப்படுகிறது. அதனால் இதற்கு மருத்தெண்ணெய் (medicated oil) என்றும் பெயர் குறிப்பிடப்படுகிறது. அங்ஙனம் கிரந்தியெண்ணெயைத் தலைக்கு வைத்த பின்னர், பிள்ளையின் உடலுக்கும் பூசி (சிலர் உடம்புக்கு நல்லெண்ணெய் பூசுவதும் உண்டு) உடம்பு பிடித்துவிடுவர்.

மருத்தெண்ணெய் அல்லது நல்லெண்ணெயானது ஒரு அத்தியாவசியமான கொழுப்பமிலம் (Essential fatty acid) என்பது குறிப்பிடத்தக்கது. அத்தியாவசியமான கொழுப்பமிலமானது 'ஸ்ரபிலோ' 'கொக்கசு' போன்ற பக்ரீரியாக்களால் ஏற்படக்கூடிய தோல்வியாதிகளைத் தடுக்கின்றது என்பது நவீன விஞ்ஞானமும் கண்டறிந்துள்ள உண்மையாகும். எனவே மருத்தெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் பூசி உடம்பு பிடித்துவிடுதல் என்பது குழந்தைகளுக்குத் தோல் வியாதிகள் ஏற்படாமல் தடுக்கும் ஓர் அர்த்தமுள்ள செயலாகவும் அமைகிறது. அவ்விதமன்றி குழந்தைக்குச் சில தோல்வியாதிகள் ஏற்படுமிடத்தும் கிரந்தியெண்ணெய் பூசி வந்தால் அவை விரைவில் மாறிவிடும். மேலும், எண்ணெய்பூசி உடம்பு பிடித்து விடுவதால் குழந்தையின் உடலுறுப்புக்கள் மற்றும் தசைகளுக்கு அது ஒரு பயிற்சியாக அமைவதுடன் எண்ணெய் பூசுபவரின் ஸ்பரிசம் குழந்தைக்கு உளரீதியிலான மகிழ்ச்சியையும் கொடுக்கிறது.

குழந்தைக்கு எண்ணெய் பூசியபின்னர் வெற்றுடம்பாகச் சிறிது நேரம் ஓலைத்தடுக்கில் அதைச் சூரியஒளியில் சிறிது நேரம் கிடத்திவிடுவர். இதைக் குழந்தைக்குரிய சூரியக்குளியலாகவும் கருதலாம். இங்ஙனம் சூரியஒளி குழந்தையின் உடம்பில் படவிடுவதால் உயிரிச்சத்து D தொகுக்கப்படுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. அதுமட்டுமன்றி சில குழந்தைகளுக்குப் பிறந்து சில நாள்களிலிருந்து காமாலை (Physiological jaundice) நோய் ஏற்படும் வாய்ப்புள்ளது. இது குழந்தைக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தமாட்டாது என்றாலும் அதன் தோல் மற்றும் கண்களில் அதிக மஞ்சள் நிறம் காணப்படக்கூடும். இத்தகையநிலை சூரியஒளியில் சிறிது நேரம் வைத்திருந்து வருவதால் நீங்கிவிடும் என்று மருத்துவ அறிஞர் பலரும் கூறுகின்றனர்.

எண்ணெய்பூசி வெய்யிலிற் கிடத்திய பின்னர் குழந்தைக்குக் குளிக்க வார்ப்பர். அங்ஙனம் குளிக்கவார்க்கும் நீர் மூலிகைகளடங்கிய நீராக அமைகிறது. அதாவது குன்றிமணியிலை, அவுரியிலை, சிற்றவரையிலை, இயங்கமிலை போன்றவற்றில் கிடைக்கக்கூடிய இலைவகைகளில் ஒரு கைப்பிடியளவாக எடுத்து, தண்ணீரில் நன்கு பிசைந்து சிறிது நேரம் ஊறவிட்டுப் பின்னர் அந்தத் தண்ணீரால் குளிக்க வார்க்கவேண்டும்.

வாரத்தில் ஒரு தடவை குழந்தைக்குத் தலைக்கு முழுக வார்க்க வேண்டும். அவ்விதம் முழுக வார்க்கும் போது கறுத்தப்பூக்கொடியிலை, செவ்வரத்தமிலை, இலந்தையிலை போன்றவற்றில் ஒன்றைத் தண்ணீர் விட்டரைத்து, தலைக்குத்தடவி முழுகவார்க்க வேண்டும்.✱



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாலத்துக்கேற்ற அணுகுமுறையும்’

## பழையனவற்றை விட்டு புதிய பாதையை தேர்ந்தெடுக்க வேண்டும்



ஷான் சண்முகநாதன்

**வீரகேசரி 27.03.2010**

தமிழ்க் கட்சிகள் வட்டுக்கோட்டை, ஒஸ்லோ பிரகடனங்கள் தொடர்பில் பேசுகின்றன. அவ்வாறான வார்த்தைகளைத் தொடர்ந்து பாவித்து வருகின்றன. என்னைப் பொறுத்த வரையில், தமிழ் மக்கள் பழையனவற்றை விட்டுவிட்டு, புதிய பாதையொன்றைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானிக்க வேண்டும். பழைய தீர்மானங்கள் தொடர்பில் தொடர்ந்து பேசுகின்ற போது, அது பிழையான தீர்மானத்தை ஏற்படுத்திவிடும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஷான் சண்முகநாதன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் எதிர்காலம் - காலத்திற்கு ஏற்ற அணுகுமுறைகள் எனும் தலைப்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு தலைமையேற்று உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கொழும்பிலுள்ள - ரமடா ஹோட்டலில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போதுள்ள சூழ்நிலையின் பிரகாரம், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய கட்சியே பொதுத் தேர்தலிலும் வெல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க உதவுவதற்கு வெளிநாட்டு உதவிகள் அவ்வளவாகக் கிடைக்காது. உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகள் எந்த முறையில் முயற்சிகளை மேற்கொண்டாலும், இறுதித் தீர்வு உள்நாட்டில் இருந்தே கிடைக்கப்போகின்றது.

அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சொல்வதை யதார்த்தத்தில் சாத்தியமாக்கக் கூடியவருடன் தான் நாம் தொடர்பை வைத்துக் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் உறுதிமொழிகளை வழங்குவார்கள். எனினும், அதனை இரண்டொரு பேரினால் மட்டுமே நிறைவேற்ற முடியும்.

முக்கியமாக, ஜனாதிபதி சொன்னதை சாதிக்கக் கூடியவர். அவருடன் தமிழ் மக்கள் தொடர்புகளை வைத்து, அதனைப் பேணி, பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய நம்பிக்கை இருக்கின்றது. சேவைகளையும் நாம் ஒரு தடவை மீளத் திரும்பிப் பார்க்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் நான் கல்வி கற்றபோது, அங்கு பல்கலைக்கழகத்திற்கு செல்லமுடியாத பிரச்சினையொன்று இருந்தது. பெருவாரியான தமிழ் இளைஞர்கள் வேறு வழியில் செல்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர்.

உயர்கல்வியை பல்கலைக்கழகங்களுக்கு செல்லாமல் கூட பயிலமுடியும். யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டே லண்டன் உள்ளிட்ட வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தொலைக்கல்வி மூலம் பயில முடியும். உயர்கல்வி என்பது பிரச்சினைக்குரிய விடயமல்ல. அதேபோல, அரச கரும மொழிகளிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

பிரச்சினைகளை நாம் உன்னிப்பாகக் கவனித்தால் அவை தமிழர்களுக்கு மட்டுமே உரிய பிரச்சினைகளாக இருக்காது. சகல இனங்களுக்கும் பொதுவான பிரச்சினைகளும் இருக்கின்றன. வேலையில்லாப் பிரச்சினை தெற்கிலும் இருக்கின்றது. தமிழருக்கு மட்டுமே உரிய பிரச்சினைகளை நாம் இனங்காண வேண்டும்.

தமிழ் மக்களை ஒன்றுகூட்டி, அவர்களிடத்தில் ஒரே மனப்பான்மையை வளர்க்க வேண்டும். எந்தக் கட்சியில் இருந்தாலும் - எந்த கட்சியிலிருந்து வந்தாலும், மக்கள் மனப்பான்மை ஒன்றாக இருக்கவேண்டும்.

அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்கின்ற மனப்பான்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்திலேயே நான் இருக்கின்றேன். பொதுவாக, இம்மாதிரியான கலந்துரையாடலை ஒரு வருடத்திற்கு முன்னர் நாங்கள் நடத்தியிருக்க முடியாது. அதற்கான சூழல் இருக்கவில்லை. அதனை ஜனாதிபதியே ஏற்படுத்தித் தந்தார்.

## தினகரன் வாரமஞ்சரி

**28.03.2010**

தமிழ் மக்களின் எதிர்காலம் காலத்துக்கேற்ற அணுகுமுறை என்ற தலைப்பில் கொழும்பில் நடைபெற்ற அரசியல் கலந்துரையாடல் பற்றிய ஒரு விமர்சன நோக்கு இதே பக்கத்தில் பிரசுரமாகியிருக்கின்றது. தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென ஆறு தசாப்த காலமாகத் தமிழ்த் தலைமை மேற்கொண்ட முயற்சி பலனளிக்காத நிலையில் இது ஒரு காலோசிதமான கலந்துரையாடல்.

இக் கலந்துரையாடலுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பிலேயே முழுவிடயமும் உள்ளடங்கியிருக்கின்றது. அதாவது காலத்துக்கேற்ற அணுகுமுறையைப் பின்பற்றுவதிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பது இத் தலைப்பின் உட்பொறுள்.

இக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட பல்வேறு கருத்துகளுள் ஒரு கருத்து முக்கியமான கவனத்துக்கு உரியதாகிறது. எங்கள் போராட்டத்தை அமைப்புக்குள்ளேயே முன்னெடுக்க வேண்டுமெயொழிய அமைப்புக்கு எதிரான போராட்டமாக அதை உருமாற்றுவது எவ்வித பலனையும் தராது என்பதே அக்கருத்து அமைப்புக்குள் என்னென்ன வசதிவாய்ப்புகள் உள்ளனவோ "அவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தும் யதார்த்தபூர்வ அணுகுமுறையின் அவசியத்தை உணர்த்துவதாக இக்கருத்து அமைந்துள்ளது.

அமைப்புக்குள் உள்ள வாய்ப்புவசதிகளைப் பயன்படுத்தாமல் அமைப்புக்கு எதிரான போராட்டமாக இன உரிமைப் போராட்டத்தைத் திசை திருப்பியதன் பாதகமான விளைவை இப்போது கண்கூடாகக் காண்கிறோம். நம் மத்தியிலிருந்து மறைந்த தலைவர்களைப் பற்றிப் பேசாது விடுவோம். தமிழ் மக்களின் பிரதிநிதிகளென இப்போது உரிமை கோரும் தலைவர்கள் முன்னர் இரண்டு சந்தர்ப்பங்களில் இத் தவறைப் புரிந்திருக்கின்றார்கள். இன்றும் அதே தவறைப் புரிகின்றார்கள். அமைப்புக்குள் உள்ள வசதிவாய்ப்புகளை இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய நகர்வாகப் பயன்படுத்தாமல் யதார்த்தத்துக்கு முரணான கோரிக்கைகளை முன்வைத்து அமைப்புக்கு எதிரான போராட்டமாகத் திசைதிருப்பியதன் விளைவே தமிழ் மக்கள் இன்று அனுபவிக்கும் துன்பங்கள்.

பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழான மாகாண சபையை இத் தலைவர்கள் நிராகரித்தார்கள். அதன் பின் பொதுசன ஐக்கிய முன்னணியின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தையும் நிராகரித்தார்கள். இவ்விரு தீர்வுகளும் இனப் பிரச்சினைக்கு முற்று முழுதான தீர்வாக இல்லாத போதிலும் நிராகரிக்கப்படக் கூடியவையல்ல. இவ்விரு தீர்வுகளும் அவை முன்வைக்கப்பட்ட சமகால யதார்த்தத்துக்கு அமைவானவை என்பதையும் அவை நடைமுறைக்கு வருவதன் மூலம் தமிழ் மக்கள் முன்னர் பெற்றிராத பல உரிமைகளைப் பெறுவார்களேயொழிய எவ்வித இழப்புக்கும் உள்ளாக மாட்டார்கள் என்பதையும் தமிழ்த் தலைவர்கள் ஏற்று இத் தீர்வுகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டிருக்க வேண்டும். முழுமையான அரசியல் தீர்வை அடைவதற்கான முன்னோடியாக அத் தீர்வுகளைப் பயன்படுத்தியிருப்பார்களேயானால் தமிழ் மக்கள் இதுவரையில் பல நன்மைகளை அடைந்திருப்பார்கள். இத்தலைவர்கள் பிழையான அணுகுமுறையைப் பின்பற்றிச் செயற்பட்டதால் தமிழ் மக்கள் உயிரிழப்பு உட்படத் தாங்க முடியாத துன்பங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டது.

காலத்துக்கேற்ற அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலமே தமிழ் மக்களுக்கு விமோசனம் உண்டு. இப்போது உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடியதாகப் பதின்மூன்றாவது திருத்தம் உள்ளுது. அதைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஏற்கவேண்டும். அதை ஏற்றுச் செயற்படுகின்ற அதேவேளை, பதவியிலுள்ள அரசாங்கத்துடன் நல்லெண்ணத்தை வளர்த்து இத்திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களை கொண்ட தீர்வைப் பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும் சரியான அணுகுமுறையுடன் முயற்சித்தால் எதுவும் முடியும்.

யதார்த்தத்துக்கு முரணான அணுகுமுறையைப் பின்பற்றித் தமிழ் மக்களைத் துயர வாழ்க்கைக்குத் தள்ளும் அரசியல் முடிவுக்கு வரவேண்டும்.

## ...ாம் எமது பிரதேசங்களை கட்டியெழுப்புவோம்

**சட்டத்தரணி சந்திரகாசன்**

...யாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் இந்தியாவில் இரு இனங்களே உள்ளன. குடியுரிமை பெற்ற இந்தியர்கள், குடியுரிமை பெறாத வெளிநாட்டவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

அகதிகள் என்ற ஒரு இனம் இல்லை. இலங்கையில் யுத்தம் மூண்டதையடுத்து இடம் பெயர்ந்து வருகின்றவர்களையே அகதிகள் என அழைக்கப்படுகின்றனர்.

இந்த அகதிகளை மத்திய அரசுடனும் தமிழக அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இலங்கை அகதிகளுக்கு இந்தியாவில் உயர்கல்வி கற்கவோ, பல்கலைக்கழகம் செல்லவோ அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் நான் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு இப்பிரச்சினையைக்கொண்டு வந்து அவர்கள் கல்வி கற்க வசதிசெய்தேன்.

அங்குள்ள இலங்கை அகதிகளின் பிள்ளைகள் இன்று கல்வியில் உயர் நிலையில் உள்ளனர். இலங்கைத்த தமிழர்கள் கல்வியில் சிறந்தவர்கள் என்பதை நிரூபித்துள்ளனர்.

எனது சொந்த இடமான தெல்லிப்பழைக்குச்சென்றபோது வீடு வாசல்கள் தெரியாது ஒரே காடாக காணப்படுகிறது. எனது சொந்த வீட்டைக்கண்டு பிடிக்க முடியவில்லை. பின்னர் பல சிரமங்கள் மத்தியில் இடிபாடுகளுடனான எனது வீட்டைக்கண்டேன்.

உலகில் யுத்தம் காரணமாக அழிவுற்ற நாடுகள் ஜப்பானும் ஜேர்மனியும். ஆனால் இன்று அந்த நாட்டு மக்களின் முயற்சிகளும் மனத்திடனும் அந்த நாடுகளை பொருளாதாரத்தில் ஏனைய நாடுகளுடன் போட்டிபோடவைத்துள்ளது.

அந்த மக்கள் யுத்தத்தைப்பற்றியோ அழிவுகளைப்பற்றியோ சிந்திக்கவில்லை. தமது நாட்டை முன்னேற்ற வேண்டும் என்று சிந்தித்து செயற்பட்டதால்தான் இன்று அந்த நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன.

அதேபோல எமது நாட்டிலும் யுத்தம் முடிவுற்றுள்ளது. நாம் எமது பிரதேசங்களைக்கட்டியெழுப்ப வேண்டும்.

## ...நம்பவில்லை

...நான் விரும்பவில்லை என்பார்.

...தக் கலந்துரையாடலின் பிரகாரம் ...ந்து போகின்ற அணுகுமுறையின் ... எங்களுடைய பிரச்சினைகளை ஒரு ...யான பண்போடு அணுகி அவை ...பூர்வமான அணுகுமுறையா நல்ல ... அணுகுமுறையா? என்பது தொடர் ...கவனத்தில் கொள்ளல் வேண்டும். ...நாட்டில் நல்லாட்சியும் ஜனநாயக ...தழைக்க வேண்டுமென்றால் அதற்கு ...வகையான விதிகள் இருக்கின்றன. ...ாட்சி நிலைக்க வேண்டுமென்றால் ...ர்கள், முஸ்லிம்கள் போன்ற சிறு...மை இனத்தாரின் கருத்துக்களை ...றிந்து கொள்ள வேண்டும். அவை ...மாக கவனிக்கப்படல் வேண்டும். ...களுக்கு இருக்கின்ற வாய்ப்புக்கள், ...ப்பங்கள் எவை என்பது தொடர் ... பலம் என்ன என்றும் நாம் சிந்தித் ...பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் ...துவிட்டோம் என்று எதிர்மறையாக ...த்துக் கொண்டிருக்கக் கூடாது. எம்மி... பலம் இருக்கிறது.

## சுதந்திர உணர்வுடன் வாழ வேண்டும்



சட்டதரணி
கந்தையா நீலகண்டன்

இணைந்து வாழவேண்டுமாயின் நாங்களும் இந்த நாட்டிலேயே நாட்டின் மக்களாக கௌ[illegible] ரமிக்க மக்களாக எல்லா சுதந்[illegible]மும் இருக்கின்ற மக்களாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

சொல்லவேண்டியதை சொல்லவேண்டும் பஷில் ராஜபக்ஷவை சந்தித்த போது வீதிகளிலேயே பயணிக்கின்ற போது நாங்கள் எங்கள் நாட்டில் செல்கின்றோம் என்ற உணர்வே இருக்கின்றது. அந்த உணர்வை கொழும்பில் ஏற்படுத்த வேண்டும்.

சென்னையில் தமிழில் துணிந்து கதைத்துக்கொண்டு செல்லலாம் முன்னுக்கும் பின்னுக்கும் பார்க்கவேண்டிய தேவையில்லை இங்கே தமிழில் கதைக்காவிட்டாலும் கூட முன்னுக்கும் பின்னுக்கும் பார்த்து பயந்து செல்லவேண்டும். அந்த நிலைமை மாறவேண்டும் நாட்டில் நாங்களும் இந்த நாட்டின் மக்கள் என்ற உணர்வுடன் சுதந்திரமாக வாழ வேண்டும். அந்த [illegible] டும்.

எதிர்காலத்தை சிந்தித்து பார்க்கவேண்டும் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு மட்டுமல்லாது மலையகத்திலும் தமிழர்கள் படுகின்ற துன்பங்களையும் நான் அறிவேன்.

நாங்கள் எதனை செய்யவேண்டும் என்பது தொடர்பில் தெளிவாக இருக்கவேண்டும். விழிப்புணர்வு எங்களுக்கு வேண்டும் அதிகளுக்காக நிவாரணப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன அதற்கு பெரும்பாலானோர் உதவிச்செய்யவில்லை நமது மக்களுக்கு நாம் உதவி செய்யவேண்டும்.

தனியே இலாபநோக்கம் எதனையும் செய்வதற்கு முயற்சிக்கக் கூடாது எமது இனத்திற்கு என்ன? செய்யபோகின்றோம்? எதனை சாதிக்கப் போகின்றோம் என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியப் பாதையில் நிலமும் புலமும்

## தாயகம், தேசியம், சுயநிர்ணயம்
## தமிழ்த்தேச நிலைப்பாடு சமரசத்திற்கு அப்பாற்பட்டது

## தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களுக்கே எங்கள் ஆதரவு


Dr. கந்தசாமி
திருலோக மூர்த்தி
இல 1


கஜேந்திரகுமார்
காங்கேசர் பொன்னம்பலம்
இல 2


நடேசு
துரைராஜா
இல 3


நாகலிங்கம்
குழந்தைவேலு
இல 4


சின்னத்துரை
வரதராஜன்
(முதன்மை வேட்பாளர்)
இல 10


பத்மினி
சிதம்பரநாதன்
இல 5


பிரான்சிஸ்
வின்சென்றிட போல்
இல 6


கலாநிதி கென்னடி
விஜயரட்ணம்
இல 7



விஸ்வலிங்கம்
மணிவண்ணன்
இல 8


சந்தனம்
ஸ்ரீபன்
இல 9


செல்லத்துரை
சுப்பிரமணியம்
இல 11


செல்வராசா
கஜேந்திரன்
இல 12

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்



X

## இலட்சியப் பயணத்தில் நிலமும் புலமும் ஒரே பாதையில் பயணிக்க சைக்கிள் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

சுவீடன் தமிழ்ப் பெண்கள் அமைப்பு
மகளிர் அமைப்பு - யேர்மனி
நெதர்லாந்து தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பு
டென்மார்க் தமிழர் பேரவை
தமிழ் ஒன்றியம் இத்தாலி
தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு - பிரான்ஸ்
ஐக்கிய தமிழர் செயற்பாட்டுக் குழு - பிரித்தானியா
சுவிஸ் தமிழர் பேரவை
தமிழ் இளையோர் அமைப்பு - பெல்ஜியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் - 2010

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA

### - யாழ்.மாவட்டம்

★குடாநாட்டை மூடிநின்ற பேரினவாதத்தின் வெறியாட்டத்தில் காணாமற்போய், படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதையுண்டு போனவர்களையும் அவர்களோடு சேர்த்துப் புதைக்கப்பட்ட உண்மைகளையும் உதயன் ஊடகத்தின் மூலம் உலகின்முன் வெளிக்கொணர்ந்தோம்.

★வன்னியில் மாபெரும் மனிதப் பேரவலம் நிகழ்ந்தபோது எல்லோரும் வாய்பொத்தி மௌனமாகிப் போய்விட அந்தப் பேரவலத்தை துணிச்சலோடு வெளிப்படுத்தி சர்வதேசத்தின் கரிசனையை துயரச் சிலுவையை சுமந்துநின்ற வன்னி மக்களின் மீது ஈர்க்கச் செய்தோம்.

★முட்கம்பி வேலிகளுக்குள் முடங்கிக் கிடந்த மக்களின் பிரச்சினைகள் யாவற்றையும் வெளிச்சம் போட்டுக்காட்டினோம்.

★காணாமற்போன தம் உறவுகளைத் தேடி அலையும் மக்களுக்காக என்றுமே துணை நின்று குரல் கொடுத்தோம்.

**அன்றும் இன்றும் என்றும்**
**சொந்த மண்ணில்**
**உங்களுடன் ...**

உங்கள் விருப்பு வாக்கை இலக்கம் 6 இற்கு
அளித்து அமோக வெற்றியடையச் செய்யுங்கள்



இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 6

உதயன்
நிர்வாக இயக்குநர்

தொழிலதிபர்
**ஈ.சரவணபவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு ★ 21 ★ 03 ★ 1939



இறப்பு ★ 05 ★ 03 ★ 2010

**அமரர் திருமதி. ஜெபரட்ணம் பரமேஸ்வரி**

(இளைப்பாறிய நெசவு ஆசிரியை)
பன்னாலை தெல்லிப்பழை,
யாழ்ப்பாணம்.

05.03.2010 அன்று அமரத்துவமடைந்த (வெள்ளிக்கிழமை) எங்கள் குடும்பத் தலைவி திருமதி ஜெபரட்ணம் பரமேஸ்வரி அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன்வந்து உதவி செய்தவர்களுக்கும், இறுதிச்சடங்குவரை நின்று எங்களுக்கு சகலவழிகளிலும் உதவியவர் களுக்கும், மலர்வளையம் அனுப்பியும், தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலமும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்து எங்களுக்கு ஆறுதல் கூறிய கருணை நெஞ்சங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் 04.04.2010 அன்று ஞாயிற்றுக்கிழமை **கிறீன் பலஸ் (GREEN PALACE)** NO : 30, W.A. சில்வா மாவத்தையில் அமைந்துள்ள மண்டபத்தில் (4th floor) காலை 10.00 மணி முதல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**No :14- 4/1 அருத்துசா லேன்,**
**வெள்ளவத்தை, கொழும்பு -06.**
**தொலைபேசி - 2362854**

## மின்விநியோகம் தற்போது சீர்

யாழ்., ஏப். 04

தென்மராட்சி பிரதேசத்தில் மாசேரி, கரம்பைக் குறிச்சி ஆகிய பகுதி களுக்கான மின்சார விநியோகம் சீரடைந்துள்ளது.

அப் பகுதியில் முன்னர்இருந்த இடங் களில் கடந்த வாரம் மின்மாற்றிகள் பொருத் தப்பட்டுள்ளதால் மின் விநியோகம் சீரடைந் துள்ளதாக மின்பாவ னையாளர்கள்தெரிவித் தனர்.

மாசேரி, கரம்பைக் குறிச்சி ஆகிய இடங் களில் வைக்கப் பட்டிருந்த மின்மாற் றிகள் பாதுகாப்புக் காரணமாக வரணி யில் வைக்கப்பட்டி ருந்தன. இவை கடந்த வாரம் பழைய இடங் களில். பொருத்தப் பட்டதாக இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரி பிரி வினர் தெரிவித் தனர். (ஒ-207)

## இன்று நடைபெறாது

யாழ்., ஏப்.04

யாழ்.பல்கலைக் கழகத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடை பெறும் கல்வி யியல் பட்டப் பின் டிப்ளோமாகற்கை நெறி தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று நடைபெறமாட்டாது என்று யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதி பதி அறிவித்துள்ளார். (ஒ-10)

## தசாக கிருஹயக்ஞ ஆத்மசாந்தி அழைப்பு



கடந்த 27.03.2010 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம்

**சோமசுந்தரஐயர் குகனேசசர்மா**

அவர்களின் (ஆத்ம சாந்திக் கிரியைகள்) அபரக்கிரியைகள் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரவர்கள் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சிநிரல்

05.04.2010 திங்கட்கிழமை 10 மணியளவில் தசாகம் (கல்லெடுப்பு)
06.04.2010 செவ்வாய்க்கிழமை ஏகோதிஷ்டம் மாசியம்
07.04.2010 புதன்கிழமை சபிண்டீகரணம்
08.04.2010 வியாழக்கிழமை கிருஹயக்ஞம் (மதியபோசனம்)

குறிப்பு: மேற்படி அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அன்று 08.04.2010 ஆம் நாள் வியாழக்கிழமை இங்கு நடை பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

*பிள்ளையார் கோயிலடி*, T.P0771710748, 0213735123 **மனைவி, மக்கள்,**
*களபூமி, காரைநகர்.* (96392) **மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**




# உளம் நெகிழும் உயர் நன்றிகள்!

## அமரர் திருச்செல்வம் கபிலநாத்

(மாணவன், க.பொ.த (சா/த) -2009 இந்துக்கல்லூரி, சாவகச்சேரி)




*"ஆற்றல்கள் மிக்க எம் அழகு மைந்தா!*
*அவலம் ஈந்தின்று எங்கு சென்றாய்?*
*நாற்றாய் உனைக்களைந்து நடுவழியில்*
*நம்மை அலறவைத்தார் கொடுமை ஐயா!*
*தேற்றிட முடியாவுன் பிரிவதனால்*
*தேம்புகிறோம் உயிரே பார்த்தாயா?*
*போற்றியுன் திருநாமம் மனங்கொண்டு*
*புகழ்மகனே அஞ்சலித்தோம் சாந்தி கொள்க!*

கடந்த 14.03.2010 அன்று ஈவிரக்கம் அற்றமுறையில் கடத்திக் கப்பம் கேட்டுப் படுகொலை செய்யப்பட்ட எம் அன்புமகன் திருச்செல்வம் கபிலநாத் அவர்கள் காணமற்போன நாளிலிருந்து-எங்கள் தெய்வக்குழந்தையை உயிருடன் மீட்பதற்காக சகல வழிகளிலும் உதவிகள் நல்கிய இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், யாழ்.மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரி அவர்கள், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும்;

பின்னர் எம் அன்புச் செல்வத்தின் அமரத்துவ செய்தியறிந்து சகல வழிகளிலும் முன்னின்று உதவிகள் புரிந்த வைத்திய நிபுணர்கள், தொழிலதிபர்கள், வர்த்தக நண்பர்கள், ஊழியர்கள், சைவசமய குருமார்கள், கிறிஸ்தவ பாதிரிமார்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், அமைச்சர், அரசியற் கட்சி பிரமுகர்கள், யாழ்.செயலக உயரதிகாரிகள், ஊழியர்கள், தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் ஆகியோருக்கும்;

கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த நண்பர்கள், மாணவர்கள்-எமது அன்புச் செல்வத்தின் அவலச் செய்தியை பிரசுரம் செய்த ஊடகங்கள், சகல வங்கி உயரதிகாரிகள், ஊழியர்கள், தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த சகோதர மொழி வர்த்தக பெருமக்கள், போக்குவரத்துச்சபை அதிகாரிகள், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு துயரிற் கலந்த அன்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கும்;

எமது மகன் காணாமற்போனமை தொடர்பாக அறிக்கைகள் வெளியிட்ட அரசியற் பிரமுகர்கள், எம் மகனின் கொடூரக் கொலை தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொண்ட நீதித்துறையினர் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும்-காலங்கருதித் தோளோடு தோள்நின்ற யாவருக்கும்;

எம் கண்ணீர் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றி!

பெரியரசடி,
சாவகச்சேரி. **குடும்பத்தினர்.**

(சி/566212)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணி மக்களின்
சின்னம் மெழுகுவர்த்தி

தமிழர்கள் சுயாட்சி பெற
பாரம்பரிய நிலத்தைப் பாதுகாக்க
எமது பிரதேசங்கள் வளம் பெற
**தோழர் ஸ்ரீதரன் வெல்லட்டும்.**




**மெழுகுவர்த்திக்கே
உங்கள் வாக்கு**



**தி.ஸ்ரீதரன்** (தோழர் சுகு)
(பொதுச்செயலாளர் பத்மநாபா,
ஈ.பி.ஆர்.எல்.எவ்.)

## யாழ்ப்பாணம்
## முதன்மை வேட்பாளர்
# மாவை சேனாதிராசா

தமிழ் பேசும் மக்களின் உரிமைப்
போராட்டத்தைச் சர்வதேசத்துக்கு
எடுத்துக்காட்டிய தமிழ்த் தேசியக்
கூட்டமைப்பை ஆதரிப்போம்.





சாவகச்சேரி தொகுதி
மக்கள்.



உண்மை, நேர்மை, தியாகம்
நிறைந்த மாவை
சேனாதிராசா எங்கள்
முதற் தெரிவு
வாக்கு இல 8

(96367)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 2010
## தமிழ் தேசியக் கூட்டமைப்பு



யாழ்.மாவட்டம்




**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

**உங்கள் வாக்குகள்**
தமிழரின் வலுவைக் கூட்டட்டும்
உரிமைக்குரலுக்கு வலுச் சேர்க்கட்டும்
அரசியல் தீர்வுக்கு வழியமைக்கட்டும்
அழிவுகளிலிருந்து மீண்டெழ அனுசரணையாகட்டும்



**7 X யாழ்.மக்கள் 10 X**

**கந்தையா அருந்தவபாலன்**
B.A(HONS), M.Ed,PGDE, PGDEM,
அதிபர், யா/டிறிபேக்கல்லூரி, சாவகச்சேரி

**சிவஞானம் சிறிதரன்**
B.A, M.Ed,PGDE,SP.Tr.(Ag),SLPS
அதிபர் , கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்

**மண்பற்றுள்ள கல்வியியலாளர்களுக்கு வாக்களியுங்கள்**

**தமிழ் மக்களின் மீதான இன அழிப்புக்கு எதிரான
எமது குரல்கள் ஓயப்போவதில்லை...**

வன்னி மீதான ஆக்கிரமிப்புப் போரின் போது அரச படைகளால் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பக்கச் சார்பற்ற சர்வதேச நீதிவிசாரணை நடத்தப்படவேண்டும்.

வன்னிமீதான போரின் போது படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நஸ்டஈடு வழங்கப்படவேண்டும்.

வன்னி அகதிகள் மீள்குடியேற்றம் தொடர்பான விடயங்கள் சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மன்னிப்பளித்து விடுதலை செய்யப்படவேண்டும்.

அரச கட்டுப்பட்டுப் பகுதிகளில் அரச படைகளாலும் துணை இராணுவக் குழுக்களாலும் கடத்தப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாக சர்வதேச நீதிவிசாரணை நடத்தப்படவேண்டும்.

தமிழ் இனத்தை அழிப்பதற்கு பயன்படுத்தி வந்த அவசர காலச்சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்பன உடன் நீக்கப்பட வேண்டும்.
தமிழர் தாயகப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட இராணுவ மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.



# செல்வராசா கஜேந்திரன்
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்**
முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்




**அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னிசை வழிபாடு

இயேசு கிறிஸ்துவின் 'உயிர்ப்பு தினத்தை' ஒட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் இன்னிசை வழிபாடு (ஈஸ்ரர் பஜனை) நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு, கிழக்கு திருமறைமாவட்டத் தலைவரும், யாழ்.சேகரக் குருவுமான வண. எஸ்.எஸ்.ஞானராஜா அருளுரை வழங்குவார். (50-6-236)


இதோ!

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா**
**அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/NO.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு: சந்திரச் சந்திக்கு அண்மையில்)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்புக் கலைமாணி B.A.(Hons) பட்டத்தைப் பெற்ற

**செல்வி பகீரதி தங்கராசா**

அவர்களை மனமாரப் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம்வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார்.


## தேவை

★ Computer Hardware technician
★ Computer Typing அனுபவமுள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும்.

National Computer Systems,
226, Manipay Road, Jaffna.
0772222083

## காணி விற்பனைக்குண்டு

துன்னாலை வடக்கு, கோவியவத்தையில் உள்ள இரண்டு காணிகள், பரப்பு-7, பரப்பு-12.

தொடர்பு:
விவரம்: 077 6126089

## காணி விற்பனைக்கு

யாழ்.நாயன்மார், அரசடிப்பிள்ளையார் வீதி குளத்திற்கு வடக்கில் தென்னை மரமுள்ள ஒன்பது (9)பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு- தொ.பே:0776470319,
0212225215

## வீடு,காணி விற்பனைக்கு

தாவடியில் 3½ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. மானிப்பாய் வீதி, வன்னியசிங்கம் வீதி சந்தியில் அமைந்துள்ளது. (முன்னாள் பிரபல சுருட்டு வர்த்தகர் அப்பச்சிப்பிள்ளை அவர்களின் காணி)

தொடர்பு:065-2226161, 077-6454549

## வேலையாள்கள் தேவை

K.R.S. உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு பொதி செய்வதற்குப் பெண் தொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும்.

K.R.S. Food Product,
K.K.S. Road,
Kondavil west, Kondavil.
T.P: 021-4591537,
021-4921886


## ஒட்டுசுட்டான் மக்கள் குடிதண்ணீரின்றி அவலம்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிய வருகிறது.

இப்பகுதியிலுள்ள கிணறுகள் இறைத்து துப்புரவு செய்யப்படாமையும், பழுதடைந்து காணப்படும் குழாய்க்கிணறுகள் திருத்தப்படாமையும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கான முக்கிய காரணங்களாகும். உரியவர்கள் கிணறுகளை இறைத்துத் துப்புரவுசெய்குளோரின் இடுவதோடு பழுதடைந்த குழாய்க்கிணறுகளைத் திருத்தித் தர வேண்டுமெனப் பாதிக்கப்பட்டு அவதிப்படும் மக்கள் கேட்கிறார்கள். (க-341)

## மரண அறிவித்தல்

### கனகசபை தியாகராஜா



(முன்னாள் தலைவர், வேம்படி முருகமூர்த்தி கோயில், கொக்குவில்)

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தியாகராஜா (30.03.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், இரத்தினம், பாக்கியம், கண்மணி, நாகம்மா, நல்லம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சின்னத்துரை, இராசையா, நடேசு, செல்லம்மா, இராசலிங்கம், குணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஞ்சனாதேவி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), நடேசமூர்த்தி (ஜேர்மனி), சத்தியமூர்த்தி (நோர்வே), கைலாயநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத்தந்தையும், அருந்தவராசா (முன்னாள் லிகிதர், மின்சாரசபை, யாழ்ப்பாணம்), குமுதினி (ஜேர்மனி), காலஞ்சென்ற கிருசாந்தி மற்றும் ஜெயலட்சுமி, இந்துமதி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், நிருபா, நித்திலன், கிபிலன், பிரியந்தி, நிவேந்தினி, வருண், டினோசன், விபுசன், இந்துஜன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி முருகமூர்த்தி கோயில்,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## Overseas Student Centre

புத்தாக்கமானது
தனித்துவமானது
புத்திக்கமானது

**ஐக்கிய இராச்சியத்தில் கல்வி கற்க உத்தேசித்துள்ளீர்களா ?**

ஓவசீஸ் ஸ்ருடன்ற் சென்ரர் UK கல்லூரிகளில் ஜூலை/ஓகஸ்ட்/செப்டெம்பர் நெறிகளுக்காக இலகுவாக அனுமதிகள் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை தற்போது வழங்குகிறது.

**UK அனுமதியைப் பெற உடனே எம்மிடம் பதிவு செய்யுங்கள்**

*நாம் வழங்கும் சேவைகள்:*

- பொருத்தமான பாடநெறிகளைத் தெரிவு செய்தல் / UK கல்லூரிகளுக்கான முழுமையான விண்ணப்பங்களைத் தயாரித்தல் சம்பந்தப்பட்ட பிரத்தியேகமான ஆலோசனை சேவைகள்.
- UK யில் சிறந்த UKBA சான்றுபெற்ற A தரமான பரந்த தொகையான கல்லூரிகள் பல்கலைக்கழகங்களிடையே தெரிவு செய்தல்.
- மாணவர் விசா பெறுவதற்கான விண்ணப்ப நடைமுறைகள் தேவைப்படும் பத்திரங்கள் பற்றிய அனைத்து வழிகாட்டல்கள்.

*பாடநெறி மட்டங்கள்:*

- உயர்தேசிய டிப்ளோமா (HND)
- இளமாணி / முதுமாணி / பிஎச்டி
- தொழில்சார் கல்விநெறிகள்
- தாதியர் நெறிகள் மற்றும் தொழில்கள் தாதிகளாகப் பதிவு செய்வதற்கான தொழில் வாய்ப்புகள்.
- பெலாறஸ் (பெலோரஷ்யா) அரச மருத்துவப் பல்கலைக்கழகங்களில் ரஷ்ய மொழியிலும் ஆங்கிலத்திலும் மருத்துவ மற்றும் பொறியியல் நெறிகள்.

★கிங்ஸ்ரன் கல்லூரி
★தெம்ஸ் கிரயூவற் ஸ்கூல்
★லண்டன் மனேஜ்மென்ற் அன்ட் சயன்ஸ் ஸ்கூல்
★லண்டன் பல்கலைக்கழகம்
★கிங்காறென்டல் பல்கலைக்கழகம்
★பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகம்
★கிரீன்விச் பல்கலைக்கழகம்
★சன்டர்லேன்ட் பல்கலைக்கழகம்
★லெய்சென்ரர் டி மொன்ற்போட் பல்கலைக்கழகம்
★லீட்ஸ் மெற்றோ பொலிரன் பல்கலைக்கழகம்
★ட்ரினிரி பல்கலைக் கல்லூரி
★வேல்ஸ் லம் பீற்றர் பல்கலைக்கழகம்மற்றும்
★ வேல்ஸ் பிறிபிஸ் கொல் சிம்ரு பல்கலைக்கழம்

மே 15 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவும்

**Overseas Student Centre**
5/6, Railway Avenue, Nugegoda. TEL: 0112 812283
www.overseasstudentcentre.org

## Voyages Lanka Plc

மிகவும் குறைந்த விலையில் அனைத்து நாடுகளிற்கும் பயணம் செய்வதற்கான விமான பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

பாங்கொங்கில் மிகவும் விசேடமான விலைக்கழிவுடன் பொருள் கொள்வனவு செய்வதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலா வைகாசி மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வைகாசி வரை. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து பாங்கொங் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து திரும்பி வருவதற்கான மொத்தத் தொகை 39200 மட்டுமே. வேறெங்கும் இல்லாத விலைக்கழிவுடன் தங்குமிட வசதியும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

★ மாணவர்களுக்கான விசா, சுற்றுலா விசா அனைத்தும் உலகின் எந்த நாடுகளிற்கும் செய்து கொடுக்கப்படும். (கனடா, அவுஸ்திரேலியா, லண்டன்)

★உள்நாட்டு சுற்றுலா வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

உங்களுடைய எல்லாவிதமான பயணத் தொடர்புகளுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

தொடர்புகளுக்கு:
M.M.லின்ரன்-
0217200404
O. றீகன்-
0217200405

வொயஜெஸ் லங்கா,
137, பலாலி வீதி,
தபால்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் களத்தில் மு.காவின் வியூகம்

# வெற்றிக்கனி பறிப்பது திண்ணம்

**அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸுன் தேசிய பட்டியலில் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளவருமான மசூர் சின்னலெப்பை உதயனுக்கு வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.**

கேள்வி:- ஐ.தே. முன்னணியின் முஸ்லிம் காங்கிரஸுல் தேசியப்பட்டியல் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள். இதுபற்றி தாங்கள் கூறவிரும்புவது என்ன?

பதில்:- இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில், மக்களின் விருப்பத்தின் படி நான் போட்டியிடுவதற்கு முடிவு செய்திருந்தேன். இருந்தும் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறவேண்டும் என்பதற்காக கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுவதற்குத் தீர்மானித்தார்.

இதன்படி சம்மாந்துறைத் தொகுதி சார்பாக, சம்மாந்துறைப் பிரதேசசபைத் தவிசாளர் மன்சூரும், கல்முனைத் தொகுதி சார்பாக கல்முனை மாநகரசபை மேயர் எச்.எம்.எம். ஹரிஸும், பொத்துவில் தொகுதி சார்பாக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் ஆகியோரும் தேசியக் கட்சிப் பட்டியலில் போட்டியிடுவதற்கு பெயர் குறிக்கப்பட்ட போது, கட்சியின் முடிவுக்குக் கட்டுப்பட்டு போட்டியிடும் எண்ணத்தை கைவிட்டேன்.

இருந்தபோதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அட்டாளைச்சேனை பிரதேச மக்கள் இதுவரை வழங்கிய பூரண ஆதரவையும், கட்சியால் அட்டாளைச் சேனை பிரதேசத்தைத் தவிர்த்த ஏனைய பிரதேசங்கள் அனைத்திற்கும் தேசியப்பட்டி யல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கொடுக்கப்பட்டிருப்பதையும் கருத்தில் கொண்டு கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்றவன் என்ற வகையில் எனது பெயர் தேசியப் பட்டியல் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

கே:- தேர்தலின் பின் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவீர்களா?

ப:- நிச்சயமாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவேன் என்று நானும் எனது பிரதேச மக்களும் பரிபூரண மாக நம்புகின்றோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும் ஒருவர். அவர் மற்றைய அரசியல்வாதிகளைப் போல் அங்கொன்றும் இங்கொன்றும் பேசுப வரல்லர்.மு.காங்கிரஸ் அதி உயர்பீடம் கூட அட்டாளைச்சேனை விடயத்தில் சாதகமான முடிவுகளையே எடுக்கும் என நம்புகின்றோம்.

இன்று தேசிய காங்கிரஸ் கட்சியினர் மேடைக்கு மேடை என்ன பேசுகின்றனர் தெரியுமா? ரவூப் ஹக்கீம் அட்டாளைச் சேனைப் பிரதேசத்துக்கு எம்.பி. பதவி தரமாட்டாராம். இது தோல்வியைக் கண்டு பயந்து போய்யுள்ளவர்களின் கடைசி வசனங்களாகவே நாம் கருதுகிறோம். இதை நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை.

முப்பத்தியிரண்டு வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லாமல் இருக்கும் அட்டாளைச்சேனைப் பிரதேசம் பல்வேறு அபிவிருத்திகளின்றிக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்திலிருந்து நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுமிடத்து அபிவிருத்தி விடயத்தில் முன்னிற்பேன்.

எனவே, முப்பத்தியிரண்டு வருட அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் (அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில்) கனவை நனவாக்க மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் எடுத்த முடிவை மாற்றி எமது மக்களின் கனவைக் கலைக்கமாட்டார் எனத் திடமாக நம்பலாம்.

கே:- மு.காங்கிரஸ் கட்சி வகுத்த எம்.பி. ஆசனங்களுக்கான வியூகம் வெற்றியளிக்கும் என நம்புகின்றீர்களா?

ப:- ஆம். பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் காலத்திலிருந்தே மு.கா. வகுத்த வியூகங்கள் வெற்றிகண்டே வந்துள் ளன. 1989 ஆம் ஆண்டு அம்பாறை மாவட் டத்தில் மு.கா இழந்த மூன்று முஸ்லிம் எம்.பி. ஆசனங்கள்ள 2000ஆம் ஆண்டு நடை பெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டதன் மூலம் பெற்றுக் கொண்டது.

இதேபோன்று 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தனித்து மரச்சின்னத்தில் போட்டியிட்டு மூன்று ஆசனங்களைப் பெற்றது அம்பாறை மாவட் டத்தில். கண்டி மாவட்டத்தில் தலைவர் ரவூப் ஹக்கீம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டு சுமார் 80 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் பெற்று வெற்றியீட்டினார்.

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டதன் காரணமாக நான்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மு.கா.வுக்கு கிடைத்தது. அந்தவகையில் தான் மு.காங்கிரஸ் இம்முறை நடைபெறப் போகின்ற பொதுத் தேர்தலில் தனது வியூகத்தால் கூடுதலான எம்.பி ஆசனங்க ளைப் பெறப் போகின்றது. அம்பாறை மாவட் டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் மூன்று வேட்பாளர்களையே மு.கா களம் இறக்கியுள்ளது. குறிப்பிட்ட வேட்பாளர்கள் மூவரும் வெற்றி பெற வாய்ப்புள்ளது.

அதே போன்று கண்டிமாவட்டத்தில் தலைவர் ஹக்கீமும், கொழும்பு மாவட்டத்தில் சபீக் ரஜாப்தீனும் குருநாகல் மாவட்டத்தில் ரிஸ்வி ஜவஹர்ஷாவும், திருகோண மலையில் எம்.எஸ். தௌபீக், மட்டக்களப்பில் எமது தவிசாளர் பஷீர் சேகுதாவூத், வன்னியில் நூர்தீன் மசூர், தேசியப் பட்டியலில் மூவர் என நாடாளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த அடிப்படையில் மு.கா. சார்பாக எம்.பி. ஆசனங்கள் கிடைக்கும் பட்சத்தில் முஸ்லிம்களின் உரிமைக் குரலாக முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் தடம் பதிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கே:- அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெறும் சாத்தியப்பாடுகள் இருக்கின்றன என கூறப்படுகின்றதே?

ப:- இல்லவே இல்லை. ஐக்கிய தேசியக் கட்சிதான் அம்பாறை மாவட்டத்தில் வெல்லப்போகின்றது. அக்கட்சிக்கு நான்கு ஆசனங்கள் கிடைக்கும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு கிடைக்கும் இரண்டு உறுப்பினர்களும் சிங்களவர்களாகவே தெரிவு செய்யப்பட வாய்ப்புள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அம்பாறைத் தொகுதியில் கிடைத்த சிங்கள மக்களின் வாக்குகள் நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.ம.சு. கூட்டமைப்புக்கு குறைவாகவே கிடைக்கும் ஒருநிலை அங்கு ஏற்பட்டிருக்கின்றது.

பிரபல தொழிலதிபரான தயா கமகேயின் செல்வாக்கு நாளுக்கு நாள் அம்பாறைத் தொகுதியில் அதிகரித்து வருவதைக் காண்கின்றோம். இதேபோன்றுதான் முஸ்லிம் பிரதேசங்களிலும் முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கு இன்னும் வீழ்ந்துவிடவில்லை. தமிழ் வேட்பாளரான டாக்டர் தயானந்தராஜாவிற்கும் கணிசமான வாக்குகள் கிடைக்கும். இந்த வகையில் பார்க்கும்போது, ஐக்கிய தேசியக் கட்சி அம்பாறை மாவட்டத்தில் வெற்றி பெற்று நான்கு ஆசனங்களை நிச்சயமாகப் பெற்றுக்கொள்ளும்.

கே:- முஸ்லிம் காங்கிரஸ் பலத்த சரிவைக் கண்டுள்ளதாக அமைச்சர் அதாஉல்லா கூறிவருகின்றாரே. இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?

ப:- அமைச்சர் அதாஉல்லா எதை வைத்துக்கொண்டு மு.கா. சரிவைக் கண்டுள்ளதாகக் கூறுகின்றாரோ தெரியவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் வளர்ச்சி பெற்று வருகின்றதேயொழிய பின்னடையவில்லை.

இன்று தோல்வியடைவோம் என்று பயந் துள்ள அமைச்சர் அதாஉல்லா தனக்கு அம்பாறை மாவட்டத்தில் சுமார் 85 ஆயிரம் வாக்குகள் இருக்கின்றன என ஊர் ஊராக மேடையில் பொய் சொல்லுகின்றார். இந்த வருடத்தின் மிகச் சிறந்த நகைச்சுவை இதுதான்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு அளித்த வாக்குகளில் இருந்தே முஸ்லிம் காங்கிரஸுக்கு முஸ்லிம் மக்களிடம் எப்படிப்பட்ட ஆதரவு இருக்கும் என்பது விளங்கும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாகவே சிறுபான்மையின தமிழ், முஸ்லிம்கள் தமக்கு வாக்களிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இந்த விடயத்தில் அதாஉல்லாவின் கருத்தை நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சம்மாந்துறையைச் சேர்ந்த அமீர் பெற்ற வாக்குகள் சுமார் 28ஆயிரம் வாக்குகள்தான். இது தேசிய காங்கிரஸின் வளர்ச்சி உச்சக்கட்டத்தில் இருந்தபோது கிடைத்த வாக்குகளாகும்.

இன்று நிலைமை வேறு விதமாக உள்ளது. அமைச்சர் அதாஉல்லாவின் பழிதீர்க்கும் போக்கும், அவரின் அடாவடித் தனங்களும் உச்சக்கட்டத்தில் காணப்படு வதால், அவருடைய கட்சியிலிருந்து பலரும் விலகிக்கொண்டு வருகின்றமை எல்லோரும் அறிந்த விடயமாகும். சம்மாந்துறை அமைப்பா ளர் ஐ.எல்.எம். மாஹிர் அதாஉல்லா தரப்பிலிருந்து விலகிப் பேரியல் அஷ்ரப்புடன் இணைந்துகொண்டுள்ளார்.

மேலும், சாய்ந்தமருது அமைப்பாளர் ஹபதுல் கரீம், நியாஸ் எம்.பாக்கீர், அம்பாறை மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் எம்.ஏ. சி.ஏ. மசூர், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அமைப்பாளர் அக்கீல் அர்சாத், தேசிய காங்கிரஸ் கட்சியின் பத்திரிகையான 'பரிவட்டம்' பிரதம ஆசிரியர் நவாஸ் சௌபி ஆகியோர் உட்பட இன்னும் பலரும் தேசிய காங்கிரஸிலிருந்து விலகி மாற்றுக் கட்சிகளில் சேர்ந்துள்ளனர். இவர்களில் அம்பாறை மாவட்டக் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த எம்.ஏ.சி.ஏ. மசூர் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து எமது வெற்றிக்காகப் பாடுபடுகின்றார்.

இவற்றையெல்லாம் விட அதாஉல்லாவின் சொந்த ஊரான அக்கரைப்பற்றிலேயே அவருக்கு எதிரான கோஷம் அதிகரித்துள்ளது. இதற்குக் காரணங்களாக கிழக்கு மாகாண அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.எல்.எம். ஹனீபா மதனி (நோன்பு 27ஆம் நாள்) பட்டப்பகலில் வெள்ளைவானில் கடத்தப்பட்டமை, கட்சி சார்பான அமைச்சர்களும் வேட்பாளர்களும் அக்ரைப்பற்றிற்குள் வந்து அரசியல் செய்வதைத் தடுத்துள்ளமை போன்றவைகளாகும்.

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 85 ஆயிரம் வாக்குகள் இருக்கின்றன எனச் சொல்லும் அதாஉல்லா ஏன் அக்கரைப்பற்றில் மாற்றுக் கட்சியினரும், அமைச்சர்களும் அரசியல் செய்வதைத் தடுக்க வேண்டும்? இதிலிருந்தே புரிகின்றது தனது வாக்கு வங்கி சரிந்துள்ளமையையும் தான் தோல்வியடையப் போகின்றார் என்பதையும் அவரது செயற்பாடுகள் காட்டுகின்றன.

சாய்ந்தமருது பிரதேசத்தில் வாக்குகளை மொத்தமாகப் பெற்றுத்தருவார் என்று போடப்பட்ட வேட்பாளரான முன்னாள் அதிபர் பஷீர் சாய்ந்தமருது ஊரிலேயே தேசிய காங்கிரஸுக்கு இருந்த சொற்ப வாக்குகளையும் இல்லாமல் ஆக்கிவிட்டார் என்ற கவலையில் அதாஉல்லா இருக்கின்றார். எனவே அமைச்சர் அதாஉல்லா இம்முறை படுதோல்வியடையப் போகின்றார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கே:- அம்பாறை மாவட்ட அரசியல் அதிகாரம் முஸ்லிம் ஒருவருக்கு மீண்டும் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றீர்களா?

ப:- இதில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைக்கும் பட்சத்தில் அம்பாறை மாவட்ட அரசியல் அதிகாரம் முஸ்லிம் ஒருவருக்கு கிடைக்கும் வாய்ப்புத்தான் கூடுதலாக உள்ளது. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைக்கும் நிலையில் சிங்களவர் ஒருவரே மாவட்டத்தின் தலைவராக நியமிக்கப்படுவார். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.


ஏனென்றால், ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் தெரிவாகின்ற இரண்டு உறுப்பினர்களும் சிங்களவர்களாக இருக்கப் போகின்றபடியால், வெல்வார் என எதிர்பார்க்கப்படும் அமைச்சர் பி.தயாரத்னவே அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுத்தலைவராக நியமிக்கப்படலாம். தயாரத்ன அவ்வாறு தலைவராக நியமிக்கப்படு வாராயின் சிங்களப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதிலேயே முன்னிற்பார். அத்தோடு தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளவும் முயற்சிப்பார். இது தமிழ் முஸ்லிம் மக்களின் எதிர்கால இருப்பைக் கேள்விக் குறியாக்கும்.

கடந்த காலங்களில் பி.தயாரத்னவின் செயற்பாடுகளைக் கண்டும் அனுபவித்தும் உள்ளவர் என்ற வகையில் இந்த விடயம் மிகப் பெரிய இழப்பாக முஸ்லிம்களுக்கு மாறும், தீகவாபிப் பிரச்சினை, பொத்துவில் காணிப் பிரச்சினை, ஒலுவில் துறைமுக அபிவிருத்தி, புதிய சிங்களப் பிரதேச செயலகங்கள் உருவாக்கம் எனப் பல விடயங்களில் முஸ்லிம்களை ஓரம்கட்டவே தயாரத்ன முனைவார். இதனால் அதாஉல்லாவுக்கோ, பேரியல் அஷ்ரப்புக்கோ வாக்களிப்பதனால் எந்த நன்மையும் முஸ்லிம்களுக்கு கிடைக்கப்போவதில்லை.

மாறாக ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் போட்டியிடுகின்ற முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் மூவருக்கும் வாக்களிப்பதன் மூலமே அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மேலாதிக்கத்தைத் தடுத்து நிறுத்த முடியும். இங்கு முஸ்லிம்கள் மிகத் தெளிவாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

கே:- அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற கோஷத்துடன் தேர்தலில் குதித்துள்ளது. இது சாத்தியப்படுமா?

ப:- சாத்தியப்படவே மாட்டாது. இந் நாட்டின் தேர்தல் முறை மூன்றில் இரண்டு என்ற பெரும்பான்மைக்கே இடமில்லை. அரசு வெற்றி பெறுவதே கேள்விக்குறியாக உள்ளது. அந்த வகையில் எவ்வாறு மூன்றில் இரண்டைப் பெறுவது? கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செய்த அராஜகங்களை மூடி மறைக்கவே மக்களைத் திசை திருப்பி அரசிற்கு வாக்களிக்கச் செய்வதற்கான ஒரு தந்திரோபாயமாகவே மூன்றில் இரண்டை உரத்துப் பேசுகின்றார்கள் என நான் நினைக்கின்றேன்.


மசூர் சின்னலெப்பை

நிச்சயமாக ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன. தேர்தல் நீதியாகவும், நேர்மையாகவும் நடக்குமாயின் ஐக்கிய தேசிய முன்னணி சிறந்த மக்களாட்சியைக் கொண்டு வரும். அவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைக்கும் பட்சத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அந்த ஆட்சியில் சிறப்பானதொரு இடம் கிடைக்கும்.

அரசு சொல்வது போன்று அவர்களுக்கு மூன்றில் இரண்டு கிடைக்குமாயின் அது சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும். சிறுபான் மையினரின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களது பிரதிநிதித்து வங்கள் நாடாளுமன்றத்தில் இல்லாமல் ஆக்கவே இது காரணமாய் அமையும். தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரும் போது சிறுபான்மையினரின் கருத்துக்களை செவிமடுக்க மாட்டார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது சிறுபான்மை இனங்களுக்கெதிரான சிங்கள மேலாதிக்கவாதிகளின் கருவியாகும் என நினைக்கின்றேன்.

கே:- வெற்றி பெற்றதும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவார்கள் என்ற கதை ஒன்று உலாவுகின்றதே?

ப:- இது ஒரு கட்டுக்கதையாகும். முஸ்லிம் காங்கிரஸில் தற்போது இருக்கின் றவர்கள் கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டவர்களாகவே உள்ளனர். தோல்வியடையப்போகும் அதாவுல்லா தரப்பின் கருத்தே இதுவாகும். கட்சி தெரிவுசெய்துள்ள வேட்பாளர்கள் மக்கள் மனங்களை நன்கறிந்தவர்கள். அவர்கள் ஒருபோதும் கட்சியைவிட்டு ஓடமாட்டார்கள். கட்சியும் சில ஏற்பாடுகளையும் செய்துள்ளது. அம்பாறையில் போட்டியி டுகின்ற மூன்று வேட்பாளர்களும் தமது கருத்துக்களை மக்கள் மத்தியில் பகிரங்மாகவே கூறிவருகின்றனர். இந்த விடயத்தில் கட்சி ஆதரவாளர்களுக்கு நம்பிக்கை அளிக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறவிரும்புகின்றேன்.

கே:- நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுமிடத்து ஊடகவியலாளர்களின் நலனில் கவனம் செலுத்துவீர்களா?

ப:- நிச்சயமாக கவனம் செலுத்துவேன். ஒரு நாட்டின் முதுகெலும்பு ஊடகவியலாளர்களே. அவர்களுக்கான பாதுகாப்பும் வசதிவாய்ப்புக்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எமது கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும் செயற்பாட்டில் ஊடகவியலாளர்கள் பெரும் பங்கு வகிக்கின் றனர். அவ்வாறான ஊடகவிய லாளர்களின் முன்னேற்றத்தில் நான் எப்போதும் பங்கு கொள்ளவே விரும்புகின்றேன். எனக்கெதிராக ஊடகங்களில் விமர்சனங்கள் வருகின்ற போது, அதில் உள்ள நல்லவற்றை எடுத்துக் கொண்டு பிழைகள் என்று கருதுபவற்றைத் திருத்திக்கொள்ளவே முயற்சிக்கின்றேன்.

நான் எப்பொழுதும் மக்களோடு மக்களாக இருப்பவன். மக்களின் முன்னேற்றத்திற் காகத் தானே ஊடகவியலாளர்கள் பாடுபடுகின்றனர். அவர்களை ஒருபோதும் அடிபணிய வைக்காமல் முன்னேற்றவே முயற்சிக்கவேண்டும். ★

**செவ்வி கண்டவர்: எம்.எச்.எம்.கியாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பளை பாடசாலை மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 04

பளை மத்திய கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் க.குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டி களுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.ஜெயகுலராசா கலந்து கொள்வார்.

(ஓ-207)

## சாவகச்சேரியில் கடைகளை இன்றும் அடுத்த நாளும் திறக்க முடியும்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைப் பரப்பில் உள்ள வணக நிலையங்கள் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு இன்றும் எதிர்வரும் 11ஆம் திகதியும் வியாபாரத்திற்காக திறந்திருக்குமென மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். (ஓ-207)

## 50 மாணவர்கள் பங்குபற்றும் சிறுவர் முகாம்

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகின் ஏற்பாட்டில் சிறுவர் முகாம் நிகழ்வுகள் நாளை காலை 9 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இப் பாடசாலையைச் சேர்ந்த 31சிறுவர்களும், ஈவினை அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த 19 சிறுவர்களும் பங்குபற்றவுள்ளனர். (ஓ)

## வீடு விற்பனைக்கு

கட்டப்பிராய் வட்டக்குளத்தடியில் 1½ பரப்புக்காணியில் நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு.
(முன்பு Dr. அமுதா இருந்த வீடு)
தொடர்புகளுக்கு : Mrs. X. வாசுகி
T.P. No : 0652224410, 0771831276

## ஒத்து மாறல்

திருகோணமலையில் உள்ள வடக்கு மாகாணசபைக் கட்டடங்கள் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றுபவர் யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார்

T.P. No : 0772359269

## துயர் பகிர்கின்றோம்



*அன்னை வேளாங்கன்னி, நாச்சிக்குடாவைச் சேர்ந்த*

### கருப்பையா கந்தசாமி

03.04.2010 அன்று காலமாகியதை அறிந்து எமது சங்கத்தினர் அனைவரும் மிகுந்த கவலை அடைகின்றோம். அவருடைய ஆத்மா சத்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர், பொருளாளர், அங்கத்தவர்கள்.
செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்,

16/2, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம். (96372)

## யாழ். - கொழும்பு சொகுசு பஸ்

எமது யாழ்ப்பாணம்- கொழும்பு சொகுசு பஸ் சேவை பயணிகள் நலன்கருதி காரைநகர் - மூளாய் -சித்தங்கேணி- சங்கானை -மானிப்பாய்- யாழ்ப்பாணம் ஊடாக வெள்ளவத்தை கொழும்புக்கு ....

A/C TV Coach

புறப்படும் நேரம் காரைநகரில் இருந்து
மாலை 5.30 மணி

**1000/= மட்டுமே**



முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

D.S.GUNASEKARA
Transport Service
T.P.: 0776151536, 0729586555, 0772470233

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நல்லதம்பி

(முன்னாள் இ.போ.ச.சாரதி- பருத்தித்துறை)



கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் ஊரிக்காட்டை வசிப் பிடமாகவும் கொண்ட கந்தையா நல்லதம்பி அவர்கள் நேற்று (03.04.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் நந்தினி (கொழும்பு), நளாயினி, நளினி (லண்டன்), நவஞானவேல் (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஜெயசீலன், அருந்தவராசா, அம்பிகைபாகன் (லண்டன்), கவிதா (கனடா) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மயிலியதனை இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

*நெற்கொழு வீதி,*
*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
ந.தவமணி(மனைவி),
குடும்பத்தினர்.

### பாலசுப்பிரமணியக்குருக்கள் ஜானகி



நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் புத்தூர் சிவன்கோவிலடியை வசிப்பிடமாகவும் தற்போது வட்டுக்கோட்டை சிவன்கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியக் குருக்கள் ஜானகி நேற்று (03.04.2010) சனிக்கிழமை காலமானர்.

அன்னார் பாலசுப்பிரமணியக் குருக்களின் அன்பு மனைவியும், ஜெயந்தி, பூரணி, பாலகுமாரக்குருக்கள் ஆகியோரின் அன்புத் தாயாரும் , ராஜேஸ்வரசர்மா, ஆனந்தராஜசர்மா, கிருஷ்ணஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், பார்கவி, தனுஷியா, கம்ஷிதா, சதுர்சனா, நந்தினி, சிந்துரி, இந்துயா, கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மாயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா.பாலகுமாரக்குருக்கள்
(குமரன்) மகன்,
வட்டு. சிவன் தேவஸ்தானம்.

*சிவன்கோயிலடி,*
*வட்டுக்கோட்டை.*

### நல்லையா பெனடிற்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.58, 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சியை நிரந்தர முகவரியாகவும் 16/17, விதானையார் வீதி, ஈச்சமோட்டையை தற்போதைய முகவரியாகவும் கொண்ட நல்லையா பெனடிற் நேற்று(03.04.2010)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் நல்லையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் மேரியானின் (வவா) அன்புக் கணவரும், சிம்சன் ஜோர்ச், றோய், காலஞ்சென்ற ஜஸ்மின், காலஞ்சென்ற சிம்சன் றாச் மற்றும் பாபு, டயஸ், நிக்சன், கிறேஸ் டனியா ஆகியோரின் அன்புத் தந்தையும் அருட்சகோதரி கிறேஸின் (திருச்சிலுவைக் கன்னியர்மடம்) அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 06.04.2010 செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16/17, விதானையார் வீதி,*
*ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.* (96395)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2010



தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

### பிரான்சிஸ் வின்சென்டீபோல்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர், பருத்தித்துறை நகரசபை முன்னாள் உப தலைவர், வடமராட்சி வடக்கு கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர்

### பிரான்சிஸ் வின்சென்டீபோல்

அவர்களை பெரு வெற்றி பெறச் செய்வோம்

**அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்**

X 6

வடமராட்சி
மக்கள்.

(96369)

## ஒரு புதிய அரசியற் பண்பாடு நோக்கி.

**2010 ஏப்ரல் 08 நாடாளுமன்றத் தேர்தலில்**

பத்மினி சிதம்பரநாதன் கூட்டமைப்பிலிருந்து தானாக விலகியதாக ஒரு கதை பரப்பப்படுகிறது. அந்தக் கதை பொய். பச்சைப்பொய். அப்பட்டமான பொய். பண்பாட்டுச் செழுமைமிக்கத் தமிழ்ச் சமூகம் பொய்களுக்குள் புதைந்துவிடக்கூடாது

நாம் பணி செய்வோம்.
**உண்மையும்.** TRUTH &
**ஒற்றுமையும்** UNITY
நம் சமூகத்தில் மலரட்டும்

உண்மையான தொடர்பாடலுக்கேற்ற பண்பாட்டு நிலையங்களை -ஆலயங்கள் போன்ற - உருவாக்கி உண்மையான தொடர்பாடலால் சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவோம்.

ஒற்றுமையின் பலத்தால் ..

- கிராமங்களில் முன்னேற்றம்.
- பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம்.
- பெண்களின் வாழ்வில் முன்னேற்றம்.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட்வர்களின் வாழ்க்கையில் குறிப்பாகப் பெண்கள், பிள்ளைகளின் வாழ்க்கையில் மலர்ச்சி.
- தமிழ்ச்சமூகத்திற்கு விடுதலை காண மக்கள் மத்தியிலும் நாடாளுமன்றத்திலும் உழைப்போம்.

தமிழர் தலைவிதியை தீர்மானிக்கும் ஒரு முக்கிய காலகட்டத்தில் நாம் நிற்கிறோம

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

நம்புங்கள்! தமிழர் வாழ்வைச் சிறப்பானதாக ஆக்குவோம்.

இணையத் தேடலிற்கு
http://spathmini.com
(இவரது பணிகள் பற்றிய படங்களைப் பார்வையிடலாம்)



### பத்மினி சிதம்பரநாதன்

B.A(Hons),P.G.Dip.in.ed

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வீரர்களின் போர்' துடுப்பாட்டத்தில் ஸ்கந்தா வென்று கிண்ணத்தை ருசித்தது

## கஜீவன் சதம் அடித்து அசத்தினார்

யாழ்ப்பாணம், ஏப். 04

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரேதயாக் கல்லூரிக்கும் இடை யிலான 10ஆவது மாபெ ரும் துடுப்பாட்டத் தில் சுன்னாகம் ஸ்கந்தவ ரேதயாக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரி மைதானத் தில் கடந்த இரு தினங்க ளாக இடம்பெற்ற ஆட்டத் தில் முதலில் துடுப்பெடுத் தாடிய சுன்னாகம் ஸ்கந்த வரேதயாக் கல்லூரி ஒன் பது விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்க ளைப் பெற்றது. சிறிகஜன், குயின்ரன், சுஜிகன், கஜ கோபன் ஆகியோர் முறையே 57,48,46, 33 ஓட்டங்களை தமது அணிக் காகப் பெற்றுக் கொடுத்தனர்.



பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரி அணிவீரர்களான கஜதீபன் நான்கு விக்கெட்டுக்களையும், நிலக்சன், மூன்று விக்கெட்டுக்களையும், அஜித் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி அணியினர் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 171ஓட்டங்களைப் பெற்றனர்.

கோகிலன், கஜதீபன் ஆகியோர் முறையே 34, 29 ஓட்டங்களை தமது அணிக்காப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரே யாக் கல்லூரி அணி வீரர்களான விஷ்ணு பிரகாஸ் மூன்று விக் கட்டுக்களை யும், தஜிகன் நான்கு விக் கெட்டுக்க ளையும், கஜகோபன், சதிசன் ஆகி யோர் முறையே தலா ஒரு விக்கெட் டையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸிற் காக துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்த வரேதாயக் கல்லூரி அணியி னர் 7விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் கஜீபன் 101 ஓட்டங்களையும் சிந்து யன் 32ஓட்டங்களையும் கஜகோபன் 15ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் தெல்லிப்பழை மாகாஜ னக் கல்லூரி அணி வீரர்களான கஜதீ பன் ஒரு விக்கெட் டையும், கோகிலன் நான்கு விக்கட்டுக் களையும் வீழ்த்தினர்.

265ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென களம் இறங்கிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியினர் 10 விக்கெட் டுக்களை இழந்து 98ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டனர். இதில் கோகிலன், அஜித் ஆகியோர் முறையே 33, 10 ஓட் டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரேதா யக் கல்லூரி அணி வீரர்களான விஷ்ணு பிரகாஸ் 6 விக்கட்டுக்களையும் தஜிகன் 3 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

சுன்னாகம் ஸ்கந்தவரேதயார் கல்லூரி அணி 167 ஓட்டங்களால் வெற்றிபெற் றது. சிறந்த ஆட்டநாயகன், சிறந்த துடுப் பாட்ட வீரராக சுன்னாகம் ஸ்கந்தவரேத யக் கல்லூரி அணி வீரன் கஜீவனும் சிறந்த பந்துவீச்சாளராக சுன்னாகம் ஸ்கந் தவரேதயக் கல்லூரி அணிவீரன் விஷ்ணு பிரகாஸ், சகலதுறை ஆட்டநாயகனாக மகாஜனக் கல்லூரிவீரன் கஜதீபனும் சிறந்த களத்தடுப்பாளராக் ஸ்கந்தவரேத யாக் கல்லூரிவீரர் சிறிகஜனும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-1-23)

# பல் வைத்தியர் சங்க வட மாகாண கிளை அங்குரார்ப்பணமும் விஞ்ஞான அமர்வும் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 04

இலங்கை பல்வைத்தியர் சங்கத்தின் வடமாகாணக் கிளையின் அங்குரார்ப்பண வைபவமும் விஞ்ஞான அமர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் ஒழுங் கையில் உள்ள கிறீன் கிராஸ் ஹோட்ட லில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி ஜயசுந்தர பண்டார பிரதம விருந் தி னராகவும், பேராதனைப் பல்கலைக் கழக பல்வைத்திய பீடாதிபதி பேராசிரியர் பிரசாத் அமரதுங்க, இலங்கை பல்வைத் திய சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி பர்ஹிம் ஜமில் ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள ஆசிய பசிபிக் பல்வைத்தியர்கள் கூட்டத்தின் முன்னோடி நிகழ்வாகவே இது அமைய வுள்ளது. என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-6)

## எமது விடிவை நிர்ணயிக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்து உயிர்ப்பு விழாவை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே ஆயர் இந்த அழைப்பை விடுத்துள்ளார். அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு; முப்பது வருட காலமாக நடந்த போரின் துன்பியல் வாழ்வு முடிந்து அமைதியின் காற்றை சுவாசிக் கின்றோம். இராணுவக் கெடுபிடிகள் ஓய்ந்து மக்கள் சுதந்திரமாக நடமாட, பயணம் செய்ய முடிகின்றது. தெற்கில் இருந்தும் எண் ணற்ற மக்கள் நாள்தோறும் யாழ்ப் பாணப் பிரதேசத்தை தரிசித்து மீண்டும் தமது உறவுகளைப் புதுப்பித்து கொள்கிறார்கள்.

இந்நிலையில் தான் நாம் கிறிஸ்து வின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவு கூரும் பாஸ்கா விழாவை எதிர் கொண் டுள்ளோம்.

மறுபுறமாக போர் ஓய்ந்தாலும் இத னால் பாதிக்கப்பட்ட மூன்று லட்சத்துக் கும் அதிகமான மக்களுடைய துன்பங்கள் இன்னும் ஓயவில்லை. எண்பதாயிரத்துக் கும் அதிகமான மக்கள், பெண்கள், சிறு வர்கள் உட்பட வன்னி அகதி முகாம்களிலே துயர வாழ்வை எதிர்கொண்டுள்ளார்கள். எப்போது வீடு திரும்புவோம் என்ற அங் கலாய்ப்போடு அவர்கள் நாள்களை கழிக் கிறார்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வடமராட்சி பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள், இன்னல்கள், சிலுவைகளில் நாமும் பங்கு கொள்ள முயல்வோம்.

### குழப்பமும் சலிப்பும்

இந்நிலையிலும் மீண்டும் ஒரு முக்கிய தேர்தலை நாம் எதிர்கொள்கின்றோம். நாடாளுமன்றத் தேர்தல் என்ற வகையில் முன்னைய தேர்தல்களை விட முக்கியமா னதும் தேவையானதுமாக இது அமைகின் றது. இத்தேர்தலில் வெற்றி பெற ஆளும் கட்சியும், மற்றவர்களும் பலமாக பிரசா ரங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இத்தேர் தலில் பெரும் எண்ணிக்கையில் வேட்பா ளர்கள் போட்டியிடுவது வாக்காளர்களுக்கு பெரும் குழப்பத்தையும் சலிப்பையும் தருவதாக அமைகின்றது.

இருப்பினும் தமிழ் மக்கள் முன்னைய தேர்தல்களைப் போல இத்தேர்தலிலும் ஏனோ தானோ என்ற மனநிலையோடு நடந்துகொள்ளாது தமது விடிவை நிர்ண யிக்கும் முக்கியமான தேர்தல் எனச் சிந் தித்து போதிய கவனம் செலுத்தி தமது அரிய வாக்குகளை சீரிய முறையில் பயன் படுத்தி தமது எதிர்காலத்தை நிர்ணயித் துக்கொள்ள முன்வரவேண்டுமென விநய மாக வேண்டி நிற்கின்றோம். இதுவே இன்று சீரிய முறையில் சிந்திக்கும் அனைத்துத் தமிழ் மக்களுடைய விருப்பமாகும்.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் பலனைக் கொடுக்கும். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வின் ஊற்றாக விளங்குகின்றது. உயிர்ப்பு ஞாயிறு திரு விழாவும் இதனையே உணர்த்துகின்றது. எமது துன்பங்கள் முடிவுறும். எம் கண் ணீரை அவர் துடைத்தருள்வார். மனிதம் மீண்டும் சிறப்புறும். இதுவே உயிர்த்த ஞாயிறு எமக்கு விடுக்கும் நற்செய்தி. அனைவருக்கும் எமது உயிர்த்த இயேசு வின் அன்புமிகு வாழ்த்துக்கள் உரித்தாகட் டும் - என்றுள்ளது. (அ-50)

## திறந்த பல்கலையில் மதிப்பீட்டு பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந் திய நிலையத்தில் முகாமைத்துவக் கற்கைநெறி 2010/ 2011 கல்வியாண் டுக்கான ஆங்கில தர மதிப்பீட்டுப் பரீட்சை இன்று நடை பெறும் என்று அறி வித்துள்ளார்.

முயற்சியாண் மையும் சிறு வணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறி 2010/2011 கல்வியாண்டுக்கான நாள்பாடசாலை நடைபெறும் என் றும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## தேர்தலுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து ஊடகவிய லாளர்களுக்கு அவர் விளக்கமளித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு :-

✱ தேர்தலுக்கான சகல பாதுகாப்பு ஏற் பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

✱ வாக்கெடுப்பு முடிவடைந்ததும் வாக் குப் பெட்டிகளை எடுத்துவரும் வாகனங் களைப் பின்தொடர்ந்து வருவதற்கு அரசி யல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக் களின் முகவர்களுக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. இதற்கான அனுமதியை தலைமை வகிக்கும் சிரேஷ்ட அலுவலர் வழங்குவார். வாகனத்திற்கான 'லேபிள்' ஒன்றும் வழங்கப்படும்.

✱ இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிக்க இலவச வாகனப் போக்குவரத்து ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன.

✱ தேர்தல் பணிகளுக்காகவும் இடம் பெயர்ந்தோர் வாக்களிப்புக்கான போக்கு வரத்துக்கும் 260 பஸ்கள் ஒழுங்கு செய் யப்பட்டுள்ளன. அத்துடன் 89 அரச வாக னங்களும் தேர்தல் பணிகளுக்காக ஒதுக் கப்பட்டுள்ளன.

✱ மாவட்டச் செயலகத்தில் 38 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்படும்.

✱ வாக்கு எண்ணும் நிலையத்தில் ஒவ் வொரு அரசியல் கட்சி, சுயேச்சைக் குழு ஐந்து வாக்கெண்ணும் முகவர்களை நிய மிக்கலாம்.

✱ இவற்றைவிட மேலும் பல தக வல்கள், விளக்கங்கள் அங்கு தெரிவிக்கப் பட்டன. அவை குறித்த விவரங்கள் உத யனில் நாளை வெளிவரும். (ஒ-6)

## தமிழ்கக் கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கிய குழுவாக செயற்படவில்லை. அது ஜனநாயக ரீதியில் செயற்படுகின்ற அர சியல் கூட்டமைப்பாகும். எம்மைத் தடை செய்வதாக அரசாங்கம் கூறுமானால் அதன் அர்த்தம் என்ன? எமது ஜனநாயக போராட் டத்தை நாம் கைவிட்டு விடுவோம் என்று எவரும் எண்ணக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டும் என்ற குறுகிய எண்ணம் அரசாங்கத்தினால் வெளியிடப்பட் டுள்ளது. இது சாதாரணமாகப் நோக்கக்கூடிய விடயமல்ல. பாரதூரமான விடயமா கும்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் கட்சியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழ்கின்றது. இந்நிலையில், அரசாங் கத்தின் நோக்கம் நிறைவேறுமாக இருந்தால் அல்லது அத் தகைய எண்ணம் தோன்றுமாக இருந்தால் தமிழ் மக்களுக்கான குரலை நசுக்குவதற்கான நடவடிக்கையாகவே அது அமையும்.

அத்துடன், இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு என்று எதுவும் இல்லை என்ற நிலையை உருவாக்குவதும் அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது.

அரசாங்கம் என்னதான் கோஷமிட் டாலும் தமிழ் மக்களுக்கான குரலாக விளங் குகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை எவரும் கட்டுப்படுத்த முடியாது. அதனை நாம் கைவிடப் போவதுமில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆயுதம் ஏந்திப் போராட வில்லை என்பதை [illegible] வேண்டும் - என்றார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### சின்னையா விஜயசுந்தரம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா விஜயசுந்தரம் நேற்று (03.04.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சிவஞானம் தம்பதிகளின் பாசமிகு இளைய மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-இரத்தினம் தம்ப திகளின் மூத்த மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், துஜீபன், தசீவன், கவீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் சிவபாலசுந்தரம் (கனடா), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவானந்தன் (சவூதி), சிவனேஸ் வரி (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை), யோகானந்தன் (கனடா), பரமேஸ்வரி (கனடா), குக னேஸ்வரி (கொலண்ட்), நித்தியானந்தன் (கனடா), இரத்தி னேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2010) ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.



### இராசையா இராசரத்தினம்

மண்கும்பான், 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 510, கே.கே.எஸ். வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இரா சையா இராசரத்தினம் நேற்று (03.04.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரா சையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்ற வர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயலட்சுமியின் அருமைக் கணவரும் மகாலட் சுமி, பராசக்தி, யோகேஸ்வரன் (கிராம உத்தியோகத்தர், மண் கும்பான்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திரசித்து, பவளகாந்தன், தெய்வநிதி, கோபாலகிருஸ்ணன், தனலட்சுமி, வசந்தமல்லிகா, தயாநாயகி ஆகியோரின் மைத்துனரும் காலஞ் சென்ற தயாபரன், கீதாஞ்சலி, விக்னேஸ்வரன், மதீஸ், லலிதா, தவராசா, காலஞ்சென்ற விஸ்ணுராஜ், பகீரதன் ஆகியோரின் மாம னாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 510, கே.கே. எஸ் வீதி,
மனோகராச்சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
இ.யோகேஸ்வரன் (சகோதரன் -
கிராம உத்தியோகத்தர், மண்கும்பான்)

# தென்மராட்சியில் நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணி இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஏப்.04

தென்மராட்சிப்பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் அலுவலகத்தில் இன்று காலை 8.30 மணிக்கு இந்த முத்திரையிடும் பணிகள் ஆரம்பமாகி இடம்பெறும் என்று செயலக நிறுத்தல் அளவைகள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத் திரையிடாதவர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடுமாறும் அந்த அதிகாரி கேட்டுள்ளார்.

(50-224)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டு சென்ற இராணுவ வாகனம் ஒன்று, குறித்த வீதியால் பயணித்த கிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர் மீது மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (1)

# உதயன் அதிபரை அவதூறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிபடும் ஓர் அரசியல் வாதியின் அனுசரணையுடன் லண்டனைச் சேர்ந்த சில தரப்புகளால் தயாரிக்கப்பட்ட இந்த துண்டுப் பிரசுரம் ஆயிரக் கணக்கில் அச்சிடப்பட்டு அந்த இயக்க முகாமில் விநியோகத்துக்குத் தயாரான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாக்களிப்புக்கு சில தினங்களுக்கு முன்னர் 'உதயன்' நிர்வாக இயக்குநரின் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையிலான இந்தத் துண்டுப் பிரசுரத்தை விநியோகிக்கவும் -

அதன் மூலம் தேர்தலை ஒட்டிய அரசியல் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளவும் -

மேற்படி இயக்கப் பாணி அரசியல் கட்சியின் தலைவர் திட்டமிட்டிருக்கிறார் எனத் தெரியவருகின்றது.

தமக்குள்ள அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி பாதுகாப்புத் தரப்பினரினதோ பொலீஸாரினதோ கெடுபிடியின்றி இந்தத் துண்டுப்பிரசுரங்களை பெரிய எடுப்பில் குடாநாடு எங்கும் பரவலாக குறுகிய காலத்தில் விநியோகித்து தள்ளுவது பற்றிய சதி ஆலோசனைத் திட்டம் அந்த இயக்க முகாமில் அக்கட்சித் தலைவர் தலைமையில் இடம்பெற்றதாகவும் தெரியவருகின்றது.

மேற்படி இயக்கப்பாணி அரசியல் கட்சியின் உண்மைச் சொரூபத்தை 'உதயன்' நாளிதழ் இந்தத் தேர்தல் காலத்தில் தோலுரித்து அம்பலப்படுத்தி வருகின்றமைக்குப் பழிதீர்க்கும் விதத்தில் - வஞ்சம் தீர்ப்பதற்காக - இந்த அநாகரிக நடவடிக்கையில் அந்த இயக்கத் தலைமை இறங்கியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து உரிய சட்ட மற்றும் பொலிஸ் நடவடிக்கை எடுப்பது குறித்து 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன் திட்டமிட்டு வருகிறார்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றபோது, பொலிஸார் அவர்களைக் கலைந்து போகுமாறு பணித்தனர்.

அச்சமயம் சம்பவ இடத்திற்கு வந்த மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை உடன் கைது செய்யுமாறு உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-1)


தமிழ்க் காங்கிரஸ்

X 10
S.வரதராஜன்
(முதன்மை வேட்பாளர்)
பிரபல பொருளியல் ஆசிரியர்

வேலை ஆள்கள் தேவை
அனுபவமுள்ள ஆண்/பெண் வேலை ஆள்கள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
UNIVERSAL COM
207, KANDY ROAD,
CHAVAKACHCHERI.
T.P.No. 0777627351, 0217451595
(96377)

சுயேச்சைக்குழு - 10

X 5
கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை
முதன்மை வேட்பாளர்
(முன்னாள் கல்விப்பணிப்பாளர்)

மாபெரும் கருத்தரங்கும் இலவச பேசியல் வகுப்புக்களும்
இலவசம் இலவசம்
உடல் எடை கூடிய, குறைந்தவர்களுக்கான கருத்தரங்கும், இலவச பேசியல் வகுப்புக்களும்
* ஆரம்பம் : 05.04.2010 முதல் 10.04.2010 வரை.
* ரிஷி காளான் சோப், கோப்பி விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
* முக அழகு கிறீம், சோப், பேஸ் வோஸ் மற்றும் பலவும் பெற்றுக்கொள்ளலாம்.
அட்சயா
461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
(96350)

யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !
மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின்
BIT
பயிற்சி நெறி இப்போது...
யாழ் மண்ணில் ESOFT இல் மட்டுமே...
விண்ணப்ப முடிவுத் திகதி 12.04.2010
ESOFT The Leader in Professional ICT Education
114, Navalar Road, Jaffna.
Call @ 021 222 4142
077 309 9 308


மாபெரும் பொதுக் கூட்டம்
காரைநகர் புதுவீதிச் சந்தி மைதானத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. பிரபல இசைக்கலைஞர்கள் பங்கேற்கும் இன்னிசை நிகழ்ச்சியும் வாணவேடிக்கையும் இங்கு இடம்பெறும். ஐ.தே.க.வின் முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் இதில் கலந்துகொண்டு மக்களை சந்திக்கின்றார்.
திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முதன்மை வேட்பாளர்)
ஐக்கிய தேசியக் கட்சி
X 8

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)
பிரபல சட்டத்தரணி S.N.விஸ்வலிங்கம் திருமதி S.விஸ்வலிங்கம் (முன்னாள் அதிபர், யாழ்.நவாலி மகாவித்தியாலயம், யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி) ஆகியோரின் மைந்தனும் யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவனும் அகில இலங்கை சட்ட மாணவர்கள் சங்கத்தின் உப தலைவருமான
விஸ்வலிங்கம் மணிவண்ணன்
இத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி (அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்) சார்பில் இளம் வேட்பாளராக போட்டியிடுகின்றார்.
இவரைப் பெருவெற்றிபெற வாக்களிப்போம்.

சட்டத்தரணி நண்பர்கள்
X 8

போரினால் சிதைக்கப்பட்ட தாயகத்தின் இயற்கை வளங்கள் அபிவிருத்தியின் பெயராலும் சூறையாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில், தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சூழலியலாளனும் தேவை
X
2 X
பொ.ஐங்கரநேசன் Msc, PGDJMC
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!! பழைய மாணவர்கள் - யூனிவேர்சல்

TCN EXPRESS INTERNATIONAL
தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 10%-30% விசேட விலைக்கழிவு
உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்.வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சரணாகதி அரசியலும் சாணக்கிய அரசியலும்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டது என்பது போன்ற ஒரு குற்றச்சாட்டு புலம்பெயர் ஊடகங்களிலும், வடக்கு கிழக்கு தேர்தல் மேடைகளிலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு, த.தே.கூட்டமைப்பு சரணாகதி அரசியலை நடத்தி வருகின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் புலம்பெயர் தேசங்களில் ஒருதரப்பால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஊடகம் ஒன்றிற்கு அண்மையில் செவ்வி வழங்கிய தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் சி.வரதராஜனும் த.தே.கூட்டமைப்பு சரணாகதி அரசியலை நடத்துவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றித்தான் நாம் இன்று ஆராய இருக்கின்றோம்.

தமிழினம் மிகுந்த நெருக்கடிக்குள் நின்றுகொண்டிருக்கின்ற இன்றைய சூழலில் தமிழினத்தின் தலைவர்கள் ஒரு நகர்வினை மேற்கொள்ளுகின்ற பொழுது, அந்த நகர்வு வெளிப்பார்வைக்கு தமிழீழத் தனிஅரசு என்ற விடயத்தை தவிர்த்துவிட்டுச் செல்வதுபோல் தோன்றினால், உடனடியாகவே அந்த நகர்வை சரணாகதியாக, துரோகமாக அடையாளப்படுத்திவிடும் போக்கு எம்மத்தியில் புரையோடிப்போயுள்ளது.

அந்த நகர்வின் பின்னால் உள்ள இராஜதந்திரம், அந்த நகர்வினை மேற்கொள்ளுவதற்கு காரணமான அகப் புறச் சூழ்நிலைகள் - இவை எதனையுமே கருத்தில் எடுத்துக்கொள்ளாமல், அந்த நகர்வு பற்றி எதிர்மறையான முடிவை எடுத்துவிடும் ஒரு கலாசாரம் ஈழத் தமிழர் மத்தியில் மிக வேகமாக வளர்ந்து வருகின்றது.

எம்மத்தியில் புரையோடிப்போயுள்ள இதுபோன்ற போக்கானது, எதிர்காலத்தில் ஈழத் தமிழ் தலைமைகள் தமது இனம்சார்ந்த எந்த ஓர் இராஜதந்திர நகர்வினையும் செய்ய முடியாத ஒரு இக்கட்டை தோற்றுவித்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ் அரசியல் தலைவர்கள் உண்மையாகவே தமிழீழத்தை கைவிட்டு விட்டார்களா?

அவர்கள் சரணாகதி அரசியலைத்தான் நடத்திக்கொண்டிருக்கின்றார்களா?

இதுபற்றித்தான் இன்றைய கட்டுரையில் சற்று விரிவாக நாம் ஆராய இருக்கின்றோம்.

இன்று எதற்கெடுத்தாலும் 35 ஆயிரம் மாவீரர்களின் ஆத்துமாக்களைக் காரணம் காட்டிதான், தமது எதிராளிகளை துரோகிகள் என்றும், சரணாகதி அடைந்தவர்கள் என்றும் குற்றம்சாட்டும் வழக்கம் எம்மத்தியில் உள்ள ஒருசிலரிடம் காணப்படுகின்றது.

எமக்காக, எம் இனத்தின் நல்வழ்விற்காக, எமது இனத்தின் எதிர்காலத்திற்காகவென்று தமது உயிர்களை அகுதியாக்கிக் கொண்ட அந்த 35 ஆயிரத்திற்கும் அதிகமான மாவீரர்கள், 'தமிழீழம்' என்ற ஒரே இலட்சியத்திற்காகத்தான் தங்களை எமக்குக் கொடையாகத் தந்துள்ளார்கள். 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று உரக்கக் கோஷமிட்டு, அந்த குறிக்கோளுக்காகவே அவர்கள் தம்மை தியாகம் செய்திருந்தார்கள்.

ஆனால் இன்று அந்த தமிழீழம் என்ற வார்த்தையை, அந்த மாவீரர்களின் ஆத்துமாக்கள் இன்றும் உச்சரித்துக்கொண்டு இருக்கும் அந்த சொற்பதத்தை, நாம் தவிர்த்துவிட்டுத்தான் அரசியல் செய்துகொண்டு இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

உதாரணத்திற்கு புலம்பெயர் தேசங்களில் ஈழ விடுதலைக்கு என்று செயற்படுகின்ற அமைப்புக்களின் பெயர்களை எடுத்துப் பார்த்தால், அவைகளில் அனேகமானவை தமிழீழம் என்கின்ற சொற்பதத்தை தவிர்த்துவிட்டுத் தமது அமைப்பை வெளி உலகிற்கு அடையாளப்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கின்றது. புலம்பெயர் தமிழர் மத்தியில் பிரபல்யமான Global Tamil Forum, British Tamil Forum, Canadian Tamil Congress, Swiss Tamil Forum போன்ற இந்த அமைப்புக்களில் தமிழீழம் என்ற சொற்பதமே இல்லை. அதேபோன்று தமிமீழம் என்ற தமிழ் மக்களின் அபிலாஷையைக் கட்டிக்காப்பதாகவென்று கூறி களமிறங்கியுள்ள கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின் பெயரில் 'தமிழீழம்' என்ற வார்த்தையே இல்லையே.

80களின் ஆரம்பத்தில் தமிழீழம் என்ற வார்த்தையை தமது பெயர்களில் உள்ளடக்காத போராட்ட அமைப்புக்களே இருக்கவில்லை என்பதை இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

ஆனால் இன்று ஏற்பட்டுள்ள அகப்புறச் சூழல் இப்படியான ஒரு மாற்றத்தை இந்த அமைப்புகள் மீது நிர்ப்பந்தித்திருக்கின்றது.

நான் இதனை தவறென்றோ அல்லது அந்த 35ஆயிரம் மாவீரர்களுக்குச் செய்கின்ற துரோகம் என்றோ சொல்லவரவில்லை. இன்று நாம் நின்றுகொண்டிருக்கின்ற காலச் சுழலைக் கருத்தில்கொண்டு, எமது உண்மையான குறிக்கோளை மனதினில் ஆழப் பதித்துக்கொண்டு, வெளி உலகிற்காகவென்று சில நகர்வுகளைச் செய்யவேண்டியது காலத்தின் அவசியமாக இருக்கின்றது.

இதனைத்தான் இராஜதந்திரம், சாணக்கியத் தந்திரம் என்று கூறுவது.

ஓர் இனத்திற்கு நெருக்கடி ஏற்படுகின்ற நேரத்தில் அந்த நெருக்கடியில் இருந்து மீளவதற்காகவென்று ஒரு தலைமை மேற்கொள்ளுகின்ற நடவடிக்கையில் இராஜதந்திரம், சாணக்கியம் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த இனத்தை ஒரு வெற்றிப் பாதையில் ஒரு தலைமையினால் நடத்த முடியும்.

விட்டுக்கொடுப்பு என்பதும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப வளைந்துகொடுத்து காரிய மாற்றுவதென்பதும், சாணக்கியத்தின் (இராஜதந்திரத்தின்) முக்கியமான அம்சங்கள்.

ஒரு நெருக்கடி ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் எப்படியான சாணக்கியத்தனத்தை ஒரு தலைமை வெளிப்படுத்த வேண்டும் என்பது பற்றித்தான் நாம் இந்தக் கட்டுரையில் சற்று விரிவாக ஆராய இருக்கின்றோம்.

சமூகங்கள் அல்லது நாடுகள் நெருக்கடிகளைச் சந்தித்த சந்தர்ப்பங்களில் அதன் தலைமைகள் விட்டுக்கொடுப்பு அல்லது நழுவல் ராஜதந்திரத்தைச் செய்த சந்தர்ப்பங்களை வரலாற்றின் பல இடங்களிலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஜோன் எப் கென்னடி, ஹிட்லர், ஸ்டாலின், ஜவகர்லால் நேரு, பிடல் கஸ்ரோ, லார்ட் மவுன்பேட்டன், மாவோ சேதுங், மகாத்மா காந்தி, தோமஸ் ஜபர்சென் என்று பல தலைவர்களும் நெருக்கடியான காலகட்டங்களில் இதுபோன்ற இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த நெருக்கடிகளில் இருந்து தம்மையும் தாம் தலைமை தாங்கிய சமூகத்தையும் வெற்றிப்பாதையில் நடத்திய சம்பவங்களை வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால், அந்த உலகத் தலைவர்களின் இராஜதந்திர நகர்வுகளை இன்றைய எமது தமிழ்அரசியல் தலைமைகளுடைய சாணக்கிய நகர்வுகளுடன் ஒப்பிட்டு நான் ஆராயப் போக, பாவம் அந்த உலகத்தலைவர்களையும் சில புலம்பெயர் இணையத்தளங்கள் துரோகிகள் என அடையாளப்படுத்துவிடுவார்கள். அதனால் எமது புலம்பெயர் இணையத்தளங்கள் இலகுவில் துரோகிகள் என்று அடையாளப்படுத்த முடியாத ஒரு தலைவர் மேற்கொண்ட சில இராஜதந்திர நகர்வுகள் பற்றி ஆராய்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

ஆம் எமது தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பற்றித்தான் கூறுகின்றேன்.

தமிழீழத் தேசியப் போராட்ட வரலாற்றில் அந்தப் போராட்டம் நெருக்கடிகளைச் சந்தித்த காலகட்டங்களில் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மேற்கொண்ட சில இராஜதந்திர நகர்வுகள் பற்றிய பார்ப்பது, இராஜதந்திரத்தின் பக்கங்களை விளக்குவதற்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கின்றேன்:

## 1994ஆம் வருடத்தில்

1994ஆம் வரும் ஈழத் தமிழினம் ஒரு நெருக்கடியான சூழ்நிலையைச் சந்தித்த காலகட்டத்தில், தேசியத் தலைமை மேற்கொண்ட ஓர் இராஜதந்திர நகர்வு பற்றி முதலில் பார்ப்போம்.

முதலில், 90களின் ஆரம்பத்தில் வடக்கு, கிழக்கு மக்கள் வாழ்ந்த சூழ்நிலைபற்றி ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

அந்த நேரத்தில் [illegible] மற்றும் [illegible]யின் பெரும் பகுதிகள் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. மட்டக்களப்பின் வாகரை மற்றும் படுவான் கரைப் பிரதேசங்களின் பெரும் பகுதிகளும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தன.

பிரேமதாஸவின் கொடுங்கோல் ஆட்சிக் காலம் அது.

பரங்கரவாதத்தடைச் சட்டம், அவசர காலச்சட்டம், பொருளாதாரத் தடை போன்றனவற்றை தமிழ் மக்கள் மீது பிரயோகித்து, தமிழ் மக்களின் வாழ்வியலை ஒரு இரும்புப் பிடிக்குள் வைத்துக்கொண்டு, பிரேமதாச கொடுமையான ஆட்சியொன்றைப் நடத்திக்கொண்டிருந்தார்.

மறுபக்கம் இந்தியா ரஜீவ்காந்தி கொலையினால் சினந்தெழுந்து ஒருவகையான கடல்வழி முற்றுகையை தமிழர் தாயகம் மீது மேற்கொண்டிருந்த காலம். தமிழ் நாட்டில் இருந்து உணவுப் பொருட்கள் வருவது கிட்டத்தட்ட முற்றாகவே தடுக்கப்பட்டிருந்தது. கடல் வழியான ஆயுத விநியோகமும் இந்தியக் கடற்படையினால் தடைசெய்யப்பட்டிருந்தது.

அந்தக் காலம் தமிழர் தேசமே மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது. அந்த அநீதியான நடவடிக்கையின் விளைவாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் மீது உணவுக்கும், எரிபொருள்கள், மருந்து - என்று அனைத்து அத்தியாவசிப் பொருள்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. மீன்பிக்கும் தடை. மின்சாரத்திற்குத் தடை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் குழந்தைக்களுக்காக பால்மா கிடைப்பது அரிது. தலைவலிக்கான ஒரு பனடோலின் விலை நூறு ரூபாய். சோப், ஷம்போ போன்றனவற்றிற்குப் பதிலாக பனம்பாணியை மக்கள் உபயோகித்த காலம் அது வானொலி கேட்பதானால், துவிச்சக்கர வண்டியை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு, வண்டியை மிதித்து சைக்கிள் டைனமோவிலிருந்து மின்சாரத்தை எடுத்து, அதில் வானொலியைப் பொருத்தி, அதன் பின்னர்தான் வானொலி கேட்கமுடியும்.

என்றுமில்லாத இன்னல்களை தமிழர் தேசம் எதிர்கொண்ட காலம் அது.

மறுபக்கம் விடுதலைப் புலிகளும் தொடர் இராணுவ நடவடிக்கையினால் பாரிய ஆயுதப் பற்றாக்குறையை எதிர்கொண்ட காலம் அது.

ஒப்பரேசன் வன்னி விக்கிரம-1, 2, 3 , ஒப்பரேஷன் மின்னல், ஒப்பரேஷன் சிக்சர், ஒப்பரேஷன் யாழ்தேவி என்று சிறிலங்கா இராணுவத்தின் தொடர் படை நடவடிக்கைகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது பிரயோகிக்கப்பட்ட காலகட்டம் அது. கடல் ரீதியாகவும் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகள் மீது பாரிய முற்றுகையை சிறிலங்கா மற்றும் இந்தியக் கடற்படைகள் மேற்கொணடிருந்ததால், விடுதலைப் புலிகளுக்கும் அந்த நேரத்தில் பாரிய ஆயுதத் மற்றும் வெடிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது.

தளபதி பால்ராஜ் தலைமையிலான சாள்ஸ் அன்ரனி படை அணியை அவசர அவசரமாக மின்னல் வேகத் தாக்குதல் என்ற பெயரில் எதிரிகளிடம் இருந்து ஆயுதங்களைக் கைப்பற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் அளவிற்கு, விடுதலைப் புலிகளும் அந்தக் காலகட்டத்தில் பலத்த நெருக்கடிகளைச் சந்தித்திருந்த காலகட்டம் அது.

இப்படியான ஒரு நெருக்கடி நேரத்தில் தான், சிங்களத் தலைவியான சந்திரிகா சமாதானம் பேசியபடி புலிகளுக்கு நேசக்கரம் நீட்டியிருந்தார்.

தான் ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்திப் போருக்கு முடிவுகட்டுவேன் என்று அவர் தேர்தல் மேடைகளில் முழங்கி வந்தார். தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி, வடக்கு-கிழக்கில் இருந்து சிங்களப் படைகளை கௌரவமாக வரவழைப்பேன் என்றுகூட, கொழும்புப் புறநகர் பகுதியில் உள்ள நுகேகொடை என்ற இடத்தில் பகிரங்கமாகச் சந்திரிகா அறைகூவல் விடுத்திருந்தார்.

சந்திரிகாவின் இந்த நிலைப்பாடு, நெருக்கடிக்குள் நின்று திக்குமுக்காடிக்கொண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெற்றிருந்தது.

சந்திரிகாவின் இந்த நேசக்கரத்தைத் தமிழ் மக்கள் பற்றிப் பிடித்தார்கள்.

சிங்களத் தலைமையின் அந்த நேசக்கரத்தைத் தேவை கருதி விடுதலைப் புலிகள் அமைப்பும் பற்றிப்பிடித்தது.

நெருக்கடி ஒன்றைத் தமிழ் இனம் எதிர்கொண்ட அந்தச் சந்தர்ப்பத்தில், அந்த நெருக்கடியில் இருந்து தமிழினத்தை மீட்டெடுக்கும் நோக்குடன் தமிழீழத் தேசியத் தலைமையும் சில இராஜதந்திர நகர்வுகளை அந்த நேரத்தில் மேற்கொண்டது.

சந்திரிகாவின் இந்த நேசக்கரத்தைத் தமிழ் மக்கள்தான் பற்றிப் பிடித்தார்கள் - விடுதலைப் புலிகள் ஒன்றும் அதனைப் பற்றிப்பிடிக்கவில்லை என்று வரலாற்றை மறந்து, மறைத்து விவாதம் நடத்தும் ஒரு சிலருக்கு, இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் எழுதியுள்ள ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

War and Peace என்ற தனது புத்தகத்தில் 4ஆம் அத்தியாயத்தில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், சந்திரிகா நீட்டிய கரத்தை விடுதலைப் புலிகள் பற்றிப் பிடித்ததை புலிகள் மேற்கொண்ட ஒரு தந்திரோபாய நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, 1994ஆம் ஆண்டுத் தேர்தலில் சந்திரிகா வெற்றிபெறுவதை ஓர் இராஜதந்திர நோக்கத்திற்காக விடுதலைப் புலிகள் விரும்பினார்கள் என்பதையும், சில விட்டுக்கொடுப்புக்களையும் அந்த நேரத்தில் புலிகளின் தலைமை மேற்கொண்டது என்பதையும் வெளிப்படுத்தும் மேலும் சில சம்பவங்களையும் இன்றைய இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கும் முன்னர், அவர் சமாதானம் பேசியபடி பொதுத் தேர்தலில் குதித்து, 1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி பிரதம மந்திரியாகப் பதவியேற்றார். அவர் பவியேற்று இரண்டு வாரங்களுக்குள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு சில அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுசெல்வதற்கு சிறிலங்கா அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையின் ஒரு பகுதியை நீக்கி, தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

**- நிராஜ் டேவிட் -**

சந்திரிகாவின் இந்த மனிதாபிமான நல்லெண்ணச் சமிக்கைக்கு, விடுதலைப் புலிகளின் தலைமை சாதகமாப் பதிலளித்தது.

விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 10 சிறிலங்கா காவல்துறையினரை விடுதலைசெய்து புலிகள் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, 1994ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதியிட்டு புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சந்திரிகாவுக்கு ஒரு கடிதத்தையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக அனுப்பிவைத்தார்.

பிரபாகரன் தனது அந்தக் கடிதத்தில், சந்திரிகாவின் நல்லெண்ணச் சமிக்கையை தாம் வரவேற்கிறார் என நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தான் தயாரென்றும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஏதுவான அமைதியான சூழ்நிலையையும், இயல்பு நிலையையும் உருவாக்குவதற்குச் சந்திரிகா அரசாங்கம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் தாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறார் என புலிகளின் தலைவர்

(VIIஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழ் மக்களின் வாழ்வியல் அவலங்களை அகற்றப் போராடுவோருக்கு வாக்களியுங்கள்!

## ஐ.தே.க. வேட்பாளர் துவாரகேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.4

ஈழத்தமிழர்களின் வாழ்வியல் அவலங்களைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் விவரித்துக் குறிப்பிட்டு வரும் ஐ.தே. கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் தியாகராசா துவாரகேஸ்வரன், அவற்றை அடியோடு அகற்றுவதற்கு தளராது போராடும் தரப்புக்களையும் வேட்பாளர்களையும் மக்கள் அடையாளங்கண்டு அந்தத் தரப்பினருக்கே தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என்றும் கோரிவருகின்றனர்.

முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரனின் சகோதரனான துவாரகேஸ்வரன் ஐ.தே.க. பட்டியலில் முதலாவது இலக்க வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

கடந்த சில தினங்களாக பூநகரி, காரைநகர், சிறுப்பிட்டி போன்ற இடங்களில் ஆற்றிய உரைகளின் போது அவர் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு வருமாறு :-

போர் முடிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் அந்தப் போருக்கான பிரதான காரணங்கள் எவையும் இன்னமும் தீர்க்கப்படவில்லை. அதற்கான எந்த முயற்சிகளையும் இன்றைய அரசு எடுக்கப்போவதாகவும் தெரியவில்லை.

ஆனால் போர் வெற்றியை அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்தும் மூலோபாயங்களுக்கே இன்றைய 'மஹிந்த சிந்தனை' முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

போரினால் சிதையுண்டு அழிந்த வடக்குக் கிழக்குப் பிரதேசங்களும் அந்தப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் பொதுமக்களும் கண்காட்சிப் பொருள்களாக்கப்பட்டு வருகின்றனர்.

தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகள் முன் ஏதிலிகளாகத் தமிழ் மக்கள் கூனிக் குறுகி, முட்கம்பி வேலிகளுக்குள்ளும், பிளாஸ்ரிக் கூடாரங்களுக்குள்ளும், இராணுவ வேலிகளுக்குள்ளும் முடங்கிக் கிடப்பதை 'மேலாதிக்கப் பார்வையுடன்' வேடிக்கை பார்த்துச் செல்கின்றனர் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள்.

அந்த மக்களின் - எஞ்சியுள்ள அடிப்படை வளங்களும், வாழ்க்கையில் அவர்கள் இதுவரை சந்தித்திராத வர்த்தக ஏமாற்று உத்திகளால் தொடர்ந்தும் சுரண்டப்படுகின்றன.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை வாழ்வியல் கலாசாரத் தொன்மைகளைப் புறந்தள்ளி அவமதிக்கும் - அவர்களின் தனித்துவத்தைச் சிதைக்கும் - நடவடிக்கைகள் மிகவும் தந்திரோபாயமான ரீதியில் இயல்பான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

அபிவிருத்தி, மேம்பாடு என்ற பெயரால் இந்த மக்களின் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, ஆடம்பர வாழ்வில் மேம்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப் பட்டு வருகின்றது.

அரசியல் அனுகூலங்களுக்காக ஆட்சி பீடத்தவருடன் அரவணைத்துச் செல்லும் அரசியல் பிழைப்பாளிகளுக்கு இதுபற்றிய சிந்தனைகள் இல்லை.

இந்த நாசகார நகர்வுகளையெல்லாம் அபிவிருத்திப் பணிகள் எனக் கைதட்டி மக்களை நம்பவைக்கும் பிரசாரங்களை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அவலங்களுள் மூழ்கி, அலமலந்து, அதிகாரவர்க்கத்தின் முன்னால் அடிமைகள் போன்று, நிவாரணங்களுக்காகவும், அற்ப சலுகைகளுக்காகவும் கையேந்தி நிற்கும் அவமானம் தொடரவே செய்கிறது.

இதனை இப்படியே தொடர, மௌனக் காட்சிகளாகப் பார்த்திருக்கலாமா?

அது தமிழ் பேசும் மக்களுக்கு நாம் செய்யும் வரலாற்றுத் துரோகமாகிவிடும்.

குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பாக எம்மால் இருக்க முடியாது.

இது ஒரு நெருக்கடிமிக்க காலகட்டம்; தமிழ் மக்களும், அவர்கள் எதிர்கால வாழ்வு பற்றி பொறுப்புடனும் தொலை நோக்குடனும் சிந்திக்கும் மனிதநேயப் பணியாளர்களும் ஒருங்கிணைந்து சிந்தித்துச் செயற்படவேண்டிய காலகட்டம்.

இந்த மக்களின் பிரச்சினையை வைத்து அரசியல் வியாபாரம் செய்ய வந்துள்ள குழுக்களையும், கும்பல்களையும், ஆயுத பாணி அமைப்புகளையும், அரசியல் அநாமதேயங்களையும் இனங்கண்டு நிராகரித்து, ஒதுக்கி, புறந்தள்ளாவிடில் அடுத்த ஆட்சிக் காலத்துள் நாமனைவரும் - தமிழ் மக்கள் அனைவரும் முகமிழந்து - முகவரியிழந்த மக்கள் ஆகிவிடுவோம்.

'ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் அந்த இனத்தின் கலாசார அடித்தளத்தை இல்லாமல் செய்தால் போதுமானதாகும்' - என்ற அரசியல் மூலோபாயத்தையே இந்த அரசும் அதன் அடிவருடிகளும் மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதனைத் தேர்தலை முன்னிட்டு நாம் கூறவில்லை. தேர்தல் வெற்றி தோல்விகளுக்கப்பாலும் நாம் செய்யவேண்டிய - தொடர்ந்து செய்யவிருக்கின்ற பணிகளின் அவசியத்தை உணர்ந்துகொண்டே கூறுகிறோம்.

மக்கள் தவறான சக்திகளுக்கு அங்கீகாரம் வழங்கினால் ஏற்படவுள்ள ஆபத்தை எச்சரிக்கையுடன் உணர்த்தித் தொலை நோக்குடன் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்றே அறைகூவல் விடுக்கின்றோம்.

உங்கள் கைதட்டுக்களுக்காக வாக்குறுதிகளை அள்ளி வழங்குவோரை நம்பி ஏமாறாதீர்கள். சிந்தித்து வாக்களியுங்கள். அது உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டும்.

✱ போரால் சிதைந்த எங்கள் மண் மீளெழுச்சி காணவேண்டும். அதற்கான திட்டங்களில் மக்களும் பங்காளராக வேண்டும்.



✱ முட்கம்பிக்குள் - முகாம்களுக்குள் - இராணுவ வேலிகளுக்குள் - முடங்கி வாழும் எம்மக்கள் தங்கள் வாழ்விடங்களில் எவ்வித அச்சுறுத்தலுமின்றி இயல்பாக வாழும் நிலையை நாமே சர்வதேச அனுசரணையுடன் உருவாக்கவேண்டும்.

✱ போரில் ஊனமுற்றோர், கணவரை இழந்தோர், குடும்பத் தலைவரை இழந்தோர், பெற்றோரை இழந்தோர், குடும்பத்திற்காக உழைக்கும் இளைஞர், யுவதிகளை இழந்தோர் அனைவருக்கும் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த உடனடி மற்றும் நீண்டகாலத் திட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

✱ விவசாயிகள் வாழ்வு உயர்ச்சி பெறவும், இராணுவ மற்றும் ஏனைய சக்திகளின் ஆக்கிரமிப்புக்குள்ளான விளை நிலங்கள் அவர்களுக்கு மீளக்கிடைக்கவும், அவர்களுக்குத் தேவையான - அவர்கள் போரின்போது இழந்த - அனைத்து வளங்களையும் மீளப்பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

✱ போரினால் சிதையுண்டுபோன எமது மாணவச் செல்வங்களின் மூலாதாரமான கல்வி முழுமையாகச் சீரமைத்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். நவீன உலகின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கல்விகள் அவர்களுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

✱ ஊனமுற்ற மாணவர்கள் கல்வியில் முக்கிய கவனம் எடுத்து அவர்களின் எதிர்கால வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்ற வேண்டும்.

✱ போரின்போது மன்னார் முதல் முள்ளிவாய்க்கால் வரை இடம்பெயர்கையின்

(VII ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக் கலாசாரத்துக்குச் சாவுமணி அடிப்பதற்காக தனக்கு வாக்களிக்குமாறு கோருகின்றார் அங்கஜன்!

## அராஜகக் கும்பல் இந்த மண்ணை விட்டே ஓடும் நிலையை 8ஆம் திகதி ஏற்படுத்தலாம்

யாழ். மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் முதலாவது இலக்கத்தில் போட்டியிடும் இராமநாதன் அங்கஜன் வெளியிட்ட விசேட அறிக்கை இது.



இந்நாட்டில் நிலவிய சூழ்நிலையில் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஒரு வழிகாட்டியாக இருப்பதற்கு நான் இத்தேர்தலைப் பயன்படுத்துகிறேன். இதற்கு எமது மக்கள் தமது விருப்புக்களை 8ஆம் திகதி நடைபெற உள்ள வாக்களிப்பில் பயன்படுத்தவேண்டும் எனக்கூறி வருகின்றேன். இதனைப் பெரும்பாலான எமது சகோதர, சகோதரிகள் ஏற்று இருக்கின்றமையை நான் செல்லும் இடமெல்லாம் காணமுடிகிறது. இனிவரும் காலங்களில் எமது மக்கள் சுதந்திரமான தேர்தலைச் சந்திப்பதற்கு எனது தேர்தல் பிரசாரப் பணி பெரிதும் உதவியுள்ளது. இதனால் என் பின்னால் நிற்கும் மக்களின் பலம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

என்னைப்போன்ற இளைஞர்கள் இனிமேல் சுதந்திரமாக தேர்தல்களைச் சந்திக்க வேண்டும் என்பதை நிரூபிப்பதற்கே நான் இக்களத்தைச் சந்திக்கின்றேன். எனக்குப் பின்னால் வயது வித்தியாசம் இன்றி எமது மக்கள் அணிதிரண்டு வருகின்றமை என்னை உற்சாகப்படுத்துகின்றது.

இனிவரும் காலங்களில் தேர்தல்களில் ஆயுத கலாசாரம் இல்லாமல் இருப்பதற்கு இம்முறை சாவுமணி அடிக்கப்பட வேண்டும். அதற்காக ஏப்ரல் 8ஆம் திகதி நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் விதையாக விதைக்கப்பட வேண்டும். அந்த விதை ஏப்ரல் 9ஆம் திகதியில் இருந்து முளைத்து பெரிய ஆலமரமாக வளர்ந்து எமது சமுதாயத்திற்கு ஆனந்தம், அன்பு, கருணை நிறைந்த மக்கள் வெள்ளமாக வளர்ந்து, எமது மண்ணை நேசிக்கும் கரங்களாக மாறவேண்டும்.

இந்த நிலைமை உருவாகின்றமையைப் பொறுக்க முடியாத தீய சக்திகள் கடந்த சில நாள்களாக எம்மை இம்மண்ணில் இருந்து அகற்றப் பார்க்கின்றன. எங்களை அகற்றுவதற்குப் பலவிதமான உத்திகளைப் பயன்படுத்துகின்றன. நமது பலம், பெரும் சக்தியாக மாறிவிட்டதால் எனது உயிரைப் பறிக்கப் பார்த்தனர். அதுதான் கடந்த முதலாம் திகதி அதிகாலை 12.30 மணிக்கு யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள இந்துமத குருமார் ஒன்றியத்திற்கு முன்னால் நடந்தேறியது.

அன்று ஜனாதிபதியின் வருகைக்காகத் துரையப்பா விளையாட்டரங்கை அலங்கரித்துவிட்டு வரும் வழியில் 'E.B.C' என்ற ஆங்கில எழுத்துப் பொறிக்கப்பட்ட பார ஊர்தியில் வந்த ஆயுதக் கலாசாரப் பின்னணி கொண்ட குழுவினர் ஆயுதத்துடன் எம்மை வழிமறித்தனர். உடனடியாக இம்மண்ணில் இருந்து வெளியேறுமாறும் நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து விலகி விடுமாறும் எனது தலையில் துப்பாக்கியை வைத்த படி அச்சுறுத்தினர். அத்துடன் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த எமது தொண்டர்கள் எண்மர் தாக்கப்பட்டு, அவர்களில் மூவர் சிறைப்பிடிக்கப்பட்டனர். எனது வாகனம் எரிக்கப்பட்டது. தெய்வாதீனமாக நான் காப்பாற்றப்பட்டேன்.

இந்த நேரத்தில் அவர்களது வாகனமே எம்மைச் சுற்றி வளைத்து, தாக்கியமையை அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸ், இராணுவ அதிகாரிகள் நன்கு அறிவர்.

அத்துடன் எமது சிறைப்பிடிக்கப்பட்ட தொண்டர்கள் இந்த மண்ணை விட்டு அகலவேண்டும் என்ற நிபந்தனையில் விடுவிக்கப்பட்டதால் அவர்களை நாங்கள் உயிர் ஆபத்திலிருந்து காப்பாற்ற கொழும்பிற்கு அனுப்பியுள்ளோம்.

இந்த நிலையை நான் மிகவும் தெளிவாகத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய அராஜகப் போக்குகளை நீங்கள் வாக்குகள் மூலம் பதிலடி கொடுத்து இனிவரும் சந்ததியை இம்மண்ணில் சுயகௌரவத்துடன் வாழ வைக்க என்போன்ற சகோதரர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சாவகச்சேரியில் எமது சகோதரர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், எமக்கு நடந்தது போன்று காரைநகரில் நடந்த தாக்குதல் சம்பவம், கடந்த முதலாம் திகதி யாழில் எமக்கு நடந்த சம்பவம் போன்றவை யாரால் இங்கு அரங்கேற்றப்பட்டன என்பதை எம்மக்கள் நன்கறிவீர்கள்.

இதன் பிரதிபலிப்பை 8ஆம் திகதி உறுதி செய்யும்போது, இந்த அராஜகக் கும்பல்கள் இந்த மண்ணை விட்டு ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதை அறிந்து மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை நாம் அறிவோம்.

முதலாம் திகதி அதிகாலை இடம்பெற்ற சம்பவம் சம்பந்தமாக நாம் சட்டத்தின் உதவியை நாடி உள்ளோம். அந்தச் சம்பவத்தை நாம் அரசு சார்பான வர்காளாக இருந்தாலும் கூட உடனே சட்டத்தை மதித்து, பொலிஸில் முறைப்பாடு செய்தோம். ஆனால் இன்றைய யாழ். மேயரோ அவர் பொலிஸில் முறைப்பாடு செய்யாது அமைச்சருக்கு முறையிட் டிருக்கின்றார் எனக்கூறியுள்ளார். இதிலிருந்து யாழ். மேயர் சட்டத்தை மதிக்கத் தவறிவிட்டார் என்று புலனாகிறது. எந்தக் கட்சியினராக இருந்தாலும் சட்டத்தின்படி நடக்க வேண்டிய பொறுப்பு மேயருக்கு உண்டு. எமக்கு எதிரான மேயரின் கூற்றுக்களுக்கு நாம் விரைவில் சட்டத்தின் உதவியுடன் அதற்கான நடவடிக்கை எடுப்போம்.

பத்திரிகை மூலம் எமக்கு எதிராக அவர் வெளியிட்ட அபவாதச் செய்திக்காக நீதிமன்றம் மூலம் உரிய நடவடிக்கை எடுத்து மக்களுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்துவோம்.

என்னைப் பொறுத்தவரை நான் இதுவரையும் அரசியலில் ஈடுபடவில்லை. அரசியலுக்கு நான் தகுதியானவன். வெளிநாட்டில் உயர் கல்வியைக் கற்று பண்பாடாக வளர்ந்த நானோ, என்னைச் சார்ந்தவர்களோ பெண் மேயரைத் தாக்கினோம் என்று வெளியான செய்தி எம்மைப் பெரிதும் பாதித்துவிட்டது. மேயரின் கூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

எமது மக்கள் தலைநிமிர்ந்து வாழவே எனது உயிரையும் துச்சமென மதித்து இன்று உங்களுடன் இணைந்து கொள்கின்றேன். எமது மக்களின் ஆயுதமற்ற கரங்களைப் பலப்படுத்த 8ஆம் திகதி அதிகாலையிலேயே சென்று வாக்களிக்குமாறும், சகலரையும் இந்த வாக்களிப்பில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய இளம் சந்ததியினரைக் காப்பாற்ற, இன்றைய தேர்தலில் மக்கள் வாக்குகளை ஆயுதமாகப் பயன்படுத்தி, என்னுடன் அணிதிரண்டு வருமாறு அன்புடன் அழைக்கின்றேன் - எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் பின்னர் சர்வதேசம், இந்தியாவின் ஆதரவைப் பெற்று வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த முயல்வோம்

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமான மாவை.சேனாதிராசா உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வி இது.**

**கேள்வி:-** இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பல முனைப் போட்டிகளை எதிர்கொள்கின்றது. அத்துடன் மக்கள் மத்தியிலும் கூட்டமைப்பின் மீது அதிருப்தி நிலை காணப்படுகிறது. இந்நிலையில் இத்தேர்தலை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?

**பதில்:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது மக்களுக்கு அதிருப்தி இல்லை என்பதே உண்மை. இன்றுள்ள களநிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பலமான ஒரு சக்தியாகக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கியுள்ளது.

ஆனால் அரசைப் பொறுத்தவரையிலும் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையிலும் - தமிழ் மக்களின் பலம்வாய்ந்த சக்தியாகக் கூட்டமைப்பு வந்துவிடக்கூடாது என்பதில் திட்டவட்டமாக உள்ளனர். அதற்காகப் பல சுயேச்சைக் குழுக்களையும் உதிரிக் கட்சிகளையும் களமிறக்கி விட்டுள்ளனர் என்பது எமக்குத் தெரியும்.

சுயேச்சைக் குழுக்களும் உதிரிக் கட்சிகளும் போட்டியிடுவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குப்பலம் சிதையும் என நினைக்கவில்லை. இப்போதுள்ள கேள்வி என்னவென்றால் தமிழ் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவையும் அரசையும் அவர்களின் திட்டங்களையும் ஏற்கப் போகிறார்களா?

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஏற்கனவே தமிழர் தாயகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கவில்லை. இது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நிரூபணமானது.

இப்பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலம் வாய்ந்த சக்தியாக மீண்டும் வெற்றிபெறச் செய்வார்கள் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது.

**கேள்வி:-** தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியா தனக்குக் கரிசனை உள்ளது எனக் காட்டினாலும் தமிழ் மக்களுக்கு ஒரு முகத்தையும் தென்னிலங்கைக்கு ஒரு முகத்தையும் காட்டுகிறது. இதுவரை பிரச்சினைக்கான தீர்வில் ஆக்கபூர்வமான செயல் ஒன்றையும் செய்யவில்லை. இந்நிலையில் கூட்டமைப்பு இந்தியாவை முழுமையாக நம்புவது தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தி உள்ளதே?

**பதில்:-** இந்தியாவைப் பொறுத்தவரை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு முக்கியமான - கேந்திரம் வாய்ந்த நாடாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழ்மக்களுக்கு இவ்வளவு காலமும் அது எதுவும் செய்ததில்லை. அதற்கு ஈடாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத்தர உதவ வேண்டும்.

பிரச்சினைக்கான தீர்வினை எட்ட இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுவே இன்றைய தேவையாகவும் உள்ளது. இந்தியாவை நாங்கள் பகைத்து நிற்கும்வரை சாதகமான நிலை ஏற்படாது. எனவே நட்பு ரீதியான அணுகுமுறை அவசியம் என நம்புகின்றோம்.

### இந்தியா மீது எமக்கும் மன வருத்தம் உண்டு

இந்நிலையில் இந்தியாவின் சமீபகால நடவடிக்கைகளால் தமிழ் மக்களுக்கு அதிருப்தி உள்ளது என்பதை நாமும் அறிவோம். எங்களுக்கும் இந்தியாவின் மீது மனவருத்தங்கள் உண்டு. இருந்தாலும் இப்பிராந்தியத்தில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியா எமக்கு உதவத் தயாராகவே உள்ளது. நாம் அந்நாட்டுடன் இராஜதந்திர உறவில் ஈடுபட வேண்டியது அவசியம் என நினைக்கின்றேன்.

இந்தியாவின் நட்பினை, நம்பிக்கையைக் கட்டி எழுப்ப வேண்டியது அவசியம். இந்தியா முன்னரைவிட தமிழ் மக்கள் மீது கூடுதலான அனுதாபத்தைக் கொண்டிருக்கும் என்றும் நம்புகிறோம். நாமும் இந்தியாவின் மீது நம்பிக்கை கொள்வதுடன் எம்மீது இந்தியா நம்பிக்கை கொண்டு நடக்க வேண்டியது அவசியம் என்றும் நம்புகிறேன்.

**கேள்வி :-** இந்தியாவை மறைமுக நட்பு சக்தியாகவும் சீனாவை அனைவருக்கும் தெரிந்த நட்பு சக்தியாகவும் பயன்படுத்தி தமிழ் மக்களை அரசு இன்னமும் அடக்கியாள முற்படுகிறதே?

**பதில் :-** எங்களைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பிரதேசங்களிலும், இலங்கையின் அரசியல் விவகாரங்களிலும் சீனா செல்வாக்குள்ள சக்தியாக வளர்ந்து வருவதாகவே தெரிகின்றது. இந்நிலையில் இந்திய நாடு எதிர்காலத்தில் தமிழ் மக்களை நேச சக்தியாகக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என நம்பலாம்.

### சீனாவின் செல்வாக்கு

சீனா இன்று தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ முகாம்களைக் கட்டிக் கொடுப்பதிலும் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவதையும் காணலாம். இதேநேரம் தமிழ்மக்களிடத்திலும் செல்வாக்குக் குறைந்துள்ள நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. எமது மதிப்பீட்டின்படி இந்தியா இலங்கையுடன் இராஜாங்க ரீதியாக முரண்பட்டு நிற்கின்றது.

இந்நிலையில் எமது பொறுப்பு இந்தியாவை எமக்குச் சாதகமாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. இதில் நாம் வெற்றி பெறுவோம் என்றும் நம்புகிறோம்.

## அயல்நாட்டுடன் இலங்கை முரண்பட்டிருக்கும் நிலையை நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

**கேள்வி:-** வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தை 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த கூட்டமைப்பினரால் தடுக்க முடியவில்லை என்றும் அப்போது நீங்கள் உட்படப் பலர் வெளிநாடுகளில் சொகுசு வாழ்வை அனுபவித்ததாகவும் கூறப்படுகிறதே?

**பதில்:-** இதனை முற்று முழுதாக மறுக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை நாங்கள் அந்த நேரத்தில் ஒவ்வொரு மாதகாலமும் யாழ்ப்பாணத்தில் நின்றிருந்தோம். மிக மோசமான சூழலில் கூட இங்கே நின்றோம். குண்டுவீச்சுக்களின்போது வன்னியில் நின்றிருந்தோம். சிலர் வெளிநாடுகளில் நின்றனர் என்பதற்காக அனைவரையும் குறைகூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். இது எம்மீது சேறு பூசுவதற்காகவே கூறப்படுகின்றது.

**கேள்வி:-** தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வை விடுதலைப் புலிகள்தான் பெற்றுத் தருவார்கள் என மக்கள் நம்பிய நிலையில் அதன் இயங்கு நிலையின் ஸ்தம்பிதத்தால் விரக்தி அடைந்துள்ளனர். இந்நிலையில் புலிகளினதும் பெரும்பாலான தமிழ் மக்களினதும் ஆதரவைப் பெற்ற கூட்டமைப்புக் குறுகிய இலாபங்களுக்காகப் பிளவுற்று நிற்கின்றதே? அல்லது ஒரு சாரார் கூறுவதுபோல் புலிகளுக்குப் பயந்துதான் ஒற்றுமை போன்று நாடகமாடியதா?

**பதில்:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 6 ஆண்டுகளிலும் ஒன்றுபட்ட சக்தியாகவே விளங்கினர். மஹிந்த ராஜபக்ஷ ஏனைய கூட்டணிகளில் பிளவை ஏற்படுத்தியது போன்று கூட்டமைப்பில் ஏற்படுத்த முடியாதுபோய்விட்டது.

ஆனால் கூட்டமைப்பில் இருந்த சிலர் அரசுடன் இரகசிய உறவைப் பேணியது எமக்குத் தெரியும். அவர்கள் இத்தேர்தலில் போட்டியிட வேட்பாளர் பட்டியலில் இடம் பெறவில்லை. இதனால் சிலர் தனியாகச் சென்றனர்.

மிகப்பலவீனமான சிலர் அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர். தாம் கொள்கை ரீதியாக ஏற்பட்ட முரண்பாட்டால் கூட்டமைப்பை விட்டு வெளியேறியதாகக் கூறினர்.



நாம் சுயநிர்ணய உரிமை அடிப்படைத் தத்துவத்தில் பேசவே முயல்கிறோம். அரசியல் தீர்வின் மூலமே தீர்வு எட்டப்பட வேண்டும்.

மக்கள் எந்தச் சலனமும் இல்லாது கூட்டமைப்பின் பக்கம் உள்ளனர். அதன் ஒற்றுமையைக் கட்டி எழுப்பி அதன் பலத்தை அதிகரிக்கத் தீர்மானித்துவிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது கொள்கையின் அடிப்படையில் தெளிவாக ஒற்றுமையாகவே நிற்கிறது. இன்று தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் ஒரே கட்சி கூட்டமைப்பே என்பதை திடமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கேள்வி :-** தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் வகையில் அரசு தேர்தல் முறைமையை மாற்றியமைக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றதே?

**பதில் :-** இலங்கை அரசு தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை அரசியல் பலத்தைச் சிதைக்கும் வகையில் சிறுபான்மையினரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளதை நாம் அறிவோம்.

### அரசின் குடியேற்ற முயற்சி நடக்கிறது

அது மட்டுமல்லாது தமிழர் தாயகத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் உள்ள எம்மைச் சிறுபான்மையினர் ஆக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. முதலில் எங்கள் பிரதேசங்களை இராணுவ மயமாக்கிச் சிங்கள இராணுவத்தினரையும் அவர்களின் குடும்பங்களையும் குடியேற்ற அரசு முற்படுகிறது. இதனை நாம் பட்டவர்த்தனமாக எதிர்க்கின்றோம்.

எம் தாயகத்தில் நாம் சிறுபான்மையினராகும் அவல நிலை உள்ளது. அதே போன்று தமிழரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் சிதைக்க - பலவீனப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதற்காக எதிர்காலத்தில் இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என அனைவரையும் இணைத்து பரந்த அரசியல் கட்டமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் பலத்தை இழக்கச் செய்யத் திட்டமிட்டுள்ள அரசின் திட்டங்களை முறியடித்து, தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை, ஆட்சி உரிமையைத் தாயகத்தில் நிலைநாட்டும் முயற்சிகளில் தமிழ் பேசும் மக்கள் சக்தியை ஓரணியில் திரட்டுவோம்.

**கேள்வி:-** இன்று அரசியல் கட்சிகள் பலவும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுகின்றன. தவிர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டமைப்பின் பலத்தைக் குறைக்கப் பல சுயேச்சைக் குழுக்களையும் களமிறக்கி விட்டுள்ளாரே?, இந்த வரலாற்றுத் தவறுக்குக் கல்வியறிவுடைய, அரசின் கபடத்தனத்தை அறிந்த பலரும் துணை போயுள்ளனரே?

### அறிவற்ற மனிதர்களை எம்மக்கள் நிராகரிப்பர்

**பதில்:-** இந்தத் துரோகத்தை எமது மக்கள் நன்கறிந்துள்ளனர். எம்மக்கள் இந்த அறிவற்ற மனிதர்களை நிராகரிப்பார்கள். அரசின் கபடத்தனத்தை மக்கள் நன்கறிந்துள்ளனர். இதனால் அவர்கள் மீது வெறுப்புக் கொண்டுள்ளனர்.

இந்நடவடிக்கை தமிழ் மக்களின் அரசியல் பலத்தைச் சிதைக்க சிங்கள அரசியல் வாதிகளின் திட்டமிட்ட செயலே. இம்முறை தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக் குழுக்களையும் உதிரிக் கட்சிகளையும் மக்கள் நிராகரிப்பார்கள்.

**கேள்வி:-** யாழ்ப்பாணத்தில் இன்று சமூகப் பிரச்சினைகளும் வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதுடன் பொதுமக்கள் அச்சத்துடன் வாழும் சூழ்நிலை காணப்படுகிறதே...?

**பதில்:-** கடந்த காலங்களில் நிலவிய போர்ச் சூழலால் சட்டம், ஒழுங்கு என்பன சீர்குலைந்துள்ளன. இதனை அனைவரும் அறிவர்.

இன்றும் ஆயுதக்குழுக்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். அரசியல் ஆதாயத்தைப் பெறுவதற்காகச் சிலர் இச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் சட்டம், ஒழுங்கைக் கையில் எடுப்பதாலேயே இந்நிலைமை.

இவர்களுக்கு அரசின் ஆதரவு பூரணமாக உள்ளது. இதனாலேயே போர் முடிவடைந்துவிட்டது என்று அரசு அறிவித்தும் சட்டம், ஒழுங்கை முறையாகச் செயற்படுத்தவில்லை. இதனால் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை.

சட்டம், ஒழுங்கு சீராகச் செயற்படுமானால் இந்நாட்டில் வன்முறைகள் உருவாகாமல் தடுக்க முடியும். அண்மையில் சாவகச்சேரியில் பாடசாலை மாணவன் கொல்லப்பட்டமை, வவுனியாவில் இளைஞனொருவன் கொல்லப்பட்டமை போன்றவற்றில் அரசின் தரப்பில் உள்ளவர்களைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டுள்ளனர் என்பது பட்டவர்த்தனமாகத் தெளிவாகின்றது.

### அரசே பொறுப்புக் கூறவேண்டும்

இதனை மக்கள் அறிவர். தேர்தல் காலத்தில் மக்களை அச்சப்படுத்தி வாக்களிக்கும் வீதத்தை வீழ்த்தச் செய்யப்பட்டதாகவே இக்கொலைகளை நோக்க வேண்டியுள்ளது. கடத்தல், கப்பம் கோரல் என்பவை இன்றுவரை தொடர்வதுடன் அவை அதிகரித்தும் வருகின்றன. இதற்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும்.

**சந்திப்பு : தமிழரசன்**

**கேள்வி :-** தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வில் நீங்கள் யதார்த்த அரசியல் என்றும், ஈ.பி.டி.பி.யினர் இணக்கப்பாட்டு அரசியல் என்றும் கூறப்படுகிறது. ஆனால் பெரும்பாலானோர் மாற்று அரசியல் குறித்துச் சிந்திக்கின்றனரே?

**பதில் :-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தமிழ் மக்களுக்குத் தலைமை வகிக்கும் அனைத்துத் தகுதிகளும் உண்டு என்றே நம்புகின்றேன்.

தமிழ் மக்கள் ஒரு தனி இனம், தேசிய இனம், அவர்களுக்கென்று தொடர்ச்சியான நிலப்பரப்பு உள்ளது, அவர்களுக்குத் தாயகம் உண்டு, இந்த அடிப்படையில் தமிழ்த்தேசிய இன மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள். இவற்றை நாம் எமது தேர்தல்விஞ்ஞாபனத்தில் தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளோம்.

சுயநிர்ணய உரிமை உண்டு என்றால் அங்கே தேசியம், தாயகம், இன அடையாளம் இருக்கிறது என்பதே அர்த்தம். இந்தச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தான் வாழும் தாயகத்தில் தன்னைத்தானே ஆளும், தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட, முன்மொழிய உரிமை உள்ளது.

இலங்கை ஒரே இனத்தை, ஒரே நாட்டைக் கொண்டதாக இருக்கவில்லை. இங்கு சிங்கள இனம், தமிழ் இனம், முஸ்லிம்கள் என்போர் வாழ்கின்றனர். தமிழ்த் தேசிய இனம் தனக்குள்ள உரித்தின்படி சுயநிர்ணயத்தை அடைய உரிமை உள்ளது. இரு இனங்களும் தனித்தனியான தேசங்களில் ஆட்சி செய்துள்ளன.

(Vஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் - 2010



★முன்னைய இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் தெரிவு செய்யப்படாத போதும் தொடர்ந்தும் மக்களுக்காக குரல் கொடுத்தமையும் பொது சேவைகளில் ஈடுபட்டமையும்.

★ஓய்வு பெற்று பதினைந்து வருடத்தின் பின்பும் மாநகரசபை ஆணையாளராக மீள் நியமனம் பெற்றமையும், பல வருடங்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படாது போராடிக்கொண்டிருந்த சுமார் இருநூறு பேர் வரை நிரந்தர நியமனம் வழங்கியதுடன், மாநகரசபையின் நிதிநிலையைச் சீர்செய்து ஸ்திரப்படுத்தியமை.

சி.வீ.கே.சிவஞானம்
(முன்னாள் மாநகரசபை ஆணையாளர்)

X

எப்பொழுதும் மக்களுடன் இம்மண்ணில்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| X 11 | 12 | தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | | | | | | | |

(ஐ/566349)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2010.04.08

யாழ்.மாவட்டம் - முதன்மை வேட்பாளர்
**மாவை சேனாதிராசா**
எங்கள் முதல் தெரிவு



X 8

தந்தை செல்வா வழிவந்து,
சிங்களச்சிறை பல சென்று
தமிழினத்தின் விடுதலைக்குத் தன்னை
அர்ப்பணித்த ஒரே வேட்பாளன்
மாவை சேனாதிராசா அவர்களையே
ஆதரிப்போம்.

வல்வை திரு.திருமதி நகுலசிகாமணி
கனடா - வல்வை ஆவணக்காப்பகம்.

(ஐ/566383)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ்.மாவட்டம்



- போரிலே சிதைவடைந்த எம் டிறிபேக் கல்லூரிக் கட்டடங்களுக்கு நிதி உதவி மூலம் புத்துயிரூட்டிய எம் புத்திரனே!
- எம் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் தபால் முத்திரைத் தலை வெளியிட்டுப் பெருமை சேர்த்த எம் பெருமகனே!
- எம் மண்ணின் விடுதலைக்காய், வலி-வடக்கின் விடிவிற்காய் வழக்குரைக்கும் வழக்குரைஞனே!
- பாதுகாப்பு பயண அனுமதியிலிருந்து யாழ் தமிழரைப் பாதுகாத்த எம் பாதுகாவலனே!
- எம் கல்லூரிகளின் பழைய மாணவனாய், நல்லாசானாய்ப் பணியாற்றிப் பெருமை தந்த நற்பேரோனே!

அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B
சிரேஷ்ட சட்டத்தரணி, மனித உரிமை ஆர்வலர்,
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

X

இல. 1

என்றும் இவர், அர்ப்பணிப்புச் சேவைக்காய்
வாழ்த்தி வெற்றி பெற்று வீர நடை போட எங்கள்
வாழ்த்துக்களும் பேராதரவும் நல்குவோம் வாரீர்!

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவ நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் பின்னர் சர்வதேசம், இந்தியாவின்.....

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களிடம் இறைமை உள்ளது. ஒரு நாட்டின் அரசிடம் இறைமை இல்லை. அது மக்களிடமே உள்ளது. மக்கள் தமது இறைமையை அரசுக்கு வழங்குகிறார்களே தவிர அரசிடம் இல்லை. மக்கள் தம் சம்மதத்தை அரசுக்கு வழங்குவதாலேயே அரசு உருவாகிறது.

### பேரம்பேசும் சக்தியை மக்கள் தரவேண்டும்

தமிழ்த்தேசிய இனம் தனது உரிமைகளைப் பயன்படுத்தித் தம்மைத் தாமே ஆளவேண்டும். இந்த அடிப்படையில் நாம் இவற்றை அடைய மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பேரம்பேசும் சக்தியைத் தரவேண்டும்.

இன்று தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய நிலை உருவாகியுள்ளது. அதற்கான பாதையை வகுத்து இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவற்றின் அனுதாப ஆதரவைப் பெற்று இதனை அடைய முடியும்.

**கேள்வி :-** எது எவ்வாறு இருந்தபோதும் விடுதலைப் புலிகளின் அழிவையும், கூட்டமைப்பின் பிளவையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய மனநிலையில் இல்லை. அவர்களுக்கு என்ன பதில் கூற விரும்புகிறீர்கள்?

**பதில் :-** விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காகப் போர் மூலம் தீர்வு காணப் போராடினர். அதே நேரம் போர் நிறுத்தத்தில் ஈடுபட்டுச் சமாதான வழிகளில் அரசியல் தீர்வு ஒன்றை எட்டவும் முயன்றனர். இதற்காகச் சர்வதேச அளவிலே பல முயற்சிகளையும் எடுத்ததை மறக்க முடியாது.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக நடத்திய போராட்டம் சர்வதேச சமூகத்தில் இன்றும் தாக்கத்தை - பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டே உள்ளது. புலிகளின் போராட்டத்தாலேயே சர்வதேசத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்துப் பேசப்பட்டது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதற்குச் சர்வதேசத்தில் 51 நாடுகளால் போற்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கை ஆதாரமாகும்.

இன்று நாம் ஒஸ்லோ உடன்படிக்கை, திம்புக்கோட்பாடு என்பவற்றின் அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமை அடிப்படையிலும் - அரசியல் தீர்வைப் பெற முயற்சிக்கின்றோம். இதற்காக நாம் தேவைப்பட்டால் ஜனநாயக வழிகளில் சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுக்கவும் தயாராகவுள்ளோம். இதற்காக நாம் எம்மை முழுமையாக அர்ப்பணிக்கின்றோம்.

ஆகவே மாற்று அரசியல் என்பது தேவையில்லை. தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமது தலைமையாக ஏற்றுள்ளனர் - ஏற்பர் இதனை எதிர் வரும் தேர்தலில் மக்கள் நிரூபிப்பர்.

**கேள்வி :-** நீங்கள் ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தீர்வு எனக் கூறினாலும் தோற்றுப்போன விடயங்களுக்கு முக்கியத்துவமளிப்பது போல் தெரிகிறதே?

**பதில் :-** இதனை நாம் தோற்றுப்போன விடயமாகக் கொள்ளவில்லை.

வரலாற்று அடிப்படையிலான ஓர் இனத்தின் போராட்டத்துக்கு உரிய தீர்வொன்றை, தோல்வி மனப்பான்மையில் இருந்து அணுகுவது தவறு. அத்துடன் ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கு பரீட்சித்துப் பார்க்கவும் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

ஒஸ்லோ உடன்படிக்கை நிறைவேற்றப்படவில்லை - பரிசோதிக்கப்படவில்லை - பரீட்சித்துப்பார்க்க இடமிருக்கவில்லை. எனவே தோல்வி கண்டது என்று முடிவு செய்வது தவறானது. 51 நாடுகள் ஆதரித்த நிலையில் இவ் உடன்படிக்கைக்கு அரசியல் வடிவம் கொடுத்துத் தீர்வு ஏற்படாததாலேயே இன்று எம் மக்கள் மிகப்பெரிய பேரவலத்தைச் சந்தித்துள்ளனர் என்ற கருத்தும் உண்டு.

**கேள்வி :-** வன்னி மக்கள் இன்னமும் தங்களின் அவல வாழ்வில் இருந்து விடுபடாதவர்களாகவே உள்ளனர். இந்நிலையில் கூட்டமைப்பினர் தங்கள்மீது அக்கறை காட்டவில்லை என்றும் கூறப்படுகிறது. வடக்கு, கிழக்கில் 22 உறுப்பினர்களைக் கொண்டிருந்த நீங்கள் ஏன் அவர்களைச் சந்திக்க வில்லை?

**பதில் :-** அம்மக்களின் துன்ப, துயரங்களில் நாங்கள் நேரடியாகப் பங்குபற்றவில்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டியதே. அம்மக்கள் இப்பேரவலங்களைச் சந்திக்க, கொல்லப்பட எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றின் உள்ளேயும் வெளியேயும் போராட்டங்களை முன்னெடுத்தோம். சர்வதேச நாடுகளிற்கும், இந்தியாவிற்கும் சென்று போரை நிறுத்த உதவுமாறு அவர்களை வற்புறுத்தினோம்.

தமிழ் மக்கள் முகாம்களில் அகதிகளாக அடைக்கப்பட்டபோது அம்மக்களைப் பார்த்து அவர்களின் துன்பத்தில் பங்கெடுக்க முடியவில்லை. ஏனெனில் அரசு எம்மை முகாம்களுக்கு உள்ளே விடவில்லை. அரசிடமும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும் எத்தனையோ முறை வேண்டுகோள் விடுத்தும் எம்மை அனுமதிக்கவில்லை.

பல நாடுகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவத் தடை இருந்தது. அம்மக்களைச் சந்தித்து அவர்களுக்கு உதவும் வாய்ப்பு எமக்குக் கிட்டவில்லை. இது மிகவும் வேதனையான விடயம்.

நாம் இவ்விடயத்தில் அரசுடன் இணைந்து செயற்பட விரும்பினோம். இதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வருடம் செப்ரெம்பர் 7ஆம் திகதி சந்தித்துக் கேட்டபோதும் அதனை அரசு நிராகரித்துவிட்டது.

### நாம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கிறோம்

அரசு தனது அரசியல் ஆதாயங்களுக்காகவே இதனைத் திட்டமிட்டுச் செய்தது. மக்களைப் பார்க்கவும் அனுமதிக்கவில்லை. ஆனால் அம்மக்கள் அரசின் இந்தப் போக்குக்கு எதிராகக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தீர்ப்பு வழங்கினர். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களைச் சந்திக்காததற்காக அவர்களிடம் நாம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றோம்.

எதிர்காலத்தில் அமையவிருக்கும் அரசுடன் நாம் பேச்சு நடத்தி, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளினதும், புலம்பெயர் மக்களினதும் ஆதரவைப் பெற்று இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிப்போம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக பஸில் ராஜபக்ஷ தலைமையில் சிங்கள இராணுவத் தளபதிகள், சிங்கள அரச நிர்வாகிகளை உள்ளடக்கி ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தியதை நாம் ஏற்கவில்லை - எதிர்த்தோம்.

தேர்தலின் பின்னர் சர்வதேசம், இந்தியாவின் ஆதரவுடன் வட, கிழக்கில் இந்த இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த முயற்சிப்போம். இது 2004இல் ஏற்படுத்தத் தயாராகவிருந்த நிர்வாகத்தை விட பலமானதாக - அதிகாரம் உள்ளதாக இருக்கவேண்டும்.

**கேள்வி:-** இதுவரை காலமும் எதிர்ப்பு - மிதவாத அரசியலையே கூட்டமைப்பு நடத்தியது. ஆனால் அதனால் எதனையும் சாதிக்க முடியவில்லை. இனி, அதன் போக்குகளில் மாற்றம் ஏற்படுமா?

**பதில் :-** இல்லை. அரசால் கடைப்பிடிக்கப்படும் நிகழ்ச்சித்திட்ட விடயங்களுடன் நாம் இணைங்கிச் செயற்படும் நிலை ஏற்படாது.

இணக்க அரசியலால் நாம் எதனையும் பெறமுடியாது. அதனையே வரலாறும் கூறுகிறது. 1965களில் தந்தை செல்வா, டட்லி சேனநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எண்ணினார். ஆனால் அந்த ஒப்பந்தம் மூன்று ஆண்டுகள் கூட நீடிக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தால் எதுவும் பெறமுடியாத நிலையே காணப்பட்டது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நாம் இணக்கப்பாட்டு அரசியலால் பலவற்றை இழந்துள்ளோம். தமிழர் தாயகம் பிரிக்கப்பட்டது. பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகினர். எமது இனம் அழிக்கப்படுவதற்கு நாம் துணை போவதா?

தமிழ் மக்கள் சிங்களவரிடம் இருந்து இணக்கப்பாட்டின் மூலம் எதனையும் பெறமுடியாது என்பதே உண்மை.

ஓர் இனம், ஒரு மக்கள் கூட்டம் தம் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் அரசை ஆதரிப்பதா? அவர்களுடன் இணங்கினால் எம்மீதான அழிப்பை ஏற்பதுபோன்று உலகிற்குக் காண்பிக்கப்படும். *




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த மக்களின் பரிதாப நிலை

மேன்மை தங்கிய மஹிந்த ராஜபக்ஷ,
இலங்கை ஜனாதிபதி,
அலரி மாளிகை,
கொழும்பு.

05.7.2009

அன்புடையீர்!

இந் நாடு தனது கௌரவத்தையும், மதிப்பையும் பேணிக் காக்க வேண்டுமாயின் தங்களின் தலையீடு இக்கட்டத்தில் இன்றியமையாதது என்பதை தங்களை நம்ப வைக்கவே இக் கடிதத்தை நம்பிக்கை இழந்த நிலையில் எழுதுகின்றேன்.

இந்த நாட்டின் நாணயம் இடம்பெயர்ந்த மக்களில் சில வகையினரை உடனடியாக விடுவிக்கத் தாங்கள் மேற்கொள்ளும் முடிவிலும் ஏனையவர்களின் விடுதலை பற்றி மறுபரிசீலனை செய்வதிலுமே தங்கியுள்ளது. தாம் மிகவும் கட்டுப்பாடுடைய ஒரு திறந்த வெளி சிறைச்சாலையிலே அன்றி ஒரு நலன்புரி நிலையத்தில் அல்ல என்ற உணர்வுடனேயே நியாயமற்ற முறையில் வலுக் கட்டாயமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இம்மக்கள் உணர்கிறார்கள். ஆகவே போயா தினமாகிய நாளை மறுநாள் இது சம்பந்தமாக நீங்கள் விடுக்கும் அறிவித்தல் மிக முக்கியமானதும், முழு பௌத்த உலகும் நிம்மதிப் பெருமூச்சு விடும் சம்பவமும் ஆகும்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நடைபெறும் சில விடயங்கள் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்ற ஊகத்திலேயே நான் செயற்படுகின்றேன். நேரில் காண்பதே நம்பிக்கை தரும் என்பதால் 'மெனிக்பார்ம்' இலுள்ள முகாம்களைத் தவிர்ந்த வேறு முகாம்களுக்கு நீங்கள் என்றோ விஜயம் மேற்கொண்டிருக்க வேண்டும். தாங்கள் தலைவராக இருக்கும் ஒரு நாட்டில் இத்தகைய சம்பவங்கள் நடக்கவும் கூடாது. நடக்க விடவும் கூடாது. தாம் செய்யாத குற்றத்திற்காகத் துன்புறும் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுடைய உயிருடன் விளையாட நினைப்பவர்களின் கண்களைத் தங்களுடைய தீர்வு திறக்க வைக்கும். பெற்றோரால் தம் கைச்செலவுக்குக் கொடுக்கப்படும் பணத்தைச் சேமித்து கசாப்புக் கடைக்குக் கொண்டு செல்லப்பட்ட கால்நடைகளை மீட்டெடுக்கும் பிள்ளைகளைக் கொண்ட பெருமைமிக்க நாடு எங்கள் நாடு. புல்மோட்டையில் இடம்பெயர்ந்தோர் முகாமில் வாழும் ஒரு வயதுக் குழந்தையையும் அவருடைய பேர்த்தியாரையும் விடுவிக்க மறுக்கப்பட்ட சம்பவமே இக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதுவதற்கு என்னைத் தூண்டியது. வலது கால் துண்டிக்கப்பட்ட ஒரு முகாமில் உள்ள இளைஞன் ஒருவனின் குழந்தை அவனுடைய தாயின் அரவணைப்பில் இருக்கிறது. வலது கால் துண்டிக்கப்பட்டு இடது கால் முறிந்து பிணைக்கப்பட்ட நிலையில் வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியுள்ளவரே இக் குழந்தையின் தாயாவார். இது போன்ற சம்பவங்கள் உலகின் எப்பகுதியிலும் நடந்ததில்லை. தங்களுக்கு இச்சம்பவங்கள் பற்றித்தெரியும் என்பதை நான் கடுகளவும் நம்பவில்லை. இது போன்ற சம்பவங்கள் பல்வேறு முகாம்களில் வாழும் இந்த மூன்று லட்சம் மக்கள் மத்தியில் நிறையவே நடக்கின்றன.

வன்னியில் அவர்களாகத் துணிந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து தப்பி அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைவோர்களேயானால் அவர்களை நன்றாக உபசரித்து பாதுகாப்புக் கொடுப்பதாகத் தாங்கள் உத்தரவாதமளித்துள்ளீர்கள். அவ்வாறு தப்பிவரும் வேளையில் எத்தனை பேர் இறந்தார்கள், கொல்லப்பட்டார்கள் என்ற விவரம் உலகத்துக்கே தெரியும். துரதிஷ்டவசமாக அவர்கள் நன்றாகக் கவனிக்கப்படவில்லை. அதற்கு முரணாக அவர்களின் உடலும், உள்ளமும் அங்கே நடக்கின்ற சம்பவங்களால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றன. இவ்வாறான அவலங்கள் தம்மீது திணிக்கப்படும் என்று அவர்கள் நினைத்திருந்தால் இந்த அபாயகரமான நடவடிக்கையில் ஈடுபடாது இரு பகுதியினரிடையே நடந்த செல் தாக்குதலில் இறந்த தமது பல உற்றார், உறவினர்கள், அன்புக்குரியவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் மடிந்திருப்பர். ஒரு நாளைக்கு மட்டும் இம் முகாம்களில் கதவுகளைத் திறந்து வைப்பீர்களேயானால் முகாம்களில் ஒருவரேனும் மிஞ்சியிருக்கமாட்டார்கள் என்பதைத் தாங்கள் நேரில் காண்பீர்கள்.

இச் சம்பவங்கள் பற்றி தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருவது எனக்கு மிக மனவேதனையைத் தருகிறது. நீண்ட நாள்கள் பொறுத்திருந்து எதுவும் நடக்காததினால் என் உணர்வுகள் வரம்பை மீறிச் செயற்படுவதற்கு என்னை மன்னித்துக் கொள்ளவும். என் நிலையில் நீங்கள் இருந்தால் என்னுடைய உணர்வுகளை உங்களால் புரிந்து கொள்ள முடியும். எனது தொகுதி மக்கள் ஆயிரக்கணக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து முகாம்களுக்கு வந்துள்ளனர். அவர்களுடன் பல காலம் நான் வாழ்ந்தது பற்றியும் நீண்ட காலம் அவர்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தியதும் நீங்கள் அறிந்ததே. ஒருவர் தப்பாமல் ஒவ்வொருவரும் எனக்கு தெரிவிக்கின்ற கதைகள் மிகவும் சோகமானவை. பலர் மனைவியை இழந்தும், வேறு சிலர் கணவன், பிள்ளைகளை இழந்தும் உள்ளனர். அநேகர் தமது பெற்றோரை இழந்துள்ளனர். அப் பெற்றோர் யுத்த முனையில் போராளிகளாக அல்லாமல் அப்பாவி மக்களாகத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி உள்ளனர். அநேகர் பதுங்கு குழிகளுக்குள் உயிரோடு புதைக்கப்பட்டனர். அநேகர் பட்டினியாலும், குழந்தைகள் பல பாலின்றியும் மரணித்திருக்கிறார்கள். பலர் தமது உற்றார், உறவுகளை இன்றும் தேடி அலைகின்றனர்.



முகாம்களில் உள்ளவர்கள் தமது காணாமல்போன உறவினர்களையும், வெளிநாடுகளிலும், வெளியிலும் உள்ளவர்கள் தமது உறவினர்கள் தமக்கு வேண்டியவர்கள் பற்றிய தகவல்களைப் பெறக்கூடியதாகவும் முகாம்களில் உள்ளவர்களின் பெயர் விவரத்தை வெளியிடும்படி ஆரம்பத்திலேயே கேட்டிருந்தேன். முல்லைத்தீவு சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் என்ற அதிகாரி இறந்தவர்கள், காயமுற்றவர்கள் பற்றிய விவரத்தைத் திரட்டிக் கொண்டிருந்த வேளை அவரே செல் தாக்குதலில் பலியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்துடன் அப் பணியும் நின்றுவிட்டது. காணமால் போன ஒருவர் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்பதைக் கூட அறியமுடியாமல் உள்ளது. இனங்காணாத பலரின் உடல்கள் பழுதடைந்த நிலையில் ஒரே குழியில் புதைக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடப்பதுண்டு. நெருங்கிய உறவினர்கள் கூட அவர்களை அடக்கம் செய்யும் வேளையில் பிரசன்னமாகி இருக்க அனுமதிக்கப்படுவதில்லை.

ஓர் இறந்தவருக்கு கிரியைகள் செய்ய வேண்டிய கடமைப்பாடு உண்டு. அவற்றில் சில முக்கியமானதும் கண்டிப்பானதுமாக இருப்பது ஓர் ஆத்ம சாந்திக்கு ஏதுவானது என மக்கள் நம்புகிறார்கள். நான் கூறுவது முட்டாள்தனமாக இருக்கலாம். ஆனால் முறைப்படி சில "கிரியைகள் செய்யாதமை ஆத்மாக்களை அந்தரிக்க வைக்கும் என்று உலகம் பூராகவும் உள்ள மக்கள் நம்புகிறார்கள். இது சாதாரண விடயம் என்று நாம் தட்டிக் கழித்துவிட முடியாது. குறிப்பிட்ட சில காரணங்களுக்காக மக்கள் இதை வெளியில் கூறாவிட்டாலும் அவர்கள் மௌனமாக மனதுக்குள்ளேயே அழுகின்றனர். நான் இதை முழுக்க முழுக்க நம்புகின்றேன். நல்லதொரு சிறந்த பௌத்தர் என்ற வகையில் நீங்களும் இதில் நம்பிக்கை வைப்பீர்கள் என்பதை அறிவேன். நிச்சயமாக எவருக்கும் ஓர் எதிரிக்கு கூட இவ்வாறு நடப்பதை நாம் விரும்பமாட்டேன்.

நான் கேட்டவை, கேட்டுக்கொண்டு இருக்கின்ற பலவற்றில் சில கண்களைக் கலங்க வைக்கும் சம்பவங்களாகும். காயமுற்றோரும் கர்ப்பிணிகளுமே மிகக் கூடுதலாகத் துன்பத்தை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கு வேண்டிய உடனடித் தேவையோ முறையான கவனிப்போ கிடைப்பதில்லை. முறையான வைத்தியம் இன்றி பலர் இறந்துள்ளனர். அவர்கள் அனுபவிக்கும் சரீர வேதனையிலும் பார்க்க உள்ளத்தால் படும் வேதனைகள் அவர்களைப் பெருமளவு பாதிக்கின்றன. பல ஆயிரக் கணக்கான சம்பவங்கள் இருப்பினும் ஓரிரு சம்பவங்களை மட்டும்தான் இங்கே குறிப்பிடுகின்றேன்.

முதலாவது சம்பவம் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல புல்மோட்டையில் ஒரு காலை இழந்த 30வயதுடைய இளைஞன் ஒருவரைப் பற்றியதாகும். சம்பந்தப்பட்ட நால்வரில் எவரிடமிருந்தாவது இந் நாட்டுக்கு எத்தகைய அச்சுறுத்தல் இருக்க முடியும்? இவர்களை மாதக்கணக்கில் மூன்று வெவ்வேறு இடங்களில் வைத்திருக்க வேண்டிய அவசியம் என்ன?

இன்னோர் சம்பவத்தில் வன்னியில் ஒரு தலைமை ஆசிரியர் செல் தாக்குதலில் அதே இடத்தில் மரணமானதோடு மகள் படுகாயமுற்றார். யாழ்ப்பாணத்தில் அவர்களை பராமரிப்பதற்கோ, அல்லது அவர்களுக்காக அழுவதற்கோ நிறைய உறவினர் உள்ளனர். ஆனால் ஒரு உறவினரோ, நண்பரோ இல்லாத மன்னாரில் தாயார் பிள்ளையுடன் வைத்தியசாலையில் இருக்கின்றார். இக் குற்றத்திற்கு யார் பொறுப்பாளி? இதற்காக நான் தங்களைக் குற்றம் கூறவில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியிருந்தால் அவர்களைக் கவனிப்பதற்கும் இறந்த கணவருக்குரிய கடமைகளைச் செய்வதற்கும் நிறைய உறவினர்கள் இருக்கிறார்கள்.

தங்களை நான் 40 ஆண்டுகளாக நன்கறிவேன். இத்தகைய சம்பவங்களைத் தாங்கள் சகித்துக் கொள்ளக்கூடியவரல்ல. ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளுக்கு மேல் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து நித்திய பயபீதியுடன் வாழ்ந்த மக்களுக்கு இத்தகைய தொந்தரவு கொடுப்பது ஏற்கக்கூடிய விடயமல்ல. தங்கள் உயிரைப் பணயம் வைத்து படுகாயமடைந்த நிலையில் இறந்துபோன உறவினர்கள் அத்தனை பேரையும் விட்டுவிட்டு ஜனாதிபதி என்ற முறையில் தங்களிடம் ஆறுதல் கோரி வந்த மக்கள் இதுவரை பட்ட வேதனை போதாதா? நான் ஒரு போதும் தங்களுக்குத் தப்பான வழி காட்டியவனல்ல. நான் கூறும் ஆலோசனைகள் நல்லெண்ணத்தோடு ஒரு பௌத்த நாட்டின் நாணயத்தைக் காப்பாற்ற கொடுக்கப்படுகின்றவொன்றாகும். முன்பு ஒரு தடவை உலகம் எமது நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறது என்றும் நான் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் இந்நாட்டில் வெளியிலும் யாரோ எவராலோ பதியப்பட்டுக் கொண்டிருக்கிறது என எச்சரிக்கை விடுத்திருந்தேன். எதிர்காலத்தில் ஒரு நாள் நானும் நீங்களும் இந்த உலகத்தில் இல்லாத வேளை அல்லது சிலசமயம் நீங்கள் இருக்கின்ற காலத்திலே எழுந்து பார்க்கின்றபோது பல உண்மைகள் தெரியவந்து முழு உலகும் இலங்கையைக் குற்றவாளி எனத் தீர்மானிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக மேலே ஒருவர் வரவு - செலவுக் கணக்கு எழுதிக் கொண்டிருக்கின்றார்.

என்னை நீங்கள் நன்கு அறிவீர்கள். நான் சுயநலன் கருதி எவரையும் முகஸ்துதி செய்பவன் அல்ல. நான் எப்போதும் உள்ளதை உள்ளபடி கூறுபவன். நான் பெருமைமிக்க பௌத்த வரலாற்றைக் கொண்ட ஒரு நாட்டின் பிரஜையென எப்பொழுதும் வெளிப்படையாகக் கூறி வந்துள்ளேன். புத்த பகவான் விஜயம் மேற்கொண்ட மகியங்கனைக்கும், பெருமானின் புனித தந்தத்தைக் கொண்டுள்ள தலதாமாளிகைக்கும் எத்தனை தடவை சென்று தரிசித்து வந்தேன் என்ற எண்ணிக்கையைக் கூட மறந்துவிட்டேன். பல மகா நாயக்கர்களுடைய குறிப்பாக மிக வணக்கத்துக்குரிய அஸ்கிரிய மல்வத்த மகாநாயக்கர்களின் ஆசீர்வாதத்தைப் பல தடவைகள் பெற்றுள்ளேன். இன்று பெருமைமிக்க பௌத்த நாடாக இருந்த நாட்டின் எதிர்காலம் கேள்விக்குரியதாகி வரும் வேளையில் நான் ஏன் இந்த நாட்டில் பிறந்தேன் என்ற கேள்வி என்னுள்ளே எழுகின்றது.

நான் மிக வன்மையாகத் தங்களிடம் வேண்டுவது எதுவித தாமதமுமின்றி உடனடியாக இடம்பெயர்ந்தோர், முகாமில் காயமுற்றோர், முதியோர், நலிந்தவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகளுடன் கூடிய தாய்மார்கள், நடமாட முடியாதவர்கள், புத்தி சுயாதீனமற்றோர், மூளை வளர்ச்சி குன்றியோர், அநாதைகள், ஆதரவற்றோர் ஆகியோரை உடன் விடுவிக்கவும் அத்துடன் பல்வேறு முகாம்களில் உள்ள குடும்ப உறுப்பினர்களை ஒன்று சேர வைத்து மக்களைத் தத்தம் மாவட்டங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

நான் நாட்டையும், நாட்டில் வாழும் மக்களையும் நேசிக்கும் நாட்டுப்பற்றாளன் ஆவேன். தாங்கள் ஏற்கக்கூடிய வேறு சில நல்ல ஆலோசனைகளுடன் விரைவில் இன்னுமோர் கடிதத்தினை அனுப்பி வைப்பேன்.

தமிழ் மக்களைத் தாங்கள் வென்றெடுக்க வேண்டுமானால் இதனை முதலில் செய்து அதனைத் தொடர்ந்து மீள் குடியேற்றத்தைச் செய்ததன் பின்பே அபிவிருத்தியைப் பற்றி யோசியுங்கள்.

நன்றி

[signature]

வீ.ஆனந்தசங்கரி
தலைவர் - த.வி.கூ.

தமிழர் விடுதலைக் கூட்டணி
(சி/566335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணாகதி அரசியலும் சாணக்கிய.....

(Iஆம் பக்கத் தொடர்ச்சி)
பிரபாகரன் சந்திரிகாவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி நிச்சயிக்கப்பட்ட நிலையில், புலிகளின் தலைவர் பிரபாகரன் சந்திரிகாவுக்குச் சாதகமாக செப்ரெம்பர் மாதம் இந்தக் கடிதத்தை எழுதியிருந்தமை இங்கு நோக்கத்தக்கது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதம், அவரது கையொப்பத்துடன் சகல ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

இது மாத்திரம் அல்ல, 1994ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக ஏறத்தாழ 11கடிதங்களை சந்திரிகாவுக்கு புலிகளின் தலைவர் பிரபாகரன் அனுப்பி வைத்திருந்தார். அதேபோன்று, பிரபாகரன் 5 கடிதங்களை சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு அனுப்பி வைத்திருந்தார்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் 02.09.1994, 12.09.1994, 23.09.1994, 08.10.1994, 20.11.1994, 25.02.1995, 16.03.1995, 22.03.1995, 28.03.1995, 06.04.1995, 18.04.1995 போன்ற திகதிகளில் சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதங்களை எழுதியிருந்தார். 25.11.1994, 08.12.1994, 15.12.1994, 21.12.1994, 01.01.1995 திகதிகளில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அவர்களுக்கும் பிரபாகரன் கடிதங்களை எழுதியிருந்தார்.

இந்தக் கடிதப் பரிமாற்றங்கள் அனைத்திலும் தமிழீழத் தேசியத் தலைவரினால் எழுதப்பட்ட ஒரு கடிதத்தில் கூட, 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற புலிகளின் வழமையான அடிப்படை வாசகம் எழுதப்படவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது.

இதேபோன்று, அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை மேசைகளில் தமிழீழம் பற்றியோ, தமிழ் தேசியம் பற்றியோ, தன்னாட்சி பற்றியோ, சுயநிர்ணயம் பற்றியோ விடுதலைப் புலிகள் எந்தக் கோரிக்கையும் முன்வைக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் ஈழத் தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் சம்பந்தமாக பேசுவதையோ நிலைப்பாடு எடுப்பதையோ தவிர்த்து, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை மாத்திரமே முதன்மைப்படுத்தி காய்களை நகர்த்தியிருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனைத்தான் இராஜதந்திரம் என்று அழைப்பது.

இந்தச் சம்பவங்களுடன் ஒட்டிய மற்றொரு விடயத்தையும் இங்கு சுட்டிக் காண்பிக்க விரும்புகின்றேன்.

அந்தக் காலகட்டத்தில் சந்திரிகா என்கின்ற சிங்களத் தலைவரின் வெற்றிக்காக விடுதலைப் புலிகள் தமது கண் அசைவினைக் காண்பித்தார்கள்.

சந்திரிகா என்ற சிங்களத் தலைவியின் வெற்றி, அந்த வெற்றியின் பலனாக வரவிருந்த சமாதானப் பேச்சுவார்த்தை, அதனூடாக ஒரு கால அவகாசத்தைச் சம்பாதித்துக் கொண்டு, அந்தக் கால அவகாசத்தில் தம்மைச் சுதாகரித்துக்கொள்ளும் நோக்குடன் காய்களை நகர்த்தினார்கள் விடுதலைப் புலிகள்.

மிகுந்த நெருக்கடிக்குள் நின்றுகொண்டிருந்த ஈழத்தமிழர்களை மீட்டெடுக்கும் நோக்குடன் இந்த இராஜதந்திரத்தைச் செய்தார்கள் விடுதலைப் புலிகள்.

விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகா அரசாங்கத்திற்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் இலங்கை முழுவதும் சந்திரிகாவுக்கு மக்கள் தமது வாக்குகளை வழங்கி அமோக ஆதரவைத் தெரிவித்தார்கள்.

இந்தத் தேர்தலில், சந்திரிகாவுக்கு அதிக வாக்குகள் விழுந்த முதல் இரண்டு மாவட்டங்கள் எது தெரியுமா?

சந்திரிகாவுக்கு அதிக வாக்குகளை அளித்த முதலாவது மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டமே. யாழ்ப்பாண மக்களில் 96.35 வீதமான மக்கள் சந்திரிகாவுக்கு வாக்களித்திருந்தார்கள். சந்திரிகாவுக்கு அதிக வாக்குகளைச் செலுத்திய இரண்டாவது மாவட்டம் - மட்டக்களப்பு. மட்டக்களப்பில் 87.30 வீதமான மக்கள் சந்திரிகாவுக்கு வாக்களித்திருந்தார்கள்.

இதில் என்ன வேடிக்கை என்றால் சந்திரிகாவின் சொந்தமாவட்டமான கம்பஹா மாவட்டத்தில் அவர் பெற்ற வாக்குகள் 64.74 வீதம் மட்டும்தான்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் இன்னொரு அதிசயமும் நடைபெற்றது. இலங்கையின் சரித்திரத்திலேயே அதிக வீதமான வாக்குகள் ஒரு வேட்பாளருக்கு வழங்கப்பட்ட தேர்தல் தொகுதி மட்டக்களப்பின் பட்டிருப்புத் தேர்தல் தொகுதிதான்.

இந்தப் பட்டிருப்புத் தொகுதியில் சந்திரிகாவுக்கு 94.2 வீதமான வாக்குகள் விழுந்திருந்தன. சந்திரிகாவின் சொந்தத் தேர்தல் தொகுதியான அத்தனகல தேர்தல் தொகுதியில் கூட சந்திரிகா வெறும் 73.6 வீதமான வாக்குகளைத்தான் பெற்றிருந்தார். அந்த அளவிற்குத் தமிழ் மக்கள் சந்திரிகாவிற்கு தமது வாக்குகளை அள்ளி இறைத்திருந்தார்கள்.

இதில் இங்கு குறிப்பிடத்தக்க முக்கிய அம்சம் ஒன்று இருக்கின்றது.

இலங்கையிலேயே சந்திரிகாவுக்கு மாவட்ட மட்டத்தில் அதிக வாக்குகள் கிடைத்த யாழ்.மாவட்டமும், தொகுதி மட்டத்தில் சந்திரிகாவுக்கு அதிக வாக்குகள் கிடைத்த பட்டிருப்புத் தேர்தல் தொகுதியும், அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் பூரணகட்டுப்பாட்டின் கீழேயே இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழினம் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் மற்கொண்ட அந்த இராஜதந்திர நகர்வுகளின் பரிமாணங்கள் ஓரளவு விளங்கி இருக்கும் என்று நினைக்கின்றேன்.

இதேபோன்று, தமிழீழப் போராட்ட வரலாற்றில் பலசந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகள் தமிழீழத் தனியரசிற்கான கோரிக்கைகளை தாம் கைவிட்டுவிட்டமை போன்று நடித்தமையை அல்லது சற்று அடக்கி வாசித்திருந்தமையை, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

1980களின் பிற்பகுதியில் இந்தியப் படைகளுடனான சண்டைகளில் விடுதலைப் புலிகள் பலத்த நெருக்கடிகளைச் சந்தித்து அலம்பில் காடுகளுக்குள் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளையும் இந்தச் சந்தர்ப்பத்தில் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

இந்தியாவின் இராணுவ பலம் ஒரு பக்கம்.

அரசியல் ரீதியாக வடக்கு,கிழக்கு மாகாண சபை வரதராஜபெருமாளின் கைகளுக்குச் சென்றுவிட்டிருந்தது.

மக்கள் தொண்டர்படை என்ற பெயரில் ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொண்டு ஓர் ஆயுதப் படையை உருவாக்கி வடக்கு, கிழக்கில் நடமாடவிட்ட தொல்லை மற்றொரு பக்கம். தேசிய விடுதலைப் போராட்டத்தை மேற்கொண்டு நகர்த்த முடியாமல் போயிருந்த நெருக்கடியான நிலையில், சிறிலங்காவின் அரச தலைவர் பிரேமதாஸாவுடன் சமாதானம் பேசி, நிலமையைக் கையாள முன்வந்தார்கள் விடுதலைப் புலிகள்.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காவின் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்ற காலகட்டத்தில், விடுதலைப் புலிகள் தமிழீழத் தனியரசுக்கான தமிழ்மக்களின் நிலைப்பாட்டை சற்று அடக்கி வாசித்தனர் என திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் தாம் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் தெரிவித்திருக்கின்றார்.

பிரேமதாஸாவுடனான விடுதலைப் புலிகளின் முதலாவது சந்திப்பின் பொழுது பிரேமதாஸா ஒற்றை ஆட்சியின் கீழேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதை அன்ரன் பாலசிங்கம் அவர்களிடம் நேரடியாகத் தெரிவித்திருந்தார் எனவும் அதன் பின்னர் விடுதலைப் புலிகளுடன் பிரேமதாஸா அரசாங்கம் மேற்கொண்ட அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் அந்த விடயத்திலேயே சிறிலங்கா அரசாங்கம் நின்றதாகவும், புலிகள் தரப்பும் தனித்தமிழ் நாடு என்ற விடயத்தை கூட தவிர்த்து இராஜதந்திர நகர்வுகளைச் செய்ததாகவும் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலிலும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒற்றை ஆட்சியின் கீழேயே அமைய வேண்டும் என்றும், தமிழரின் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியனவற்றை பிரேமதாஸா வன்மையாக எதிர்த்தார் என்றும் திருமதி அடேல் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

பிரேமதாஸாவின் விரும்பத்தின் பெயரில் விடுதலைப் புலிகள் இயக்கம் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மாகாணசபைக்கான தேர்தலில் பங்கேற்கவும் ஒரு சந்தர்ப்பத்தில் சம்மதித்திருந்ததாகவும், பாலசிங்கம் மற்றும் திருமதி அடேல் பாலசிங்கம் போன்றவர்கள் தமது புத்தகங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதாவது சிறிலங்காவின் ஒன்றையாட்சியின் கீழ் தமிழீழத் தனியரசுக்கு மாற்றாக சிறிலங்கா அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு ஏற்றுக்கொண்ட விடுதலைப் புலிகள், தம்மை ஒரு அரசியல் கட்சியாக சிறிலங்காவின் தேர்தல் ஆணையகத்தில் பதிவும் செய்துகொண்டார்கள். விடுதலைப் புலிகளின் அந்த அரசியல் கட்சிக்குப் பெயர்: விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.

அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில் இருந்த "தமீழீழம்" என்ற பதத்தை நீங்கிவிட்டுதான் 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்று புலிகள் பெயர் சூட்டியிருந்தார்கள்.

சிறிலங்காவின் ஒற்றை ஆட்சி என்ற அரசமைப்பிற்கு உட்பட்டு விடுதலைப் புலிகள் அமைத்துக்கொண்ட அரசியல் கட்சியின் தலைவர்: அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையா.

அந்த நேரத்தில் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த யோகரட்ணம் யோகி விடுதலைப் புலிகளின் அந்த அசியல் கட்சியின் செயலதிபராக நியமிக்கப்பட்டார்.

சிறிலங்காவின் ஒற்றை ஆட்சியின் அஸ்திவாரமான அரசமைப்பை ஏற்றுக்கொண்டு, விடுதலைப் புலிகளின் அந்த அரசியல் கட்சி சிறிலங்காவின் தேர்தல் திணைக்களத்தில் தன்னை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்துகொண்டது.

தமிழீழத் தனியரசுக் கோட்பாட்டைத் தவிர்த்து, தனக்கென ஒரு யாப்பையும் அந்தக் கட்சி வரைந்துகொண்டது. இற்றை வரைக்கும் அந்தக் கட்சி சிறிலங்காவின் தேர்தல் திணைக்களத்தில் பதியப்பட்ட நிலையிலேயே இருக்கின்றது (இலங்கை தேர்தல் திணைக்களத்தில வெளியிடப்பட்ட கட்சிகளின் விவரப்பட்டியலில் 42ஆவது கட்சியாக இந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற கட்சி தற்சமயம் வரை இருப்பது குறிப்பிடத்தக்கது)

ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் நோக்கத்தோடு சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாஸாவினால் 1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி கூட்டப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டத்தில், விடுதலைப் புலிகளும் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டார்கள்.

விடுதலைப் புலிகளின் அந்த அரசியல் கட்சியின் முதலாவது மாநாடு மட்டக்களப்பு வாகரையில் 1990ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி முதல் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை நடைபெற்றது.

தமிழீழத் தனியரசைக் கைவிட்டது போன்று நடித்து அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இராஜதந்திர நகர்வின் மூலம், பல அனுகூலங்களை ஈழத் தமிழினம் தனதாக்கிக்கொண்டது.

இந்தியப்படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்து தமிழீழத்தை மீட்டுக்கொண்டது. பெருமளவு ஆயுதத் தளபாடங்களை எதிரியிடம் இருந்தே பெற்றுக்கொண்டது. இந்தியாவின் கைக்கூலிகளையும், துரோகக் கும்பல்களையும வடக்கு, கிழக்கில் இருந்து வெளயேற்றியது. இந்தியப்படைகளுடனான யுத்தம் காரணமாக பலவீனமடைந்து காணப்பட்ட தமது போராட்ட வலுவை மீளக் கட்டியெழுப்பும் கால அவகாசத்தை தேடிக்கொண்டது. இப்படி அந்த இராஜதந்திர விட்டுக்கொடுப்பு நாடகத்தின் மூலம் பல நன்மைகளை தமிழினம் அறுவடை செய்திருந்தது.

ஒரு பாரிய நெருக்கடிக்குள் இருந்து போராட்டத்தை மீட்டெடுக்கும் நோக்குடன் விடுதலைப் புலிக்ளின் தலைமை மேற்கொண்ட மற்றொரு இராஜதந்திர நகர்வாக இந்தச் சம்பவத்தை அடையாளப்படுத்தலாம்.

ஒரு நெருக்கடியில் நிற்கின்ற சமூகத்தை அந்த நெருக்கடிக்குள் இருந்து மீட்டெடுக்கும்படியான கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் அந்தச் சமூகத்தின் தலைமையினால் மேற்கொள்ளப்படும் நகர்வுகளை சரணாகதி அரசியல் என்று கூறக்கூடாது.

அதனை துரோகம் என்றும் கூறிவிட முடியாது.

எமது தலைமைகள் செய்யும் இராஜதந்திர நகர்வுகளுக்கு தொடர்ந்து துரோகப் பட்டங்களையே நாம் கட்டிக்கொண்டு இருப்போமேயானால், எமது எதிர்காலத்தில் நல்லவர்கள் யாருமே எம்மைத் தலைமைதாங்க முன்வராத நிலை எமது இனத்திற்கு ஏற்பட்டுவிடும்.

கட்டுரையாளருடன் தொடர்புகொள்ள
nirajdavid@bluewin.ch

# ஈழத் தமிழ் மக்களின்....

(IIஆம் பக்கத் தொடர்ச்சி)
**போது மக்களால் கைவிடப்பட்டுச் சென்ற மக்களின் அசையும் - அசையாச் சொத்துக்கள் அனைத்தும் அவர்கள் வசம் மீளவும் ஒப்படைக்கச் செய்யவேண்டும். இழப்புக்களுக் கான நஷ்ட ஈட்டை அவர்களுக்கு வழங்க அரசுக்கும் - சர்வதேச சமூகத்திற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.**

*** தமிழ் பேசும் மக்களின் வாழ்வியல், அரசியல் உரிமைகளைச் சமநீதியானதும், சர்வதேசத்தின் உத்தரவாதம் கொண்டதுமான முறையில் தீர்க்கமான - நிரந்தரமான- அரசமைப்பு மாற்றத்தின் மூலம் வென்றெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

*** சிறைகளிலும் - தடுப்பு முகாம்களிலும் விசாரணைகளின்றி நீண்டகாலமாகக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நீதியற்ற - மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், அவர்களை விடுதலை செய்விக்க, அவர்களின் குற்றம் நிரூபிக்கப்படாத பட்சத்தில் அவர்களுக்குரிய நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்கவும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.**

*** கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களையும், உறுப்பினர்களையும் மனிதாபிமான ரீதியில் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்து, பொது வாழ்வில் ஈடுபட அவர்களுக்கு வாய்ப்பு வழங்க அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.**

*** நமது கலை கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் சிதையாது பாதுகாக்கவும், நமது மரபுரிமை வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்படாது காக்கவும் உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.**

*** நமது மக்களின் அன்றாட வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் உயர்பாதுகாப்பு வலயங்கள், ஆயுதக்குழுக்கள் முற்றாக அகற்றப்பட அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.**

*** அரசியல் அராஜகவாதிகளுக்கு பாதுகாப்பளித்து அவர்களின் ஆட்கடத்தல், கப்பம் கேட்டல், கொலை செய்தல் நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலச் சட்டம் என்பன முற்றாக நீக்கப்பட வேண்டும்.**

*** மீனவர்கள், வர்த்தகர்கள், அன்றாட உழைப்பாளிகள் என அனைவருக்கும் போரின் போதான அவர்களின் தொழில் சார் இழப்புக்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவும், புதிதாக அவர்கள் தம்தொழில் முயற்சிகளை மேம்படுத்த நீண்டகாலக் கடன்களைக் குறைந்த வட்டியில் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.**

- மேற்குறிப்பிட்ட அனைத்தும் தேர்தலுக்கான ஆதரவைப் பெற முன்வைக்கும் வெறும் வாக்குறுதிகள் அல்ல.

- எம்முன்னே விரிந்துள்ள பணிகள் குறித்த விவரமே இவை.

- இவை யாவும் நிறைவேற்றப்பட வேண்டும்.

- அதற்கு மக்கள் யாவரும் இவற்றுக்கு உழைக்கக்கூடிய வலுவான - நம்பகமான - ஆளுமை மிக்கவர்களுக்கே ஆதரவை வழங்கி, அவர்கள் பின்னால் அணிதிரள வேண்டும். அதுவே இன்றைய காலத்தின் தேவையாகும்.

- சிந்தியுங்கள் - உறுதி எடுங்கள் - வாக்களியுங்கள்.- என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்



(95549)

அன்பான தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்களே!
இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இருந்து தமிழ்த்தேசியத்திற்கான நேர்மையான பணியினை மேற்கொண்டு வந்தேன். 2009 மே 18 ஆம் திகதிக்குப் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தான் உருவாக்கம் பெற்ற அடிப்படைக் கொள்கைகளில் இருந்து விலகி தமிழ்த்தேசியத்தினை பின்னடையச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடத்தொடங்கியது. அதனைக் கடுமையாக எதிர்த்து அதனை அடிப்படைக் கொள்கைகளின் வழியே பயணிக்கவைப்பதற்காக போராடினேன். அது முடியாமல் போகவே அதில் இருந்து வெளியேறி தமிழ்த் தேசியத்தினை பாதுகாக்கும் தேசியப்பற்றுமிக்கவர்களை ஒன்றிணைத்து தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் அதனைச் செயற்படுத்தி அதனை மக்கள் இயக்கமாக கட்டியெழுப்பும் முழுமுயற்சியில் ஈடுபட்டுவருகின்றேன். எனது பணிக்கு தங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன். தங்களை நேரில் சந்திக்கவேண்டும் என எண்ணியபோதும் உங்களில் சிலரை என்னால் நேரில் சந்திக்க முடியவில்லை. எனவேதான் இக்கடிதம் மூலமாக உங்களைச் சந்திக்கின்றேன். எமக்கு பேராதரவு தந்து தமிழ்த்தேசியத்தை பாதுகாக்க முன்வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

என்றும் உங்கள் சேவையில்
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

**2 X**

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | | X |
|---|---|---|



**ஏப்ரல் 8**

நீங்கள் சிந்தித்து உங்கள் வாக்குகளை
தவறாது அளிக்க வேண்டியநாள்!
தன்மானத் தமிழரின் எதிர்காலத்தை
அராஜகவாதிகளிடமிருந்து விடுவிக்க
உங்கள் வாக்குகளை பயன்படுத்த வேண்டியநாள்!
முள்ளிவாய்க்கால் வரை
தமிழ்மக்களை அழித்து விரட்டியோர்க்கு
பாடம் புகட்ட வேண்டிய நாள்...!

பதவிப் பவிசுக்காக...
பச்சோந்திகளாக மாறியோரை
பதவி நீக்கம் செய்ய முடிவெடுக்க வேண்டிய நாள்
கடத்தல் பேர்வழிகளை, கப்பம்கோருவோரை
கொலைகாரர்களை, கொள்கையற்றோரை
கொலுவிறக்கவேண்டியநாள்...

--இந்த நாள் உங்கள் வாக்குகளை
அர்த்த முள்ளதாக்கும் நாள்

அரசியலுக் கப்பாலும் மக்கள் சேவையாற்றுவோன்...
அதிகாரத்திற்கு அடிபணியாத மக்கள் தொண்டன்...
இளைய தலைமுறையினன்
இன்னொரு மகேஸ்வரன்

**துவாரகேஸ்வரனுக்கு வாக்களித்து**
**வரலாறு படைக்க வேண்டிய நாள்**
**நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும்**
**தமிழர் தலை நிமிர்ந்து வாழ வழிவகுக்கட்டும்**

| | X |
|---|---|

**1**

**மக்கள் துயர் துடைக்க மீண்டும் ஒரு தியாகராஜா மகேஸ்வரன்...**

# தியாகராஜா துவாரகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org